அறைவு 03 இயம் 49 June 20 - 26, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 24 விலை : 30.00







# தேசிய அரசியலில் 3வது அணி?



தேசிய அரசியலில் மூன்றாவது அணியொன்று உருவாகும் சாத்தியப்பாடுகள் அதிகரித்து வருகின்றது.

தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்திவரும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கும் சவால் விடத்தக்க வகையில் மூன்றாவது அணியொன்று உருவாகும் நிலை தோன்றியுள்ளது.

முன்னாள் சனாதிபதி மஹிந்த ராசபக்சவின் 21

## மூதூரில் காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு



காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அடுத்த கட்ட அமர்வுகள் எதிர்வரும் 27ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை மூதூரில் நடைபெறவுள்ளதாகத் அவ்வாணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிற் பெரும்பாலானவர்கள் இந்த அமர்வுகளை மீண்டும் புறக்கணிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

எவ்விதமான புத்தாக்கங்களும் இன்றி மீண்டும் அதே பாணியில் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளமை தமக்கு மிகவும் வேதனை அளிப்பதாகத் தெரிவித்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தாம் முன்வைத்த சீராக்கங்களைச் செயற்படுத்தாமலும் புத்தாக்க ஆலோசனைகள் எவற்றையும் காதில் வாங்கிக் கொள்ளாமலும் வருகை தரப் போகின்ற இக்குழு, வெறுமனே விசாரணையாளர்களில் எண்ணிக்கையை மட்டும் மேலும் இரண்டாக அதிகரித்துக் கொண்டு வருகின்றது என்றனர். இதனைத் தாம் 21

### -போதை வில்லைகள் பரவலாக உபயோகம்-

## தாயை வல்லுறவிற்குள்ளாக்க மகன் முயற்சி!!!

பாலையூற்றுப் பகுதியில் தாயொருவரை மகன் வன்புணர்வுக்குள்ளாக்க முயன்ற செய்தியை அடுத்து இரகசிய விசாரணைகளை ஆரம்பித்த போது அங்கு போதை தரும் வில்லைகள் விற்கப்படுவது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

வில்லையொன்று ரூபா. பத்திற்கு விற்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் இப் போதை வில்லைகளுக்கு அடிமைப் பட்டுள்ளது தெரியவந்துள்ளது. 21

## சம்பூர் காணிகள் விடுவிக்கப் படுவது மேலும் தாமதம்



சம்பூர் மக்களின் காணி தொடர்பான வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப் பட்டதைத் தொடர்ந்து காணிகளை விடுவிப்பது மேலும் தாமதமாகியுள்ளது.

அதே வேளை கேட்வே இண்டஸ்றீஸ் நிறுவனம் தொடர்ந்துள்ள வழக்கில் காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறே நீதிமன்றத்திடம் கோரப் பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. 21



## சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேசத் தினம்

சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேசத் தினம் எதிர்வரும் 26ம் திகதி உலகலாவிய ரீதியில் நினைவு கூறப்படவிருப்பதாகத் தெரிவித்த மனித உரிமை மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலை-யத்தின் பணிப்பாளர் வண. யோகேஸ்வரன் அடிகளார் 27ம்திகதி திருகோணமலையில் 21

## மாணவர்கள் கொள்ளை முயற்சி!!!

அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் கணணிகளைத் திருடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கொள்ளைச் சந்தேக நபர்களாக இரண்டு மாணவர்கள் கைதாகிப் பிணையில் விடப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் விகாரை வீதியில் அமைந்துள்ள அலுவலகத்-திலேயே இக் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி பின்னிரவு நேரத்தில் கூரையூடாக அலுவலகத்திற்குள் புகுந்த இருவர் அலுவலகக் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
075 4252042
malaimurasu@hotmail.com

# புதிய அரசும் சம்பூர் மீளமர்வும்....!

சம்பூரின் காணிகள் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் ஜூன் 10ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

சம்பூர் காணிகளை விடுவித்து மக்களிடம் கையளிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேலும் சில நாட்களுக்கு இவ்வொத்தி வைப்பானது பின்தள்ளியுள்ளது.

நல்லாட்சியென்ற பெயரில் தமிழரின் வாக்குகளையும் தனதாக்கிக்கொண்டு வெற்றிப் -பீடம் ஏறிய தற்போதைய அரசானது தேர்தல் காலத்தில் தமிழருக்கு வழங்கிய வாக்குறுதி-களைச் செயற்படுத்த தவறிவிட்டது.

புதிய ஆட்சியின் காலம் ஐந்து மாதங்களைக் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் சில பிரச்சனைகளையாவது தீர்க்க அரசு முன்வராமலிருப்பது தெளிவாக வெளித்தெரியத் தொடங்கியுள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள இனிவரும் காலத்தில் அரசு நிச்சயமாகச் சிங்களப் பேரினவாதத்திற்குத் தீனி போடும் நடவடிக்கை -களையே முன்னெடுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஏனெனில் இனித் தமிழர்களின் வாக்குகள் புதிய அரசிற்குக் கிடைக்கப் போவதில்லை. அதனால் அதி கூடிய நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளவே தற்போதைய அரசும் முயற்சிக்கும். அதற்கு அவர்கள் சிங்களப் பேரினவாதப் பசிக்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாததாகிவிடும்.

அதனடிப்படையில் சம்பூர் மீளமர்வைச் சட்டத்தின் கைகளில் ஒப்படைத்து விட்டு புதிய அரசும் அதன் பங்காளியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த்தலைமையும் கடந்து செல்லும் நாட்களை கணக்கிடத் தொடங்கிவிட்டன.

சம்பூர்க் காணிகளை பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக பெற்றுக்கொண்டுள்ள கம்பனி நீதிமன்றத்தில் தனது பக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள சட்டரீதியான பல காரணங்களை முன்வைத்துள்ளது என்பதை அறியக்கிடைக்கின்றது.

சம்பூர்க்காணிகளை மக்களிடம் இருந்து எடுத்து தமக்கு வழங்கிய வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இரண்டு விடயங்கள் நிகழ்ந்துள்ளதாக கம்பனி நிறுவ முயற்சிக்கலாம்.

முதலாவதாக காணிகளை அபிவிருத்திக்காகப் பயன்படுத்த அனுமதியளித்த அவ்வாத்தமானி அறிவிப்பானது அக்காணிகளின் மீது மக்களுக்கு இருந்த உரிமையை நீக்கிவிட்டது, இவ்வாறு உரிமையை அரசு நீக்கியவுடன் அக்காணிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளாகி விட்டன என்பதாகும். இந்த வாதத்தின் ஊடாக இடைத்தங்கல் முகாம்களில் ஒரு தசாப்தத்தைக் கழித்துள்ள மக்களின் காணி உரிமையைக் கேள்விக்குறியாக்குவதுடன் அக்-காணிகள் தொடாபாக அவர்கள் போராடுகின்ற உரிமையை மறுதலிக்கும் நிலையும் உருவாகிவிடும் போலுள்ளது.

இரண்டாவதாக அரசாங்கத்திற்கு உரிமையான இக்காணிகளை அபிவிருத்தி நோக்கங்களுக்காகத் தமக்கு கையளித்ததில் எவ்வித தவறுகளும் இல்லை என்ற நிறுவலாகும்.

இதனடிப்படையில் இரண்டாவது வர்த்தமானி அறிவித்தலை அதாவது கம்பனியிடம் கையளிக்கப்பட்ட காணிகளை அரசு மீளப் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலை சட்டப்படி செல்லாது என்பதை அறிவிக்க வேண்டும் அதாவது இரண்டாவது அறிவிப்பானது சட்டத்தின் கண் வெற்றானது என அறிவிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் கள நிலவரங்களின் படி முன்னாள் நனாதிபதிக்கும் இன்னாள் சனாதிபதிக்கும் இடையே இணக்கப்பாடுகளை உருவாக்கி சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை பலம் மிக்க அரசியல்வாதிகள் முன்னெடுத்துள்ளனர்.

அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்படுமாயின் சம்பூர்க் காணிகள் தொடர்பான அணுகுமுறையில் அரச மட்டத்தில் எவ்வித மாற்றங்கள் ஏற்படப்போகின்றது என்பது கரந்துறையும் ஆபத்தாக உணரப்படுகின்றது.

வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டதுடன் தமது பணி முடிந்து விட்டதாகவும், மக்களுக்குக் காணிகளைக் கையளிக்கும் தமது வாக்குறுதி நிறைவேறி விட்டது என்பதையும் அரசு நிரூபிக்க முயற்சிக்கும் அதேவேளை அவ்வர்த்தமானி மீதான தற்காலிகத் தடையுத்தரவை நீக்கியதன் பின்னரும் அக்காணிகளுக்குள் மக்கள் செல்லச் சட்டப்படியான அங்கீகாரம் இல்லை என்பதைத் தெரிந்திருந்தும் அதனை வெளிப்படுத்தத் தமிழ்த் தலைமை தவறிவிட்டது.

தமிழ்த் தலைமை உறுதியான நடவடிக்கையொன்றை முன்னெடுத்தல் இன்று முக்கியமானதாக உள்ளது. இதய பூர்வமாக அரசுடன் இணைந்துள்ள தமிழ்த் தலைமையானது சம்பூர்க் காணிகளை விடுவிப்பதற்கு காத்திரமான அரசியல் நகர்வொன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற அழுத்தத்தைத் தமிழ் மக்கள் ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது என்பதே உண்மை!

## உள்ளூராட்சி நிர்வாகிகளுடன் அவசரக் கூட்டம்

கிழக்கின் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகிகளுடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் அவசரக் கூட்டமொன்றை நடாத்தியுள்ளார்.

முதலமைசசரின் செயலாளர் யு.எல் அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் நிகழகாலச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டுள்ளது.



உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் சுமத்திவரும் குறைகள் அதி-கரித்து வரும் நிலையில் மக்களின் குறை-களைக் கேட்ட-றிந்து உரிய மன்றங்கள் தாம் எடுக்கக் கூடி நடவடிக் கைகளை முன்னெடுக்க-வேண்டும் என்றும் நடவடி-க்கை எடுக்க முடியாதவைகள் தொடர்பான விபரங்கள் மாகாண சபைக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் முதலமைச்சர் அஹமட் வலியுறுத்தி உள்ளார். (ரபாய்தீன்)

## விமலவீர திசநாயக்க எதிர்க்கட்சித் தலைவர்

கிழக்கு மாகாண சபையின் எதிர்கட்சி தலைவராக முன்னால் கிழக்கு மாகணசபையின் கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கடந்த செவ்வாய்க்கிழமை அன்று தவிசாளர் சந்திரதாஸ கலபதி அவர்களால் நியமிக்கப்பட்டார்.

கடந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆட்சியில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு அங்கத்துவம் பெற்றவுடன் கடந்த மூன்றுமாத காலமாக இருந்து வந்த கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியின் இழுபறி நிலை இந்நியமனத்துடன் தீர்விற்கு வந்துள்ளது.

ஏற்கனவே எதிர்கட்சி வரிசையின் பத்து உறுப்பினர்களால் எதிர்க்கட்சித் தலைவர் நியமனத்திற்கு முன்மொழிவொன்று வைக்கப்பட்டிருந்தது. எனினும் இம்மொழிவைச் சட்டரீதியாக ஏற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தடைகளாலேயே நிமனம் இழுபறி நிலைக்குள்ளானது.

இந்நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் எண்மர் வழங்கிய சத்தியக்கடதாசி மூலம் கிழக்கு மாகண சபை உறுப்பினர் விமலவீர திசாநாயக்க எதிர் கட்சி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(வத்சலன்)

## பாட்டாளிபுரத்தில் இலவச மருத்துவ முகாம்

திருகோணமலை பிரம்மகுமாரிகள் இராஜயோகா நிலையத்தினரால் ஆனி மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை 2015ல் இலவச மருத்துவ முகாம் திருகோணமலை பாட்டாளி புரம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் நடாத்தப்பட்டது.

இந்த முகாமில் ஏழு வைத்தியர் உள்ளடங்கலாக இருபது மருத்துவப் பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். ஐநூற்றுக்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

திரு. துரைரட்ணசிங்கம் அவர்களும் இங்கு வருகை தந்திருந்ததுடன் கிழக்கு மாகாண பிராந்திய சுகாதார அத்தியட்சகரின் அனுசரனையுடனும் மூதூர் வைத்தியசாலை சுகாதார அத்தியட்சகரின் உதவியுடனும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.





## "2015ம் ஆண்டு நிதிக்கு நடந்தது என்ன?"

-சந்திரகாந்தன்-

## "சந்திரகாந்தன் கடுகைக் கால்பந்தாடப் பார்க்கின்றார்"

-துரைராஜசிங்கம்-

கிழக்கு மாகாண சபை ஜூன் மாத சபை அமர்வு செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சபைத் தவிசாளர் சந்திரதாச கலபதி தலைமையில் திருகோணமலை பேரவை சபை மண்டபத்தில் ஆரம்பமானது.

மாகாண சபை உறுப்பினர் ஆர்.துரைரட்ணம் முன்வைத்தை பிரேரணை தொடர்பில் எதிர்கட்சி உறுப்பினர் சந்திரகாந்தன் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் கொங்கிரசும் இணைந்து நடத்துகின்ற இவ்வாட்சியில் வெளிபடத்தன்மை இருக்கவேண்டும், 2015ஆம் ஆண்டுக்கான நிதிக்கு என்ன நடந்தது என்பது தெளிவு படுத்தப்படவேண்டும். இதனை ஆராய்வதற்கு உடனடியாக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கிழக்கில் இன்று நல்லாட்சி மலர்ந்திருக்கிறது. இந்நல்லாட்சியில் என்ன நடைபெறுகிறது, என்ன விடையங்கள் நடைபெறவிருக்கிறது என்பன தெளிவாக அறிவிக்கப்பட்டே அனைத்து செயல்களும் இடம்பெறும். தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் உரையாற்றுகையில் முன்னால் முதலமைச்சர் சந்திரகாந்தன் கடுகை கால்பந்தாட்டம் ஆடுவதற்கு முயற்சி செய்கிறார். 2015 நிதி ஒதுக்கீட்டில் சமநிலை பேணப்படுகிறது .தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் நாகரிகம் இருக்கிறது. நாம் நேர்மையான அரசியல் செய்கிறோம் என்றார். ஏ .எல் .தவம் பேசும் போது கிழக்கு மாகாணத்திற்கு 1200 மில்லியன் ஒதுக்கப்பட்டு 80 மில்யன் தான் கிடைத்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடியுள்ளபோதும் மாகாணத்தில் நல்லாட்சி நடைபெறுகின்றது என்றார்.

(ரபாய்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## "மண்ணெண்ணெய் விளக்கு கவிழ்ந்ததால் நேர்ந்த விபரீதம்"

ஏறாவூர் 5ஆம் குறிச்சியிலுள்ள வீடொன்றில் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு கவிழ்ந்து தீப்பற்றியதால், அவ்வீட்டிலிருந்த பாலேஸ்வரன் ரசிகலா (வயது 35) என்பவர் எரிகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இவரது வீட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு திடீரென்று கவிழ்ந்ததால், இவரது ஆடையில் தீப்பற்றிக்கொண்டதில் இவர் எரிகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## "தமிழர்கள் ஆயுத யுத்தம் தவிர்த்து அறிவு யுத்தம் செய்கின்றனர்"

வடபகுதியிலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் இப்பொழுது உலகம் பூராகவும் அறிவு யுத்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிஸாம் தெரிவித்தார். தொடர்ந்து அவர், "யுத்தத்தின் விளைவாக வடபகுதியிலிருந்து தமிழர்களும் முஸ்லிம்களும் வெளியேறினர். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் நாட்டின் நாலாதிசைகளிலும் அகதிகளாக தஞ்சமடைந்தார்கள். அதேவேளை, தமிழ் மக்கள் நாடு கடந்து அகதிகளாகி அகதி அந்தஸ்தோடு உலகம் முழுவதும் வியாபித்தார்கள். அவர்கள் வெறுங்கையோடு நாடு கடந்து சென்றபோதும் இன்று மிகச் சிறந்த புத்திஜீவிகளாக மாறியிருக்கின்றார்கள். இப்பொழுது அவர்கள் ஆயுத யுத்தம் செய்பவர்களாக அன்றி அறிவு யுத்தம் செய்யும் விற்பன்னர்களாக இந்த நாட்டுக்கு மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் முஸ்லிம் சமுதாயம் ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் கல்விப் புரட்சியை ஏற்படுத்துகின்ற ஒரு சமூகமாக மாற வேண்டும்" என்றார்.

## பாவனைக்குதவாத பொருட்கள் அழிப்பு

மனித பாவனைக்குதவாத பெருந்தொகையான பழங்களை காத்தான்குடி பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மீட்டுள்ளனர். காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள பழக்கடைகளிலே இச்சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது அழுகிய மாம்பழங்கள், தோடம்பழங்கள் என 25கிலோ பழங்கள் மற்றும் முறையாக களஞ்சியப்படுத்தப்படாத குளிர்பானங்கள் 40 போத்தல்கள் என்பவையும் மீட்கப்பட்டுள்ளன.

இதனை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதை விற்பனை செய்த வியாபாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.றபீக் தெரிவித்தார்.

## உதவித் தேர்தல் ஆணையாளர் பதவி ஏற்பு

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரி சு.சசீலன் அவர்கள் கடந்த திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் 2012 இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்டதுடன் இதற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## அடித்தவர் தலைமறைவு

மட்டக்களப்பு பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 17.06.2015 அன்று காலை 9.00 மணியளவில் வீதியை கடக்க முற்பட்ட வேளையில் மோட்டார் சைக்களில் மோதுண்டு ஒருவர் விபத்துக்குள்ளானதாக தெரியவருகின்றது.

இவ்விபத்தில் வந்தாறுமூலை பகுதியை சேர்ந்த 28 வயது பாக்கியநாதன் என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் வீதியை கடக்க முற்பட்ட வேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கள் மோதியதன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றதாக காவல்துறையினர் தெரிக்கின்றனர்,

அதேவளை விபத்தை ஏற்படுத்தியவர் மோட்டார் சைக்களுடன் தலைமறை-வாகி உள்ளதாக தெரியவருகின்றது.



## கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி



ஜைகா நிறுவனத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவினால் அரச முன்னிலை கள உத்தியோகத்தர்களுக்கான சமூக அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய பயிற்சிநெறி, சத்துருக்கொண்டான் சர்வோதய பிராந்திய பயிற்சி நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் கவிதா உதயகுமார் தெரிவித்தார்.

இப்பயிற்சிநெறியில் வாகரை, கிரான், வவுணதீவு மற்றும் வெல்லாவெளி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 60 வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

## வாழ்வாதாரத்தை பெற்றுத் தரக்கோரி ஆர்ப்பாட்டம்

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முதலைக்குடா மற்றும் மகிழடித்தீவு பகுதியில் இறால்வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதனால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துமாறு கோரியும் கடந்த புதன்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டமும் பேரணியும் இடம்பெற்றது. ட்டிப்பளை பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுத்தது.

இதில் பெருமளவான பொதுமக்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா, சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் விவசாயிகளும் கால்நடை வளர்ப்பாளர்களும் அதிகமாகவுள்ள இப்பகுதிகளில் கால்நடைகளை வளர்க்கமுடியாத நிலையேற்பட்டுள்ளதுடன் தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.





## இஸ்லாமிய வரலாற்று நூதனசாலை பார்வையிடல்

காத்தான்குடியிலுள்ள இஸ்லாமிய வரலாற்று நூதனசாலையினை அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் பத்வாக் குழு உலமாக்கள் குழுவினர், கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர். இந்த நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள உருவச்சிலைகள் உருவ பொம்மைகள் குறித்து எழுந்துள்ள இஸ்லாமிய மார்க்க ரீதியான சர்ச்சையினை தீர்த்து வைக்குமாறும் இது தொடர்பில் மார்க்கத்தீர்ப்பினை வழங்குமாறும் அகில இலங்கை ஜம் இயத்துல் உலமா சபையிடம் எழுத்து மூலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இக்குழுவினர் அங்கு விஜயம் செய்து நூதனசாலையினையும் அங்கிருக்கும் உருவச்சிலைகளையும் பார்வையிட்டனர்.



## இரு விபத்து – ஒரு மரணம்

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு முன்பாக சைக்கிளும் லொறியும் மோதியதால், பொன்னம்பலம் நடராஜா (65) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். நிலையிலேயே மரணமடைந்துள்ள-தாகவும், லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டதுடன் லொறியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவிக்கின்றது.

சம்மாந்துறையில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதால், காயமடைந்த சார்ஜன்ட் உட்பட இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை காவல்துறையினர் தெரிவித்தனர். இந்த விபத்துக்கள் தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

## "ஸ்ரீ.சு கட்சியினர் என்னுடனே இருக்கின்றனர்"



கண்டியில் நேற்று மதவழிபாடுகளில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பின்னர் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய போது உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தம்முடனே இருப்பதாக குறிப்பிட்டார். கட்சியை விட்டுச் சென்ற தலைவர் என்று தம்மை மாத்திரமே குறைகூறமுடியாது. கட்சியுடன் இணைந்த நாள் முதலிலிருந்து அதே கட்சியிலேயே இருந்து வருகிறேன் எனவும் எனது வயதை கவனத்தில் கொண்டு தம்மை பாட்டன் என சிலர் கூறுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்

## உண்மைக்குப் புறம்பான கூற்றுக்கள்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ராஜித்த சேனாரத்ன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு பிரதமர் வேட்பாளர் பதவி, தேசிய பட்டியல் உறுப்பினரோ அல்லது வேட்பு மனுவோ வழங்கப்படாது என ஜனாதிபதி அறிவித்ததாக தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், அமைச்சரின் இந்த கருத்து உண்மைக்கு புறம்பானது என அந்த குழுவின் உறுப்பினரான சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த இன்று காலை தெரிவித்திருந்தார்.

தம்மை ராஜித சேனாரத்ன சந்திக்கவில்லை என நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி தெரிவித்ததாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஊடக பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

## கட்டுநாயக்காவில் உணவு விசமடைந்தது

உணவு விசமடைந்ததன் காரணமாக கட்டுநாயக்க பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் 144 ஊழியர்கள் திடீர் சுகவீனமுற்றுள்ளனர். திடீர் சுகவீனமுற்றவர்களில் 61 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருவதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

காலை உணவு உட்கொண்டதன் பின்னர் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் சுகவீனமுற்றுள்ளனர். சுகவீனமுற்ற 144 பேரும் இராகம, மினுவங்கொட மற்றும் சீதுவ ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதித்ததன் பின்னர் சிலர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

## பெண் பிரதிநிதிகளை வளர்க்க வேண்டும்




அரசியலில் பெண் பிரதிநிதித்துவங்களை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு யோசனை முன்வைக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது. நாட்டின் அரசியலில் பெண் பிரதிநிதித்துவங்கள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக ஆணைக்குழு-வின் சிரேஷ்ட ஆலோசகரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.


ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டின் பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரசியலில் செயற்பாடுகளில் பெண் பிரதிநிதித்துவங்கள் மிகக் குறைவாகக் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நால்வரும் பரிதாப உயிரிழப்பு

ரம்புக்கனை பரப்பே பகுதியில் கழிவகற்றல் குழிக்குள் வீழ்ந்து, நால்வர் உயிரிழந்துள்ளனர். கழிவகற்றல் குழிக்குள் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் வீழ்ந்த பெண்ணொருவரை காப்பாற்றுவதற்காக ஏனைய மூவரும் முயற்சித்த சந்தர்ப்பத்தில் வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளதாக இதனால் நால்வரும் உயிரிழந்ததாக காவல்துறையினர் குறிப்பிட்டனர்.



## நல்லெண்ணெத்தை மேம்படுத்த நிதியுதவி



இலங்கையில் நல்லெண்ணத்தை மேம்படுத்தவும் பொறுப்புக்கூறல் மற்றும் தெளிவுத்தன்மையை முன்னேற்றவும் அமெரிக்கா நிதியுதவியை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களத்தின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள், தொழிலாளர் பேரவை, 750,000 டொலர்களை இந்த திட்டத்துக்காக ஒதுக்கியுள்ளது. இனங்கள் மற்றும் சமயங்களுக்கு இடையில் நல்லெண்ணத்தை உருவாக்குதல். சமாதானத்தை ஊக்குவித்தல் வடக்கு கிழக்கு தெற்குக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தல் என்பவை இந்த திட்டத்தின் கீழ் இடம்பெறவுள்ளன.

இதேவேளை ஊழல்களை ஒழிப்பதற்காக இராஜாங்க திணைக்களம் பிறிதாக 1,000,000 டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்தநிலையில் குறித்த நிதியுதவியை பெற்று திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## தடை உத்தரவையும் மீறி தொடரும் விகாரை கட்டும் பணி

தடையுத்தரவை மீறி கொக்கிளாயில் விகாரை அமைக்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொது மக்களின் தகவலை அடுத்து அங்கு சென்ற வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் இன்று மாலை இதை நேரில் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த வாரம், காணிப் பிணக்குகளை தீர்க்கும் பொருட்டு முல்லைத்தீவில் இடம்பெற்ற காணி அமைச்சின் உயர் அதிகாரிகளின் நடமாடும் சேவையில் மேற்படி விகாரை அமைப்பதற்கான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், தொடர்ந்தும் தமிழ்மக்களுக்கான காணியில் இவ்வாறு அத்துமீறுவது அப்பட்டமான சட்டவிரோத செயல் என்றும் கண்டித்துள்ளார்.




## ஒலிம்பிக் கொண்டாட்டம் இம்முறை மன்னாரில்

சர்வதேச ஒலிம்பிக் தின கொண்டாட்டங்களை இந்த வருடம் மன்னாரில் கோலாகலமாக நடத்த இலங்கை ஒலிம்பிக் குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதி மன்னாரில் நடத்தப்படவுள்ள இந்த நிகழ்வுகளுக்கு இலத்திரனியல் ஊடக அனுசரணையை ஸ்போர்ட்ஸ் பெஸ்ட் வழங்கவுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் பேரவை 1894 ஆம் ஆண்டில் ஜுன் 23 ஆம் திகதியை சர்வதேச ஒலிம்பிக் தினமாக பிரகடனப்படுத்தியது.

அதற்கமைய அன்று முதல் வருடாந்தம் ஜுன் 23 ஆம் திகதி சர்வதேச ஒலிம்பிக் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த வருடமும் சர்வதேச ஒலிம்பிக் தின கொண்டாட்டங்களை சிறப்பாக நடத்தவுள்ளதாக கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஒலிம்பிக் குழு தெரிவித்தது.

விளையாட்டின் மூலம் நல்லிணக்கம் என்பதே இவ்வருட தொனிப்பொருளாகும்.

OLYMPIC DAY

## ஐ.தே.க தனித்துப் போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளது. சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு ஒன்றை கொழும்பில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் நாட்களில் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என தான் நம்புவதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## கேரள வாலிபர் சுட்டுக்கொலை

கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஜோன் ராஜஸ்தான் மாநிலத்தில் விவசாயத்துறை அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார். இவரது மகன் அஜெஸ் (27 வயது) தென்னாபிரிக்காவில் ஒரு உணவகத்தில் பணி புரிந்து வருகின்ற இவர் 15ம் திகதி உணவகத்தில் பணியை முடித்து திரும்பிய வேளையிலே கொள்ளைக்காரர்களால் சுட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக அதே நிறுவத்திலிருந்து தகவல்கள் பெற்றோருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இவரின் உடலை இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர் மத்திய மாநில அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சர்வதேச யோகா பயிற்சி

பிரதமர் நரேந்திர மோடியின் பெருமுயற்சியின் பலனாக முதலாவது சர்வதேச யோகாதின நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்த பிரமாண்டமான யோகாசன நிகழ்ச்சியில் சுமார் 5 ஆயிரம் துணை இராணுவப்படை வீரர்களும் பங்குபற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டது. முத்திய தொழில்துறை பாதுகாப்பு படை, மத்திய ஆயுதப்படை, எல்லை பாதுகாப்பு படைகளை சேர்ந்த 1200 வீரர்களும் பங்குபற்றியுள்ளனர்.

இந் நிகழ்விற்காக 152 வெளிநாட்டு உயர் தூதர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டின் தூதரகங்களுக்கும் தலா 3 அனுமதி சீட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.



## வெள்ள அனர்த்தத்தால் பாதிப்பு

ஜோர்ஜியா தலைநகரான திபிலிசியில் உள்ள வெர் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 14 பேர் பலியானதுடன் 9 பேர் வரை காணாமற் போயுள்ளனர். இவ்வெள்ளம் அருகில் இருந்த மிருகக்காட்சிசாலை ஒன்றில் நுழைந்ததனால் அங்கிருந்த சில மிருகங்கள் இறந்ததுடன் சில மிருகங்கள் நகர்ப்பகுதிக்குள் தப்பித்து நுழைந்தோடியுள்ளன.

600 விலங்குகளில் பாதிக்கும் மேற்பட்ட பறவைகளும் மீன்களும் உயிரிழந்ததாகக் கூறப்பட்டுள்ளதுடன் காணாமற்போன விலங்குகளை தேடும் பணியும் இடம் பெற்று வருகின்றது.

குறித்த மிருகக்காட்சி சாலையில் பணி புரிந்த பெண் உட்பட மூன்று ஊழியர்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மர்ம நபரால் துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவின் தெற்கு கரோலினாவில் உள்ள தேவாலயத்தினுள் புகுந்து மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் பலியாகியுள்ளனர். இனவெறி காரணமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. 'கிறிஸ்தவர்கள் வழிபாடு மேற்கொள்ளும் பழமை வாய்ந்த தேவாலயம் ஒன்றிலே புதன் கிழமை பிரார்த்தனை கூட்டத்தின் போது அங்கு நுழைந்த மர்ம நபரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலினால் 9 பேர் பலியானதுடன் ஒருவர் காணமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தேவாலயத்திற்குள் நுழைந்த நபரின் வயதிற்கும் குறைவானதாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கின்னஸ் சாதனை படைத்த நாய்



அமெரிக்காவில் நாய் ஒன்று 2 கால்களில் அதிவேகமாக ஓடி இதற்கு முன்னர் அதிவேக ஓட்டப்பந்தயத்தில் உலக சாதனை புரிந்த மற்றுமொரு நாயின் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை படைத்துள்ளது. கோன் ஜோ என்று அழைக்கப்படும் பாப்பிலா ஜேக் ரசல் சிகுவாகுவா என்று மூன்று இனத்தின் கலப்பில் பிறந்த அந்த நாய் 5 மீற்றர் தூரத்தை வெறும் 2.39 நொடிகளில் ஓடி கின்னஸ் சாதனையை படைத்துள்ளது

## சொத்துக்களில் பாதி வழங்கிய கணவர்

ஜேர்மனியில் நபர் ஒருவர் தனது மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற்றுள்ளார். இதையடுத்து தனது சொத்துக்களில் சரி பாதியை மனைவிக்கு வழங்கவேண்டும் என்று விவாகரத்து ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்ததால் தன்னிடம் உள்ள பொருட்களில் பாதியை அளிப்பதற்கு பதில் அனைத்து பொருட்களையும் பாதியாக வெட்டி மனைவிடம் கொடுத்துள்ளார். உன்னோடு வாழ்ந்த 12 வருட வாழ்க்கைக்கு நன்றி. என்னிடம் உள்ள பொருட்களில் பாதியை உனக்கு அளித்துள்ளேன் என்று குறிபிட்டுள்ளார்.



## கடத்தப்பட்ட மகன் மீட்பு

ஜேர்மனி நாட்டை சேர்ந்த பிரபல கோடீஸ்வர மகனை கடத்தி பணம் கேட்டு மிரட்டிய கும்பலிடமிருந்து அந்நாட்டு பொலிசார் நூதன திட்டங்களை வகுத்து அதிரடியாக மீட்டுள்ளனர்.

ஜேர்மனியின் பிரபல தொழிலதிபர் மகனுடன் நகரில் உள்ள மனநல காப்பகத்திற்கு சென்றுள்ளார். ஆனால், அங்கு வந்த மர்ம நபர்கள் மகனை கடத்தி சென்று தங்களுக்கு 2 மில்லியன் யூரோக்கள் பணம் அளிக்க வேண்டும் என மிரட்டியுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், காவல்துறையிடம் புகார் அளித்துள்ளார். மகனை பத்திரமாக மீட்ட காவல்துறையினர், அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர்.

## ஒளிந்து சென்ற ஒருவர் மரணம்

பிரித்தானியா விமான சேவைக்கு சொந்தமான விமான ஒன்றின் சக்கரப் பகுதியில் ஒளிந்து பயணம் செய்தவர்களில் ஒருவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளதோடு மற்றையவர் கவலைக்கிடமாக உள்ளார். இச் சம்பவமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## எண்வருக்கு தூக்கு நிறைறேற்றம்

மரணதண்டனை விதிக்கப்பட்ட மேலும் 8 கைதிகள், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள வெவ்வேறு சிறைச்சாலைகளில் தூக்கிலிடப்பட்டுள்ளனர். இதேவேளை மேலும் மூவரினது மரணதண்டனைகள் இறுதி நேரத்தில் இடைநிறுத்தப்பட்டன. இதில் பாதிக்கப்பட்ட குடும்பங்களால் மன்னிப்பு வழங்கப்பட்டமையால் இருவருக்கும், மேலுமொருவருக்கு உயர்நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதாலும் மரணதண்டனை இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

15 வயதாகவிருந்தபோது மூவரை கொலைசெய்தமைக்காக கடந்த வாரம் பாகிஸ்தானில் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கு மனித உரிமை அமைப்புக்கள் கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா பொதுச் சபை தலைவர் தெரிவு

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 70ஆவது அமர்வுக்கான தலைவராக, டென்மார்க்கைச் சேர்ந்த மொவென் லுக்கடொஃப்ற் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இப்பதவிக்காக பெயர் குறிப்பிடப்பட்ட ஒரேயொருவராக இவரே காணப்பட்ட நிலையில், அவர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பொதுச் சபையின் ஒவ்வொரு அமர்வுக்குமான தலைமைப் பதவி ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் சுழற்சி முறையில் வழங்கப்படும் நிலையில், இம்முறை ஐரோப்பிய நாடுகளோடு, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கான வாய்ப்புக் காணப்பட்டது. அந்நாடுகளே தங்களது தெரிவாக மொவென் லுக்கடொஃப்றினை அறிவித்தன.

இதன்படி, நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையலு-வலகத்தில், எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பொதுச் சபைக்கான தலைவராக மொவென் லுக்கடொஃப்ற் செயற்படுவார்.



## 35 மணி நேரத்தை 32 ஆக குறைக்க கோரிக்கை

பிரான்ஸ் நாட்டு பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் கடந்த 2000ம் ஆண்டு முதல், வாரத்திற்கு 35 மணி நேரங்கள் அலுவலக சராசரி பணி நேரமாக அதிகாரப்பூர்வமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், 35 மணி நேரமானது பொது மக்களை பணியில் மட்டுமே கவனம் செலுத்தும் வகையில் உள்ளதால், அவர்களால் குடும்பம் முதற்கொண்டு பிற விடயங்களில் கவனம் செலுத்த முடியவில்லை என்பதால் வாரத்திற்கு 35 மணி நேரங்கள் என்பதை 32 மணி நேரமாக குறைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டில் பணி நேரத்தை வாரத்திற்கு 35 மணி நேரங்கள் என அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தாலும், 2011ம் ஆண்டு புள்ளி விபரத்தின் படி, உண்மையில் பெரும்பாலான மக்கள் வாரத்திற்கு சுமார் 39.5 மணி நேரங்கள் பணி செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு..

20



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

– பாயுமொளி நீ எனக்கு
பார்க்கும் விழி நானுனக்கு
தோயுமது நீ எனக்கு
தும்பியடி நானுனக்கு
ாயுரைக்க வருகுதில்லை
வாழி நின்றன் மேன்மை யெல்லாம்
தூய சுடர் வானொளியே
சூறையமுதே கண்ணம்மா!–

– பாரதியார்–

"கூட்டம் முடிவடைந்தது எனவே நாம் அனைவரும் வந்தது போலவே மீண்டும் திரும்பி விடுதிக்கு செல்வோம்" என ரமேஷ் கூற அனைவரும் கூட்டம் கூட்டமாக தமது விடுதியை நோக்கிச் செல்லத் தொடங்கினர். வழியில் சினிமா பாடல்களுடன் அந்த இரவு நேரத்தில் அவர்களது பயணம் சுதந்திரமாக இருந்தது.

ஆம் இராணுவ கெடுபிடிகள் நிறைந்த அந்த கால கட்டத்தில் மாலை ஆறு மணிக்கு பிறகு வெளியே புறப்படுவதற்கே யோசிக்கும் நிலையில் இரவு பதினோரு மணி தாண்டி விட்ட நிலையில் இளைஞர் கூட்டம் இப்படி குதூகலமாக ஆடிப் பாடி திரிவதென்றால் அது நாம் பல்கலைக் கழக மாணவர் என்ற தைரியமும் இது எமது ஹோஸ்டல் பிரதேசம் என்ற இட ரீதியான பாதுகாப்புமே காரணமாகும்.

மாணவர் கூட்டம் பெண்கள் விடுதியை கடந்து செல்லும்போது சில மாணவர்கள் தமக்குத் தெரிந்த மாணவிகளின் பெயரைச்சொல்லிக் கத்தினர்.. சில பெண்கள் விடுதிகளில் அந்நேரமும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது தெரிந்தது. அதில் ஒரு விடுதியில் தான் நிவேதா தங்கியிருந்தாள். அவளது ரூமும் வீதியோரமே அமைந்திருந்தது. நிவேதா தங்கியிருந்த விடுதியில் அனைத்து ரூம் விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. ரதனுக்கு தெரியும் இன்றிரவு தனக்காக நிவேதா தனது விடுதியில் பிரச்சார வேலைகளில் இறங்கியிருப்பாள் என்று.. ஏற்கனவே சொல்லி வைத்தது போல் அவளும் பவித்ராவும், சுகந்தியும் ஏனைய ரூம் மாணவிகளை சந்தித்து அனைவரையும் பொதுக் கூடத்துக்கு அழைத்து பிரச்சாரம் செய்வது என்று முடிவாகியிருந்தது. எனவே அங்கு பிரச்சார வேலைகள் தான் நடைபெறுகின்றன என்பதை ரதனால் ஊகிக்க முடிந்தது. அருகில் வந்த ரமேசும் ரதனைப் பார்த்து "மச்சான் உன்ர ஆள் பரவாயில்லை.. பிரச்சாரம் தூள் கிளம்புது போல தெரியுது.." என்று நக்கலடித்தான்.

மாணவர் கூட்டம் ஆர்வம் மிகுதியால் வீதியில் நின்ற மரங்களின் கிளைகளை முறித்தெடுத்து வீதியில் ஆடிக் கொண்டே சென்றனர். ரதனுக்கு அவர்களது ஆர்வத்தைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. அடங்கி ஒடுங்கி வாழ்ந்த மனசு கொஞ்சம் சுதந்திரம் கிடைத்தவுடன் எவ்வளவு குதூகலிக்கின்றது. அந்த போர்க்காலச் சூழ்நிலையை நினைக்க நினைக்க ரதனுக்கு வேதனையாக இருந்தது. இந்த கல்லூரி வாழ்க்கை, வளாக வாழ்க்கை எல்லாம் ஒரு சிலர் மட்டும் அனுபவிக்க அங்கே ஒரு கூட்டம் தமக்காய் போராடிக் கொண்டிருப்பதை நினைக்க மனசு காயப்பட்டது. ஒரு முறை அவனது போராளி நண்பனொருவன் அவனிடம் கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

"ரதன் நாங்க போராடுறம் ... நீங்க படிக்கிறீங்க .. அதனால் உனக்கு ஒரு குற்ற உணர்ச்சியும் தோன்றிடக் கூடாது. நாங்க போராடுறதில உங்களைப் போன்ற நம் இளைஞர்கள் நன்றாக படிக்க வேண்டும் என்ற இலட்சியமும் உண்டு. நீங்க நன்றாக படிங்க .. உங்கட சேவையை எங்கட மண்ணுக்கு தாங்க.....

அதுவே உங்கட போராட்டமாக இருக்கட்டும் ... முடிஞ்சா ரதன் உனது கவிதைகள் மூலம் எங்களுக்கான எமது விடுதலைப் போராட்டத்துக்கான தார்மீக ஆதரவை தா...'

மாணவர்களாகிய எமது கடமை எமது போராட்டம் இந்த போர்க்காலச் சூழ்நிலையில் நன்றாக படித்து எமது மண்ணுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஆவேசம் ரதனுக்கு அன்றே எழுந்திருந்தது.

அன்றைய தினம் தேர்தல் நடைபெற இருந்தது. அன்று புதன் கிழமையாதலால் பகல் 12 மணியுடன் விரிவுரைகள் முடிந்ததும் மாலை 2.00 மணிக்கு தேர்தல் ஆரம்பமாக இருந்தது.

ரதனின் நண்பர்கள் இரவிரவாக தாம் எழுதி வைத்திருந்த போஸ்டர்களை எடுத்துக் கொண்டு அதிகாலையிலேயே பல்கலைக் கழகம் சென்று சகல இடங்களிலும் ஒட்டிவிட்டு வந்தனர். போதாக் குறைக்கு கோழிச் சாயம் வாங்கி சுவர்களில் ரதனின் பெயரை எழுதி விட்டனர். மாலை 2.00 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமாகியது. கலைப் பிரிவு மாணவர்களும், விஞ்ஞான பிரிவு மாணவர்களும் வாக்களிக்க தயாராகினர்.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

குறிப்பிட்ட பீடங்களைச் சேர்ந்த மாணவர்களின் பெயர்கள் ஆண்டுகள் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அவர்கள் உள்ளே சென்று தமது பதிவிலக்கத்தையும், பெயரையும் உறுதிப்படுத்தி விட்டு கொடுக்கும் வெள்ளைப் பேப்பரில் தனக்கு பிடித்தவரின் பெயரை எழுதி அங்குள்ள பெட்டிக்குள் போட்டுவிட்டு வரவேண்டும்.

2.00 மணிக்கு ஆரம்பமாகிய வாக்குப்பதிவு மாலை 4.00 மணியின் பின் முடிவுக்கு வந்தது.

வாக்குகள் உடனே எண்ணப்பட்டு முடிவுகள் "டைப்" செய்யப்பட்டு பதிவாளரின் கையொப்பத்துடன் விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டது. அதில் செயலாளர் பதவிக்கு 125 மேலதிக வாக்குகளினால் ரதன் வெற்றி பெற்றிருந்தான்.

ரதனின் நண்பர்கள் அவனை அப்படியே தூக்கிக்கொண்டு 'கேண்டீனை' நோக்கி விரைந்தனர். தமது வாழ்த்துக்களை தெரிவிக்க நிவேதாவும், பவித்ராவும், சுகந்தியும் இன்னும் சில மாணவிகளும், மாணவர்களும் கேண்டீனை நோக்கி சென்றனர்.

நாட்கள் மெல்ல மெல்ல நகரத்தொடங்கின.

மாலை மங்கிய கருக் கிருட்டு நேரம்.... நேரம் 5 மணியைக் காட்டினாலும் ஆறு மணி போன்று இருள் மெல்லப்பரவத் தொடங்கியிருந்தது. கிழக்குப் பல்கலைகழக நூலகத்திற்கு எதிரே விளையாட்டு மைதானத்தின் ஓரமாக வளர்ந்திருந்த சிறிய பூச்செடிகளுக்கு அருகே அமர்வதற்கென கட்டப்பட்டிருந்த அந்த சீமெந்து கட்டுக்கு மேலே ரதனும் நிவேதாவும் அருகருகே அமர்ந்திருந்தனர். சற்று நேரத்திற்கு முன்னர்தான் இருவரும் நூலகத்திலிருந்து வெளியே வந்திருந்தனர். தினமும் அப்படித்தான் நான்கு மணியுடன் அவர்களது விரிவுரைகள் முடிவடைந்த பிற்பாடு மாலை ஐந்து மணி வரை நூலகத்தில் செலவிட்டு விட்டு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

ரதனையும் நிவேதாவையும் போலவே சில காதல் ஜோடிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக தனிமையை விரும்பி தமக்கு வசதியான தாம் வழமையாக அமர்ந்திருக்கும் இடங்களில் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தனர்

ரதனுக்கும் நிவேதாவுக்கும் இடையே நிலவிய அந்த மௌனத்தை ரதனே கலைத்தான்...

"நிவே ... எவ்வளவு வேகமாக நாட்கள் செல்லுது ... இன்னும் சில நாட்களில் முதலாம் ஆண்டு பரீட்சைகளுக்கு ஆயத்தமாக "ஸ்டடிலீவு" ஆரம்பித்துவிடும். அதன் பிறகு பரீட்சை ... பின்னர் விடுமுறை தினங்கள் ... காலம் போவதே தெரியல்ல ..."

"ரதன் எனக்கும் அத நினைக்கத்தான் பயமாயிருக்கு... தினமும் சந்தித்துப் பழகிய எமக்கு வாரம் ஒருமுறை, இருமுறை சந்திப்பது என்றால் கஷ்டம்தான் ..."

"இல்ல நிவே நாம "ஸ்டடிலீவு" டைமில படிப்பதற்கு லைபிரரிக்கே வரலாம் ... ஏனென்றால் லைபிரரி திறந்தே இருக்கும். அதனால் பிரச்சினை இல்லை ..." அவளை தைரியப்படுத்தினான் ரதன்.

கடந்த சில மாதங்களிலே நிவேதா ரதன் காதல் வெகு இறுக்கமாய் இருந்தது. வெறுமனே பல்கலைக் கழக பொழுது போக்கு காதல் என்றில்லாமல் .. அவர்கள் தம் எதிர்கால வாழ்க்கை நோக்கி திட்டமிட்டிருந்தனர். அதைத் தவிர அவர்களது காதலில் ஒரு தேடல் இருந்தது. இருவரும் சந்திக்கும் போது காதல் வார்த்தைகள் பேசுவதை விட அதிகம் கலை இலக்கியம், சினிமா, அரசியல் என பொது விடயங்கள் பற்றி தாம் படித்ததை தாம் ரசித்ததை பற்றி உரையாடிக் கொள்வர். அறிவுத் தேடல் நிறைந்த அந்த இரண்டு புத்திஜீவிகளின் காதல், உணர்ச்சிகளால் அல்லாமல் உணர்வுகளால் கட்டி எழுப்பப் பட்டிருந்தது.

ரதன் அடிக்கடி சொல்வான் "நிவேதா ... பரதியாருகு எப்படி கண்ணம்மாவோ ... எனக்கு நீ .... இனிய கண்ணம்மா"

"ரதன் நீங்க அடிக்கடி பாடுற அந்த பாரதியார் கவிதையை ஒருமுறை பாடிக் காட்டுங்களேன்..."

நிவேதா கெஞ்சுவது போல் கேட்டாள்.

ரதன் தனது குரலை செருமிக் கொண்டு தான் அதிகமாக விரும்பும் அந்தப் பாடலை பாடத் தொடங்கினான்.

"பாயு மொளி நீ எனக்கு
பார்க்கும் விழி நானுனக்கு
தோயுமது நீ எனக்கு
தும்பி யடி நானுனக்கு
வாயுரைக்க வருகுதில்லை
வாழி நின்றன் மேன்மை யெல்லாம்
தூய சுடர் வானொளியே
சூறையமுதே கண்ணம்மா !
வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நானுனக்கு –
பூணும் வட நீ எனக்கு – புது
வைரம் நானுனக்கு
காணுமிடந் தோறு நின்றன
கண்ணி னொளி வீசுதடி
மானுடைய
வாழ்வு நிலையே கண்ணம்மா!

"வான மழை நீ எனக்கு
வண்ண மயில் நானுனக்கு
பானமடி நீ எனக்கு
பாண்டமடி நானுனக்கு
ஞானவெளி வீசுதடி !
நங்கை நின்றன் சோதிமுகம்
ஊனமறு நல்லழகே
ஊறுசுவையே கண்ணம்மா"

ரதனைத் தொடர்ந்து நிவேதாவும் ஒரு பாரதியார் பாடலை பாடினாள்.



மேவும்.. ... ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால் வயிறாம்

கடற்கரை மணலில் - கோழிக்கூடு
கட்டுவோம் காலை வைத்தே !
நடக்கும் நண்டுகளை - துரத்துவோம்
நல்வளைக் கோடிடுமே !

அலைவரப்பின் வருவோம் -போனபின்
அங்கு முன்னேறிடுவோம் !
அலைத்திடும் தோணிகளை - அதனால்
'அலை' என அழைத்தார்

மேலே அலை அழைக்கும் - ஆனாலோ
மிக்க அமைதியாம் கீழ் !
காலோடு கையுமின்றிக் - கடலோ
கரை இடித்து வரும் !

கடலோமுக்காலாம் - புவியில்
காற்பங்கு தான் நிலமாம் !
கடல் விழுங்கிடவே - நினைத்தால்
கால்வயிறாம் நிலமே !

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)

## உணர்வது கொள் உளமது சேர்

விளக்குப் பூவை மூடி மறைத்தால்
இருட்டுத்தான்
விளக்கம் இன்றி இருந்து விட்டால்
குருடு தான்
இயற்கை அனர்த்தம் தீரவில்லை
துயரம் தான்
இதயம் மலர்ந்து சேர்ந்து விட்டால்
விடிவுதான்

பரந்து வாழும் மனிதர் இங்கு
பலரும் தான்
பாசை மதம் இனங்கள் யாவும்
உரிமை தான்
பகிர்ந்து பார்த்துஉணர்ந்துகொண்டால்
அறிவு தான்
பாகுபாட்டை மறந்து விட்டால்
மனிதர் தான்



இயற்கை மாதா தந்ததெல்லாம்
பெரிது தான்
வந்த இடர்கள் ஏற்பதெல்லாம்
வாழ்வு தான்
இழப்பிலும் மனிதர் தளைப்பதுவோ
இயல்பு தான்
இதையுணர்ந்து மனங்கள்
சேர்ந்தால் பொதுமை தான்

கவிக்குயிலன்
சேனையூரான்

# கவி முரசு

## மழையின் கொடை

மேகங்கள் பொழிந்தது
நீர் துளிகளல்ல
மழை(லை)(ப்) பூக்கள் !

அலங்காரம் சமைக்கவும்
அழகாய் கோர்க்கவும்
பூக்களே ஆதாரம் !

எப்படியும் வனப்பூட்டும்
இல்லையங்கு சேதாரம் !

பயிர் செழிக்க
நீர் வேண்டும்
இயற்கை வனப்புக்கும்
தேவைப்படும் !

வரட்சி இங்கே
வந்தனம் செய்தால்

பசுமைப் புரட்ச்சி
தூரமாகும் !

மழைப் பூக்கள்
உதிரா வரை
மண்ணில் மண(ன)முமில்லை....!
எந்தப் பயனுமில்லை...!

ஏ.ஆர்.எம்.நதார்
ஜின்னாநகர்



## இப்போதைக்கு என்ன வழியாக்கும்?

– நிலாவெளியூர் கெஜதர்மா –

நிகழ்வின் தலைவன் நிதானம் உள்ளவன்
தகைமையுடை தனபால சிங்கம் ஐயாவிற்கு
அகமகிழ்ந் தடியேன் எந்தனது
மிகவும் அன்பு வணக் கமீந்தேன்.

நீங்களும் எழுதலாம வாசகர் வட்டத்தின்
நிகழ்வுகள் இதனை பார்த்துக் களிக்க
தங்களது தங்கமான நேரம் அதனை
தந்தொதுக்கி வந்தமர்ந்துள்ள
அவையோரே உங்களுக்கு அடியேனின்
அன்பு நிறை வணக்கங்கள்.

சுவையிது சுமையல்ல என்று
சுவைக்க வந்திற்றீர் நன்றி வணக்கம்
செவியையும் மனதையும் செம்மையாய் குளிர்விக்கும்
கவிதனை (பாடிய) பாடவுள்ள
கவிஞர் குழாமிற்கு என் வணக்கம்.

(குட்டை = சிறுகுளம்)

இப்போதைக்க என்ன வழி?
இதுவே தான் தலைப்பு
சப்பென்றில்லாத சரியான தலைப்பு
சங்கடங்களைச் சொல்ல சரியான தலைப்பு
இப்போதைக்கு - இன்றுள்ள நிலமைக்கு
என்னவழி என்றும் கொள்ளலாம்
இப்-போதைக்கு என்ன வழி
என்றும் கொள்ளலாம்.

இளம் தலைவன் இவன் யார்?
இவன் தலைமையில் யான்
இருந்து கவிபாடல் தகுமோ
தாபி-சுப்பிரமணியம், தாமரைத்தீவான்,
கோணேஸ்வரன், திருமலை நவம்
போன்றோர் தலைமையில் பாடியவன் யான்,
குளம் போல யாமிங்கு இருக்கையில்
குட்டை களிங்கு வரலாமோ

இதம் தெரியாதவர்கள் இவர்கள்
இவர்களை இங்குள நாம்
சதத் திற்கும் கணக் கெடுக்காது
சவால் விடுத்துத் தள்ளுவோம்

பதர் இவர்கள் பறந்து விடுவார்கள்
பனங்காட்டு நரி எனக்குப் பயமில்லை
பொக்கற்றுக்குள் என் ரசிகர் பல பேருண்டு
என்று நான் பாட மாட்டேன் -
என்றும் நான் பாட மாட்டேன்.
ஏனெனில் எனக்கு கவித் தலைமைக்
கதிரைக்கு மட்டுமல்ல
எந்தத் தலைமைக் கதிரை மேலும்
எப்போதுமே போதை இல்லை.
ஆட்டுக் கல்லரைத்து அழகாய் வட்டத் தோசை
சுட்டுத் தின்று மகிழ்தோமன்று
அம்மிக் கல்லில் குழவி
வைத்தரைத்து சம்பல் செய்து
இம்மியும் விடாது வழித்து
இன்புற்றுத் தின்றவர் நாம்

மிக்ஸியிலும் கிறைண்டரிலும்
மிக வேகமாய் அரைத்து
மிக வேகத்தில் உணவு செய்து
மிக வேகமாய் உண்டு

மிக வேகமாய் வேலைக்கு
மின்னலென பறக்கும் காலமிது
வேகமாய் சமையலை முடித்துவிட்டு "சண் ரீவி"யில்
சீரியல் பார்க்கும் காலமிது

ஆட்டுக் கல்லே வேணும்
அம்மியே வேணும் என்று
அடம் பிடிக்கலாமோ
பழசுகள் நாங்கள் - இனி
புதுசுகளுக்கு வழி விடுவோம்
என்று எண்ணி இவன் தலைமையை ஏற்றேன்.

அச்சுக் கோர்த்துக் கோர்த்து
அச்சகம் நடாத்திய காலம்
தட்டெழுத்துத் தட்டித் தட்டி
தாளில் எழுதிய காலம்
இட்டமாய் இன்றும் அது
வேணுமெனில் ஏற்கலாமோ?

கம்பியூட்டர் காலமிது
அதற்கு நாம் மாற வேணுமே
தம்பி மார்களை தனயன்களை
தலைமையாய் ஏற்றுக் கொண்டு
வெம்பி நாம் ஒதுங்கிடாது
விடலைகளை வழி நடத்தலாமே

வீண் ஜம்பம் பேசியோர் விதண்டாவாதம் பேசியோர்
குட்டக் குட்ட குனிந்தோம் நாம்- ஏன்
தமிழ் தன்னால் ஒழுகிய பேச்சுக் கேட்டு
ஒன்றுமே விளங்காது ஓம்பட்டு நின்றோம்

இன்னும் பழம்பெருமை பேசி
இனிப் பயனில்லை என்று
இளைஞர் குளாமை தலைமையாய்
ஏற்பதே என முடிவு செய்தேன்
ஆதலினால் யான் கவித் தலைமைப் போதை விடுத்து
இளம் தலைவன் இவன் கீழ்
கவி பாட வந்துள்ளேன்.

தட்டிக் கொடுங்கள் இளைஞர்களை
தயவுடன் கேட்கின்றேன்
முட்டி மோதாது அவர்தமை
முன்னுக்கு வர விடுங்கள்
இட்டம் இது இல்லையெனில்
போட்டிக்கு அவர்கள் எதிர்க்கடை
போட்டுவிட்டால் என்னதான் செய்வது
கீரைக்கடைக்கும் எதிர்க் கடை வேண்டுமென
கிளர்ந்திடுவார் மக்கள்
என்று யான் எண்ணியதால்
கவித்தலைமை போதை விடுத்து
இளைஞர்களின் கீழ் கவி பாட வந்தேன்.
காம போதை........... கள் போதை.........
மத போதை............. இவையெலாம் பாட
நேரம் போதவில்லையே
ஆதலால் யான்

இப்போதைக்கு என்ன வழி
என்ற தலைப்பிற்கு இந்த விடை
போதுமென்றே எண்ணி யான்
இருக்கையில் அமர்கிறேன்
என் கவி கேட்ட
அனைவர்க்கும் நன்றி

## சிரத்தை எடுப்பாரா?

வாத்திமார் மூவர் தன்னால்
வளம் பெற்ற பள்ளியது !
கீர்த்தியுடன் விளங்குகின்ற
'கிண்ணியா' வலய மதில்.
ஊர்ப்புகழை உயர்த்தி விட்ட
உன்னதமாம் பள்ளி தனில்
ஆர் அதிபர்? என்று இப்போ
'அறப்போர்' நடக்கிறது !

"அருளாளர்". கோ மலையர்,
"ஆலையூரான்" அதிபரெனப் -
பெருமையுடன் பண்டைய நாள்
பேணி வளர்த்த் பள்ளி.
திருமலை மாவட்டத்தில்
திறமைக்கோர் தனித்துவத்தை
அடையாளப் படுத்தி வைத்து
அமைதியுடன் வளர்த்த பள்ளி !

பல்கலைக் கழகமதைப்
பலர் காண வைத்த பள்ளி !
வல்ல பல கவிஞர்களை
வடிவமைத்து தந்த பள்ளி !
நல்ல பல ஓவியர்கள்.
நடிப்பாற்றல் மிக்கவரை
கல்வியிலே மாண்பு பெற்ற
கலாநிதியைக் கண்ட பள்ளி !

இரு பாலார் பயிலுகின்ற
இனிதான பள்ளியதன்
'நிருவாகம்' பேணுகின்ற
'நிலையான அதிபர்' தனை-
வரவேற்க முடியாமல்
வருந்துகின்றார் மாணவர்கள் !
சிரத்தையினை எடுப்பாரோ.
சீர் கல்வி திணைக்களத்தார் !

... விஸ்ணுதாசன் குகேஸ்கா ...
தரம் - 11, சல்லி அம்பாள் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய பார்வை**

# அரசியல் சர்வாதிகாரத்தில் சிக்கித் தவிக்கும் தமிழரின் அரசியல்

-வெட்டியான்-

இரு தேசங்களாக இருந்த இலங்கை என்று ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டு விட்டதோ அன்றிலிருந்து ஒரு தேசமாக.·. ஒருநாடாக உருப்பெற்று விட்டது.

இலங்கை ஆங்கிலேய ஆட்சிக்கு கீழ் கொண்டு வரப்பட்ட போது தனது தேச அந்தஸ்தைத் தன்னையறியாமலே இழந்தது தமிழ் தேசிய இனம் அன்றிலிருந்து இன்று வரை தமிழர்கள் தமது தேசிய அடையாளத்தை மீட்டுக் கொள்ள பல்வேறு விதமான முயற்சிகளை முன்னெடுத்து வந்திருந்தனர். எனினும் அம்முயற்சிகள் யாவும் நாடு ஆங்கிலேய ஆட்சியில் இருந்து விடுதலையடைந்ததாக அறிவிக்கப்பட்ட 1948ம் ஆண்டில் இருந்து போரட்டங்களாக உருப்பெறத் தொடங்கின.

தேசிய அடையாளச் சிதைப்பானது உச்சஅளவில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட முனைப்புக்களின் வடிவமாக சிங்களப் பேரினவாதம் உருப்பெறத் தொடங்கிய வேளை ஆயுதப் போரைத் தமது போராட்ட வடிவமாகத் தமிழர்கள் ஏற்கத் தொடங்கினர். தமிழ்த் தேசிய அடையாளச்சிதைப்பை மேற்கொண்ட அனைவரையும் அவர்கள் உள்நாட்டில் இருந்தால் என்ன? வெளிநாட்டில் இருந்தால் என்ன? அவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில் அதனையும் ஒரு காரணமாகக் காட்டி பல சர்வதேச நாடுகள் தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கு பயங்கரவாத வடிவத்தை வழங்கியதுடன் அப்போராட்டத்தை தலைமை எற்று நடத்திய அமைப்பும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக பிரகடணமானது.

2001ம் ஆண்டில் அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பின்னராக முன்னெடுக்கப்பட்ட "பயங்கரவாதத்திற்கு எதிரான பூகோளப் போர்" (Global war on Terrorism) பயங்கரவாத அமைப்புக்கள் மீது மேற்கொண்ட பல்வேறு அழித்தொழிப்பு நடவடிக்கைகளுக்குத் தமிழர் போராட்ட அமைப்பும் உட்பட்டது. அந்நடவடிக்கைகளிலிருந்து தமிழரின் போராட்ட வடிவத்தை ஆயுத - அறிவியல் வடிவமாக பன்முகப்படுத்தப்படவென உருவாக்கப்பட்ட அரசியல் கூட்டணி தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக உருவாகியது.

2001ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டணியின் அடிப்படைக் கோட்பாடாக அன்றைய திகதியில் அமைந்திருந்தது "திம்புக் கோட்பாடுகளே"
1985ல் திம்புவில் கூடிய தமிழர் அமைப்புக்கள் அனைத்தும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளத் தேவையான முடிவுகளை கோட்பாடுகளாக முன்வைத்தனர். அவை முறையே தமிழர் தேசத்தை அங்கீகரித்தல், தமிழர்களின் தாயகத்தை ஏற்றுக் கொள்ளல். தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளல்., தமிழர் தாயகத்தில் தமிழரின் பிரஜாவுரிமையை ஏற்றக் கொள்ளல் ஆகியனவே அக்கோட்பாடுகள் ஆகும்.

2001ல் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்பாடுகளையே தமது தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டு பொது தேர்தலில் போட்டியிட்டது. 2001ம் ஆண்டு 15 ஆசனங்களையும், 2004ல் 22 ஆசனங்களையும், 2010ல் 14 ஆசனங்களையும் பெற்று தமிழர்களின் ஏகோபித்த அரசியல் சக்தியாக உருவான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 2001ம் ஆண்டில் தமது கொள்கையைக் கொண்டிருந்த "தமிழ்த்தேசம்"என்ற அடிப்படைக் கோட்பாட்டை "வெற்றுக்கோசம்" என 2015ல் பெயரிடத் தொடங்கியுள்ளது.

2010ம் ஆண்டின் பின்னர் தனிநாடு கோரிப் போராடிய போராட்டத்தின் ஆயுதங்கள் தற்காலிகமாக மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே தமிழரின் குரலாக உருவெடுத்தது. ஒற்றைக்குரல் என்பது காலவோட்டத்தில் சர்வதிகாரப் பண்புகளுடன் உருவெடுப்பது உலகவரலாற்றில் நிகழ்ந்திருப்பதைக் காணலாம்.

சர்வாதிகாரம் என்றால் என்ன? என்ற ஆராய்சியின் போது அரசியல் வலுவானது (Political Power) ஒருவர் அல்லது ஒரு சிறு குழுவிடம் உறைவதால் அந்த ஒருவர் அல்லது சிறுகுழு நிறைவேற்று வலுவுடன் (Executive power) கட்டளையிடும் பண்புகளைக் கொண்டிருப்பதைக் குறித்திருப்பது தெளிவாகிறது.

தமிழ் அரசியல் தலைமைத்துவமானது ஒரு சிறு குழு அல்லது இரண்டு பேரிடம் மட்டுமே குவிந்திருப்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளும் வெளிப்படுத்த தொடங்கிய போதே அரசியல் சர்வாதிகாரத்தில் தமிழ் அரசியல் பயணிப்பதையிட்டதான எண்ணங்கள் உருவாகத் தொடங்கின.

இவ்விடயத்தை உறுதிப் படுத்திக் கொள்ள நடைபெற்ற சில முக்கிய விடயங்களுள் சிலவற்றை ஆராய்வுக்குட்படுத்தி முடிவைப் பெறுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

முதலாவது விடயமாக 2012ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தினை ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து நடாத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானம். இத்தீர்மானம் எடுக்கப்பட்ட உடனேயே தினக்கதிர் பத்திரிக்கைகு எழுதிய கட்டுரையில் இரா.துரைரத்தினம் இதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீர்மானம் எனச் சொல்வதை விட சம்பந்தனும் சுமத்திரனும் கொழும்பில் இருந்து எடுத்த தீர்மானம் எனச் சொல்வதே பொருத்தமானது (www.thinakathir.com) என எழுதியிருந்தார். இவ்விடயம் தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட ஆலோசனைகளை உரிய தலைமை புறந்தள்ளியதாகவும் குறிப்பிட்டார்.

இரண்டாவதாக 2015ம் ஆண்டில் நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் நாற்பத்து மூன்றாண்டு கால மரபையும் மீறி சம்பந்தர் மற்றும் சுதந்திரன் ஆகியோர் தமிழ்த் தரப்பாகக் கலந்து கொண்டனர்.

இவ்வாறு ஏன்? திடீரென தமிழர் தரப்பானது கலந்து கொண்டது என்ற கேள்விக்கு சாமானிய தமிழ் மக்ளிடையே காட்டுத் தீயாய் பரவத் தொடங்கிய பொழுது தமிழ் மக்களுக்கு ஒரு பேராச்சரியம் காத்திருந்தது.

அந்த ஆச்சரியம் என்னவென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இவ் விழாவில் கலந்து கொண்டது தொடர்பாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய எக்கட்சிகளுக்கும் தெரியப்படுத்தப்பட வில்லை என்பதே! இதனை கூட்டமைப்பின் பேசவல்ல அதிகாரியும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றுமொறு அரசியல் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெளிவாக் வெளிப்படுத்தினார். அதற்கும் மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேட்ட தலைவர்களுள் ஒருவரான சி.க சிற்றம்பலம், இவ்வாறு கலந்து கொண்டமை தொடர்பான விசாரணைகளைச் சம்பந்தருக்கு எதிராகவும் சுமந்திரனுக்கு எதிராகவும் ஆரம்பிக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவிற்கு கடிதம் மூலம் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து மூன்றாவதாக வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சியின் செயற்குழு ஏகமனதாக ஒரு முடிவை எடுத்தது. அம் முடிவானது சர்வதிகாரத்தின் மிக முக்கிய கருப்பொருளான வலுவை (Power) ஓரிடத்தில் குவித்தல் என்பதனை செயலுருப்பெற வைத்தது. அத்தீர்மானம் என்வென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எடுக்கும் முடிவுகளுக்கு அவை நம்மோடு கலந்தாலோசிக்கப்பட்டால் என்ன? அல்லது கலந்தாலோசிக்கப்படாவிட்டால் என்ன? தமது பரிபூரண ஆதரவை வழங்குவது என்ற முடிவே ஆகும். இம்முடிவானது எஞ்சிக் கிடந்த கொஞ்ச நஞ்ச உள்ளகக் கருத்துருவாக்கத்தின் சுதந்திரத் தன்மையை நீக்கி கட்சிக்குள் வல்லாட்சியை (Despotism) உருவாக்கியது.

நான்காவதாக அண்மையில் சுமந்திரன் இலண்டனில் ஒரு இரகசியக் கலந்துரையாடலில் ஈடுபட்ட விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. இக்கலந்துரையாடலில் அரச தரப்பு பிரதிநிதிகள், புலம்பெயர் அமைப்புக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பொன்றின் பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் சர்வதேச சமாதான தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டமை வெளிப்படத் தொடங்கிய போது மீண்டும் அச்செய்தி ஓர் ஆச்சரியத்தை தமிழ்க்கூறும் உலகிற்கு ஏற்படுத்தியது.

அவ்வாச்சரியம் என்னவெனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் சர்வதேச கூட்டமைப்பொன்றில் அதுவும் சிறிலங்கா அரச தரப்பு பிரதிநிதி மற்றும் சர்வதேசப் பிரதிநிதி ஆகியோருடன் பேச்சுக்களில் ஈடுபடச் சென்றது பற்றி அக்கூட்டமைப்பின் ஏனைய பிரதி நிதிகள் எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. இவ்விடயம் வெளியாகத் தொடங்கிய போதே கூட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துரைத்த சுமந்திரன் தனது பயணம் தொடர்பாகத் தலைவர் மட்டுமே அறிந்திருந்ததாகவும் ஏனைய எவருக்குமே இவ்விடயம் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார். "இதற்கு முன்னரும் நாம் சர்வதேச தமிழ் அமைப்புக்களை சந்தித்த போதெல்லாம் அந்தத் தகவல்களை எந்தவொரு கூட்டணிக் கட்சிகளுக்கும் வெளிப்படுத்தவில்லை" என சுமந்திரன் ஆங்கில நாளிதழ் ஒன்றிற்கு வெளிப்படுத்தியிருந்தார்.

இச்சந்திப்பு தொடர்பாக கருத்தறிவித்த பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சற்று காட்டமாகவே இந்த நடவடிக்கைகளை விமர்சித்திருந்தார்.

ஆக மொத்தம் மேற்கூறப்பட்ட நான்கு நடவடிக்கைகளையும் உற்று நோக்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சனநாயக பண்புகள் அறவே அழிந்துள்ள நிலையில் ஒரு கட்சி மட்டும் சர்வாதிகார தலைமைத்துவப் பாங்கை அக்கூட்டணியில் வெளிப்படுத்த முயற்சிப்பதுடன் அக்கட்சியில் ஓரிருவர் மாத்திரம் வல்லாட்சிப் பண்புடன் ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் அரசியலை இயக்க முயற்சிப்பதானது வெளிப்படையாக புலனாகிறது. இக்கட்டுரையை வரையும் போது வடமாகாண முதலமைச்சர் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கு வரைந்துள்ள கடிதத்தில் "தமிழ்த் தேசியத்திற்காக உழைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை உணர்வும், அர்ப்பணிப்புத் தன்மையும் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாமல் என்றும் நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்" என அறிவித்துள்ளார். அக்கூற்றின் மூலம் கூட்டமைப்பின் உள்ளக உறவு நிலை தேர்தல் காலம் மற்றும் தேர்தலல்லாக் காலம் ஆகிய இரு காலங்களிலும் இரு முகப்பட்டிருந்ததை உணர முடிகிறது.

ஒரு பெருங் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை 1948ம் ஆண்டிலிருந்து எதிர்கொண்டு வரும் இனமான தமிழினத்தின் அரசியலானது சர்வாதிகார வல்லாட்சிப் பண்பை கொண்டேகுமாயின் அந் நகர்வு தமிழரின் நிரந்தர தீர்வுகளுக்கு வழியமைக்குமா என்பது கேள்விக்குறியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....



எதிலும் எதற்கும் எப்படிப் பார்த்தாலும் சம்பந்தமே இல்லாமல் உருவான நாடு. தமது தாய்நாட்டிற்கு எதிராக போரிட்டு சுதந்திரம் அடைந்த நாடு. இத்தாலி ஆய்வாளரின் பெயரை தனக்கு இட்டு "அமெரிக்கா" என்ற பெயர் பெற்ற நாடு. முதலாளித்துவமாக இருந்தாலும் இந்த உலக வரலாற்றில் முதல் மக்கள் ஆட்சி அமைத்துக் கொண்ட ஒரு நாடு. மண்ணின் மைந்தர்களை எங்கோ துரத்தி விட்டு, புதைத்து விட்டு மாட மாளிகைக-ளையும் கூட கோபுரங்களையும் எமது சிற்றூர்களின் அளவிற்கு அகலத்திற்கு ராஜபாட்டைகளையும் கொண்ட நாடு. (மண்ணின் மைந்தர்களை ஏறி உழக்கி உருவான நாடுகளாக வடக்கு தெற்கு மத்திய அமெரிக்க கண்ட நாடுகள், அவுஸ்திரேலியா, நியுசீலாந்து போன்ற நாடுகளை கூறலாம்) அடிமைகளாக வாழ்ந்த ஆபிரிக்கர்களின் உணர்வுகளை ஓரளவாவது புரிந்துகொண்ட நாடு. காரணமின்றி எதிலும் மூக்கை நுழைக்காத நாடு. மூக்கை நுழைக்க காரணத்தை தேடுகின்ற நாடு. அணுவை முதலில் பயன்படுத்திய நாடு. நிலாவில் மனிதனை இறக்கிய நாடு. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில்தான் (1492) சீனா ஜப்பான் போன்ற நாடுகளை தேடிப்போன கொலம்பஸ் கரைதட்டிய இடம்தான் கரீபியன் கடலுடன், வெனிசுவேலா என்று சொல்கிறார்கள். ஆக 520 வருட புவியியல் வரலாற்றையும், சரியாக சொல்வதென்றால் 240 வருட அரசியல் வரலாறைக் கொண்ட அமெரிக்கா இன்று வல்லரசாக உயர்ந்து நிற்கிறது.

தாய் நாட்டிற்கு எதிராக போர் அதுதான் அமெரிக்க சுதந்திரப் போர். உலக வரலாற்றின்படி 1775 இலிருந்து 1783 வரை சுதந்திரப் போர் நடந்ததாக குறிப்பிடுகிறார்கள். அமெரிக்க ஆகமப் படி 1776 சுதந்திரம் அடைந்து விட்டதாக சொல்கிறார்கள். ஆனால் 1783 இல் தான் வேர்சைல்ஸ் ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா-விற்கு பிரிட்டன் சுதந்திரம் வழங்கியதாக ஆவணங்கள் சொல்கின்றன. ஆனால் முதல் ஜனாதிபதி வொஷிங்டன் பதவியேற்றது 1789 இல் .... அப்பப்பா எத்தனை குழப்பம்... அவற்றில்தான் குழப்பமே தவிர அவர்களின் போர் வேட்கையில், அவர்களின் ஒற்றுமையில், அவர்களின் முயற்சியில் குழப்பங்கள் இருக்கவில்லை என்பதுதான் முக்கிய விடயம்....

சுதந்திரப் போர் நடந்ததா ? அது எட்டு வருடங்கள் நடந்தது. காலம் முழுக்க உள்ளூரிலும் வெளியூரிலும் போர் செய்து கொண்டே இருந்தது. இருக்கிறது . போர்கள் இல்லையேல் அமெரிக்காவும் இல்லை அவர்களது பொருளாதாரமும் இல்லை. அது பொதுவாக அனைவருக்கும் புரிந்ததுதான். அமெரிக்கா இல்லை என்றால் 2ம் உலக யுத்தத்திற்கு முன் ஐரோப்பாவில் - ஜெர்மனும், ஆசியாவில்- ஜப்பானும் வல்லரசுகளாகி இருக்கும். யுத்தத்திற்குப் பின் ஐரோப்பா ஆசியா கண்டங்களிட்கு ரசியா வல்லரசாகியிருக்கும். ஆக இப்பொழுது அதாவது 1991 கு பின்னர் அனைத்துக் கண்டங்களுக்கும் அமெரிக்காதான் வல்லரசு. இது பல நாடுகள் ஏற்றுக் கொள்ளாத உண்மை. ஏற்றுக் கொண்டே ஆகவேண்டிய உண்மையும் கூட...

அப்படி என்றால் இன்னும் இந்தியா வல்லரசு ஆகவில்லையா? என்ற கேள்வி எழுவது சாதாரணம். 1995 இல் சொன்னார்கள் 2005 இல் வல்லரசாகும் என்று.. 2005 இல் சொன்னார்கள் 2015 என்று, இப்பொழுது 2025 ஆகிவிடும் என்று கோபிநாத் மேடைகளில் சொல்லித்திரிவதாக கதைகள் அடிபடுகிறது. அறிமுகம் போதும் என்று நினைக்கிறேன்... இனி வரும்பொழுதில் அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு என்ன செய்தி கிடைக்கும் என்று பார்க்கலாம்....

அப்படி என்னதான் தமிழர்களுக்கு பயனுள்ள செய்தி உண்டு? ... காத்திருக்க கூடியவர்கள் காத்திருங்கள்...




வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து...

# காதலில் சொதப்பாமல் இருப்பது எப்படி??

**காதல்...** இதயத் தசைகளை இயக்கும் விசை மனதை மயிலிறகால் வருடி பறக்கவைக்கும் இனம்புரியா இசை. காதல் எப்போது வரும்... எப்படி வரும் என்பதை யாராலும் சொல்ல முடியாது. காதல் என்றால் என்ன? காதலிக்காவிட்டால் அது இயல்பான நடத்தை இல்லையா? சலிக்காத அளவுக்குக் காதலை இயக்கும் காலச்சக்கரம் எது? எது சரியான காதல்? டீன் ஏஜ் பருவத்தில் மனதில் காதலைப் பற்றி என்ன எண்ணம் தோன்றும்?

காதல் டீன் ஏஜ் ஸ்பெஷல் மட்டுமல்ல..! ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எந்தத் தருணத்திலும் காதல் தாக்கலாம். காதல் யார் மீது வருகிறது என்பதுதான் முக்கியம்.

13 வயதில் வரும் காதலைவிட 24 வயதில் வரும் காதல்தான் முதிர்ச்சியாக இருக்கும். பள்ளிப் பருவத்தில் வரும் காதல் இருவரிடையிலான சந்தோஷ விடயங்களை மட்டுமே பகிர்ந்துகொண்டு, எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப் பார்க்காது. இப்படியான பருவத்தில் காதல்வயப்பட்டு உடனடியாகத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு இடையில்தான், மண வாழ்க்கையில் பெரும் சச்சரவுகள் உண்டாகும்.

உண்மையான காதலன் அல்லது காதலி என நீங்கள் உங்கள் துணையிடம் நிரூபிக்க எந்த வகையிலும் உங்கள் சுயத்தை இழக்காதீர்கள். எந்தச் சமயத்திலும் நீங்கள் நீங்களாகவே இருங்கள். அப்படி நீங்கள் இருக்கும்போது உங்கள் மீது உண்டாகும் ஈர்ப்புதான், எவர்லாஸ்டிங் ஈர்ப்பாக இருக்கும்.

காதல் என்பது ஒரு முறை பூக்கும் பூ கிடையாது. வாய்ப்பு கிடைக்கும்போது எல்லாம் பூக்கும். 8 வயதிலும் வரும்... 80 வயதிலும் வரும். அந்தந்த பருவத்துக்குரிய பக்குவத்துடன் அணுக வேண்டும். பொதுவாக கண்மூடித்தனமான அன்பு யார் மீதும் வைக்கக்கூடாது. அப்படி வைக்கும்போதுதான் காதலி பிரிந்துவிட்டால் தற்கொலை போன்ற எண்ணங்கள் தலைதூக்குகின்றன. சிலர் போதை வஸ்துகள் மீது தங்கள் கவனத்தைத் திருப்புகிறார்கள்.

முதலில் ஒன்றை உணருங்கள்... காதலில் உங்கள் அன்புக்குரியவர் பிரிந்துவிட்டால் அது உங்களுக்கு ஏற்பட்ட அவமானம் கிடையாது. அது பொதுவாகப் பலருக்கும் நடக்கக்கூடிய ஒன்றுதான். உங்கள் மனதை உங்கள் வேலையின் மேல் திருப்பி வாழ்கையில் உயர்ந்து காட்டுங்கள்.

"டீன் ஏஜ் பருவத்தில் காதல் செய்யுங்கள் ஆனால் முடிவு எடுக்காதீர்கள்!"

காதலில் சொதப்பாமல் இருக்க...

புற அழகினால் வருவது காதல் இல்லை அக அழகினால் வருவதுதான் காதல். கண்ணோடு மட்டும் அல்லாமல் மனதோடும் மனம்விட்டுப் பேசுங்கள். உங்கள் காதலனோ, காதலியோ உங்களுக்காக மட்டுமே படைக்கப்பட்டவர் அல்ல.

சம்பந்தமே இல்லாமல் சந்தேகப்படாதீர்கள். வெறும் காதல் மொழிகளை மட்டுமே பேசாமல், செயற்கையாக வாழாமல், அடுத்த கட்டத்தைப் பற்றிப் பேசி முடிவெடுங்கள். பிரச்சினைக்கு உரிய விஷயங்களைத் தள்ளிபோடாமல், அதை உடனடியாகக் கலந்து ஆலோசித்து, தீர்வு கண்டுபிடியுங்கள். எந்தக் காரணம்கொண்டும் உங்கள் காதலரை அதீதமாக நம்பாதீர்கள். கல்யாணத்தின் முன்பு வரை எந்த நேரத்திலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

காதல் என்பது வெறும் ஊடல், கூடல் சார்ந்த விஷயம் மட்டுமே அல்ல. பொறுமையும், அன்பும், விட்டுக்கொடுத்தலும் இருக்க வேண்டும். அப்போதுதான் திருமணத்துக்குப் பிறகும் காதல் இனிக்கும்.



## வினோதங்கள்

### தாய்ப்பால் அளிக்க தாய்க்குத் தடை

அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி நகரத்தை சேர்ந்த 20 வயது பெண் ஒருவருக்கு 11 மாத குழந்தை உள்ள நிலையில் தனது கணவனை விட்டு பிரிந்து தனியாக வசித்து வருகிறார். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்து வரும் நிலையில், அந்த பெண் பச்சை குத்திக்கொண்டுள்ளார். இதை அறிந்த அவரது முன்னாள் கணவர் சிட்னியில் உள்ள குடும்ப நல நீதிமன்றத்தில் முறையிட்டார்.

இப்படி ஒரு சூழலில் குழந்தைக்கு தாய்ப்பால் அளித்தால் அது குழந்தைக்கு உடல்நலக்கேடு ஏற்படுத்தும் அபாயம் உள்ளதால், இனி குழந்தைக்கு தாய்ப்பால் அளிக்க கூடாது என தாயாருக்கு தடை விதிப்பதாக நீதிபதி திர்ப்பளித்துள்ளார்.

**இப்படியும் நடக்கலாம்**

### நாயுடன் உடலுறவு கொண்டவர் கைது

அமெரிக்காவை சேர்ந்த இளம்பெண் ஒருவர் அவரது செல்லப்பிராணியான நாயுடன் உடலுறவு கொண்டு 'செல்பி' எடுத்துக்கொண்ட குற்றத்திற்காகவும் விலங்குகளிடம் இயற்கைக்கு மாறான உடலுறவில் ஈடுப்பட்ட குறத்திற்காகவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தான் உடலுறவிற்கு தயாராக உள்ளேன் என்பதை சில செய்கைகள் மூலம் காட்டினால் தனது நாய் அதனை நன்றாக புரிந்து கொண்டுவிடும் என்றும், நாயுடன் இருக்கும்போது தன்னை ஒருபோதும் யாரும் சந்தேகப்பட்டது இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

### தந்தை மூலம் 4 குழந்தைகள்

பிரான்சைச் சேர்ந்த 30 வயதான பெண் ஒருவரை அவரது 50 வயதான தனது சொந்த தந்தையே சீரழித்து 4 குழந்தைக்கு தாயாக்கினார். அந்த குழந்தைகளில் ஒருவரான இரண்டு வயது ஊனமுற்ற குழந்தை இறந்த போது தான் காவல்-துறையினர் விசாரிக்க தொடங்கியுள்ளனர். இந்த மனிதர் தனது பேரக்குழந்-தைகளிடமும் தவறாக முயன்றதாக சந்தேகிக்கப்படு-கிறது. கடந்த வருடம் பிரெஞ்சு செனட்டர் சபையில் குடும்ப உறுப்பினர் களுக்குள்ளான உறவு குற்றம் என்று கூறி சட்டத்திருத்தம் கொண்டு வர விவாதம் நடந்தது. ஆனால் முடிவில் இந்த திட்டத்துக்கு எதிராக ஓட்டுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது



- உலகிலேயே அதிக கறுப்பு நிற குழந்தை தென் ஆப்பிரிக்காவில் பிறந்து உள்ளது. இந்த புகைபடம் தென் ஆப்பிரிக்க சமூக இணைதளங்களில் பரவி வருகிறது. இந்த குழந்தையின் பெயர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்று இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அதிகாரபூர்வமான தகவல்கள் எதுவும் இல்லை.



- ஜேர்மனியை சேர்ந்த 65 வயதானவர் கடந்த மாதம் செயற்கை கருத்தரிப்பு மூலம் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பெற்றெடுத்தார். ஏற்கனவே 13 குழந்தைகளை பெற்ற இந்த பெண், உக்ரைன் சென்று கருத்தரிப்பு செய்து கொண்டார். "சிசேரியன்" மூலம் மூன்று ஆண் ஒரு பெண் குழந்தைகள் பிறந்தன. கடந்த ஒரு மாதமாக ஒரு ஆண் குழந்தை ஆக்சிஜன் உதவியில் உயிர் வாழ்ந்து வருகிறது. இதர மூன்று குழந்தைகளும் ஓரளவு சுவாச உதவியில் தான் உள்ளனர். எனினும் 65 வயதில் நான்கு குழந்தைகளின் உயிருடன் விளையாடலாமா? என கேள்வி எழுப்பியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரியாய் விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி

**கடந்தவார தொடர்ச்சி.....**

அரசர், வணிகர், செல்வந்தர் முதலானவர்களின் ஆதரவுடன் விகாரைகளையும், பள்ளிகளையும், சேதியங்களையும் (வழிபாட்டு இடம்) நிறுவினர். அத்துடன் இலவச மருத்துவம், இலவச கல்வி மற்றும் ஏழைகளுக்கு உணவு கொடுத்துதவுதல், அங்கவீனர்களுக்கு உதவுதல் என்பவற்றுக்கூடாகவும் மக்களுக்கு மதபோதனை-களை எடுத்துச் சென்றனர். இதனால் சாதிப்பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை பெருமளவில் கொண்டிருந்த தமிழ்நாட்டில் பௌத்தமதம் மிகவிரைவில் பிரபலமானது. இதன் செல்வாக்குப் பற்றிய விபரங்களை நாம் சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிரப்பிரபந்தம், பெரியபுராணம், நீலகேசி முதலிய நூல்களினால் அறியக்கூடியதாக இருக்கிறது. "தமிழ் பௌத்தம்" எறக்குறைய கி.மு 2ம் நூற்றாண்டு முதல் கி.பி 10ம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டில் உயர் நிலை பெற்றிருந்தது.

ஆரம்ப நாட்களில் இலங்கையில் பௌத்தம் பரவ தமிழ்த் தேரர்கள் ஆற்றிய பணிகளே குறிப்பிடத்தக்கதாக இருந்தன. அதில் குறிப்பிடத்தக்கவர்கள் சங்கமித்திரர், ஆசாரிய புத்ததத்த மகாதேரர், ஆசாரிய தருமபாலர், அநுருத்தர், தம்மகீர்த்தீ ஆகியோர் ஆவார். இவர்கள் இலங்கையில் பௌத்த மதத்தினைப் பரப்புவதில் மட்டுமல்ல அதனை அரச செல்வாக்குடன் விரிவுபடுத்த உழைத்தவர்கள். எனவே இலங்கையில் பௌத்தமத ஆரம்ப கால வரலாற்றில் தமிழர்களின் பங்களிப்பு கணிசமாக இருந்திருக்கிறது என்பதனை இது உறுதிப்-படுத்துகிறது. அன்றைய நாட்களில் துறவு பூண்ட தமிழ் அறிஞர்கள் இலங்கைக்கு வந்திருக்காவிட்டால் இன்று சிங்கள பௌத்த சமயத்தை காண வாய்ப்பே இல்லாது போயிருக்கும் என்ற சிங்கள வரலாற்றாய்வாளர் திரு.லயனல் சரத் அவர்களின் கூற்று தமிழர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது.

1980 ஆம் ஆண்டு திருகோணமலை நகரத்துக்கு வடக்கே புல்மோட்டைக்குச் செல்லும் பாதையில் 35 மைல் தூரத்தில் அமைந்திருக்கும் திரியாய் பகுதியில் மயிலன்குளம் என்னுமிடத்தில் ஒரு "தமிழ் பௌத்தம்" சார்ந்த சாசனம் ஒன்று அடையாளம் காணப்பட்டது. கி.பி 1128 இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இச்சாசனம் ஜயபாகு மன்னனின் 18 ஆம் ஆண்டுக்குரியதாகும். அக்காலப்பகுதியில் திரியாய் பகுதியில் இருந்த உதுத்துறை விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி என்னும் பௌத்தப் பள்ளி தமிழ்ப் படைத்தளபதி கணவதி தண்டநாதனார் பாதுகாப்பில் இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது. அந்தச் சாசன விபரம் கீழ்வருமாறு அமைந்திருந்தது.

**ஸ்ரீ அபைய ச**
**லா மேகச் ச**
**க்கரவர்த்திகள்**
**ஸ்ரீ ஜயபா ஹு தே**
**வர்க்கு யாண்டு ப**
**தின் எட்டாவது தம்**
**பால் ஜீவிதமுடைய**
**கணவதித் தண்டநாத**
**நார் உதுத்துறை விக்**
**கிரமசலாமேகர் நால்**
**படையையும் ஆஸ்ரீ**
**த்து பேருமிட்டு விக்**
**கிரீம சலாமேகன்**
**பெரும் பள்ளி திருவே**
**ளைக்காறர் அபையம்**

முதலாம் இராஜராஜன் கி.பி 993 இல் இலங்கையின் மீது படையெடுத்து நாட்டின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அவரைத் தொடர்ந்து இராஜராஜ சோழனின் மகன் முதலாம் இராசேந்திர சோழன் கி.பி 1017-1018 ஆம் ஆண்டில், இலங்கையின் தென்பகுதியான ருகுணு இராச்சியத்தை தன் படைகளை அனுப்பிக் கைப்பற்றினான். இதன் மூலம் முழு இலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான். இதன்மூலம் சோழ நாட்டு மண்டலங்களில் ஒன்றாக மாறிய இலங்கை "மும்முடிச் சோழ மண்டலம்" எனப் பெயர் பெற்றது.

சோழப் பேரரசரின் மூன்றுகை மகாசேனை முதலிய படைகளிலே வேளைக்காரர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். கி.பி 1070 வரை நீடித்த சோழரின் ஆட்சி முதலாம் விஜயபாகு மன்னனால் இலங்கையில் இருந்து விலக்கப்பட்ட பின்னரும் திருகோணமலையில் செல்வாக்கு கொண்டிருந்த தமிழ்ப் படையான வேளைக்காறப் படையே இங்கு விக்கிரமசலாமேகன் நாற்படை என குறிப்பிடப்-படுகிறது. அத்துடன் இதிலிருந்த நாற்படையினர் பௌத்த சமயச் சார்புடையவர்கள் என்பத-னையும் இச்சாசனம் அறியத்தருகிறது.




திரியாயில் இருந்த உதுத்துறை என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி என்ற பௌத்த விகாரை தமிழ்ப் படைத்தளபதி கணவதி தண்டநாதனார் பாதுகாப்பில் இருந்ததை ஆவணப்படுத்தும் இச்சாசனம் இலங்கையில் "தமிழ் பௌத்தம்" தொடர்பான தேடலின் மிகமுக்கிய ஆதாரமாகும்.

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் காணப்படும் புராதான பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த சின்னங்கள் என்பனவற்றிற்கு சிங்கள பௌத்த முலாம் பூசப்படும் இன்றைய சாழல் வருங்காலங்களில் இலங்கையில் தமிழர்களின் வரலாறு தொடர்பாக ஆராய்கையில் "தமிழ் பௌத்தம்" தொடர்பான ஆதாரங்களும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றது.



**முற்றும்..**

**வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்**

---

**திருமலை வி.என்.சந்திரகாந்தி**

## அன்புள்ள என் காதலனே

"ஓம் ஓம் வாருங்கோ..." யாரோ வாசல் படலையில் நின்று கூப்பிடுதுகள்... பெண்குரலாய் கிடக்கு.. போய் பார்ப்பம்.
"ரீச்சரா?... ஏன் வாசலில் நின்று தடுமாறுகிறீர்கள். இஞ்சை நாய் கிய் என்று எதுவும் இல்லை. நேரே வரவேண்டியது தானே?"
"ஐயா வணக்கம்..."என்ற முகவுரையுடன் ஆரம்பித்தாள்.
"வணக்கம் வணக்கம் என்ன விசயம் சொல்லுங்கோ..."
"ஐயாவிடம் நான் பெரிய உதவியொன்றை எதிர்பார்த்துதான் வந்தனான். சுருக்கமாகச் சொல்லுறன். ஐயாவினுடைய கதைகள் என்றால் என்னுடைய ஒரே மகளுக்கு உயிர். ஐயாவினுடைய கதைகளில் குறிப்பிடுகின்ற புத்திமதிகளை அவள் அச்சொட்டாய் பின்பற்றுவாள்... இப்போ எனது மகளுக்கும் எனக்கும் இடையில் ஒரு தகராறு... இதை நீங்கள் மனம் வைத்தால் இலகுவாக தீர்த்து விடலாம்.
"விளங்குது விளங்குது... உங்களுடைய மகளுக்கு புத்தி சொல்லி நான் கதை எழுது வேணும்... அது பத்திரிகையிலை பிரசுரமாக வேணும்... சரிதானே!"
"ஓம் ஐயா ஆனா கதைக்கான கருவை நானே சொல்லுறன். நீங்கள் அதற்கு வடிவம் கொடுக்க வேணும்... ஒரு பாசமிக்க தாய்... ஒரேயொரு மகள். தாயின் விருப்பத்திற்கெதிராக காதலிக்கிறாள்... தாய் பலவிதமான புத்தி கூறுகிறாள்... பல தந்திரோபாய நடவடிக்கைகளையும் எடுக்கிறாள். எதற்குமே மகள் மசியவில்லை. இந்த நிலையில் தாய் தன்னை பணயம் வைக்கிறாள்... என்னுடைய சொற்படி நீ நடக்கா விட்டால்.. உனது காதலை துறக்கா விட்டால் நான் தற்கொலை செய்து விடுவேன் என்று எச்சரிக்கை செய்கிறாள். இந்த நிலையில் மகள் எடுக்கப்போகும் முடிவு என்ன என்று கேட்டு கதையை "சஸ்பன்சிலை" முடித்து விடுங்கோ ஐயா"
பெரிய பெரிய எழுத்தாளரே சிறுகதை எழுதுவது எப்படி என்று கையை பிசைந்து நிற்கின்ற போது... இந்த "ஐந்தாம் கிளாஸ் ரீச்சர்" கரு என்றால் என்ன என்பதை புரிந்து கொண்டு எனக்கே விப்ரித்தது ஆச்சரியமாக போய்விட அதை கதையாக மெருகூட்டி எழுதி பிரசுரித்ததற்காக தபால் செய்தும் விட்டேன்.
எதிர்பார்த்தது போல இரண்டு கிழமைகளில் கதை பிரசுரமானது.
"தாயிடம் மகள் மன்னிப்பு கோரி தனது காதலை தியாகம் செய்வது போல காட்டி முடிவை பூர்த்தி செய்திருந்தது திருப்திகரமாக இருந்தது."
இந்த கதையை வாசித்து விட்டு மகள் மனம் திருந்தி நடப்பதாகவும்... தாய் தனது பாதங்களில் விழுந்து வணங்கி பெருமிதப்படுத்துவது போலவும் மனதில் எண்ணங்கள் உதித்தன.
"ஓர் எழுத்தாளனுக்கு இதை விட வேறு என்ன விருது வேண்டிக் கிடக்குது...
"அன்று மாலையே ரீச்சர் என்னை தனது இல்லத்திற்கு அழைப்பதாக செய்தி வந்தது. பெருமிதத்துடன் துவிச்சக்கர வண்டியில் புறப்பட்ட நான் ஏற்றம் காரணமாக பிரதான ஒழுங்கையில் வண்டியை உருட்டி... குறுக்கு ஒழுங்கைக்கு திரும்பி நிமிரவும் கறுத்த கொடிகள் கண்ணில் பட்டன.



### குட்டிக் கதை

நெஞ்சு திக்கென்றது.
"அம்மா ஏன் தற்கொலை செய்வான்? நானே உயிரை மாய்த்து விடுவம்" என்று அந்தப்பிள்ளை தாறுமாறாக ஏதும் செய்து போட்டுதோ...?
இப்போ பாதை ஏற்றமாக இல்லாவிட்டாலும் கூட நான் வண்டியை உருட்டிய படியே தயங்கி தயங்கி நடந்தேன்...
ரீச்சர் வீட்டுப் படலை வந்த போது தான் மரணச்சடங்கு அடுத்த வீட்டில் என்பது உறுதியாயிற்று. ஒரு சில கணங்களில் நானே என்னுடைய கதையை சாமான்யமாக கணித்து விட்டது கவலையைத் தந்தது. ரீச்சரின் அழைப்பிலும் உபசாரத்திலும் நம்பிக்கையடைந்து அமர்ந்து கொண்டேன்.
"ஐயா நாங்கள் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது சரியாகத்தான் போய்விட்டது" கண் கலங்கி அழுதாள்.
"பிளவுசின் மேல் விளிம்பில் கை வைத்து வருவி எடுத்த கடிதம் ஒன்றை என்னிடம் நீட்டவும்..." நான் பெற்றுக் கொண்டு படித்தேன்.
"அன்புள்ள அம்மா... நான் எனது காதலை தியாகம் செய்யாது போனால் நீங்கள் தற்கொலை செய்து விடப் போவதாக எச்சரித்தது என்னை கடந்த சில நாட்களாக குழப்பி விட்டிருந்தது. ஆனால் இன்று எனது அபிமான எழுத்தாளர் தனது கதையொன்றில் ஒரு பெண் தனது தாயின் மேல் வைத்த பாசம் காரணமாக தனது காதலை துறப்பதாக எழுதியிருந்தார். அந்த ஏழைப் பெண்ணின் மனம் எவ்வளவு துயருற்றிருக்கும் என்பதை நான் எனது நிலையுடன் ஒப்பிட்டு பார்த்தேன். ஆனால் மகளுக்காக உயிரை மாய்த்துக் கொண்ட தாய் பற்றிய வரலாறு ஏதும் உண்டோ? என்னை மன்னிப்பீர்களா?
நான் எனது எதிர்கால கணவனுடனேயே புறப்பட்டு விட்டேன்.
என்றும் உங்கள் அன்பு மகள்" எனக்கு தலையே சுற்றியது. ஏதோ ஒரு உறுத்தல்... நானும் புறப்பட்டேன்... யதார்த்தத்தை தேடி...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 58

# "சினம் தவிர்"

(வி. என். சந்திரகாந்தி)



சமூகத்தில் சம்பவிக்கும் அசாதாரண நிகழ்வுகளுக்கெல்லாம் காரணம் எமக்குண்டாகும் சினமேயாகும். சினம் என்ற சொல்லுக்கு ஈடாக வெகுள்தல், கோபம், ஆத்திரம், வைராக்கியம் ஆகிய சொற்கள் பயன்படுகின்றன. என்றாலும் இவற்றுக்கிடையே சிறு சிறு வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆத்திரம் தன்மட்டத்தில் உண்டாவது. சிறிது நேரத்தில் தானாகவே சமாதானமாகி விடும். கோபம் மற்றவர்கள் மேல் உண்டாகும். சீற்றம், யாராவது சமாதானம் செய்தால் தணிந்து விடும். வைராக்கியம் அதிகம் கடினமானது: நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் தணியும். அல்லது பழிவாங்கும் உணர்வு உண்டாகும்.

கோபத்தில் எடுக்கும் முடிவும் தீர்மானங்களும் சரியாக இருக்குமா? அவற்றின் பலன் நாம் எதிர்பார்க்கும் விளைவுகளை ஒரு போதும் கொண்டு வரமாட்டாது. சொல்லப் போனால் அவை எமக்கு பாதகமான விளைவுகளையே வெளிப்படுத்தும். சரியான விழிப்புணர்வு வரும் போது நாமா இப்படிச்செய்தோம் என்று கவலைப்பட வேண்டிய நிலை மட்டுமன்றி பாதிக்கப்பட்ட பிறரிடம் மன்னிப்புக் கேட்கும் நிலைகூட உண்டாகும்.

எமக்கு ஏன் கோபம் உண்டாகின்றது? பிறிதொருவன் எமக்கு வேண்டியதை செய்யத்தவறினால் அல்லது அதன் நிமித்தம் பொய் கூறினால் எமக்கு கோபம் உண்டாகின்றது. ஏற்கனவே சமூகம் எமக்கு கற்பித்த பாடங்கள் எம்மை அதீதமாக வெகுள்விப்பதுமுண்டு. இந்த சமூகத்துக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்கின்ற வைராக்கிய உணர்வு ஏற்படுகின்றது. அதனால் பழிவாங்கும்படியாக எதையாவது செய்யப்போய் சமூகத்தில் நாம் தனித்து-விடும் அவல நிலை ஏற்படுவதுமுண்டு.

நாம் அனேகமாக எமது கோபத்தை வலியார்மேல் காட்டுவதில்லை. ஒருவன் பணம் படைத்தவன், தைரியசாலி, அடியாட்களை வைத்திருக்கின்றான், காவல்துறையினரிடமும் அறிமுகம் உண்டு என்று தெரிந்தால் எமது ஆக்ரோஷத்தை அடக்கி வாசித்துக் கொள்கின்றோம். மற்றொருவன் ஏழை, பலவீனமானவன், உற்றார், உறவினர் கிடையாது எந்த ஒரு செல்வாக்கும் அற்றவன் என்று எடைபோட்டால் எமது அட்டகாசத்தை இருமடங்காக்கிக் கொள்வது. அங்குதான் நாம் தவறிழைக்கின்றோம். உண்மையில் நாம் அறவழி நிற்பவராயின் ஏழைகள் மேல் வெகுளாமையைக் கடைப்பிடிப்பதே உரிய வழியாகும்.

அதிகமான அதிகாரிகள் தமது கோபத்துக்கு தவறான ஒரு தீர்மானத்தை முன்வைக்கின்றார்கள். ஊழியர்கள் மீது கோபத்தை காட்டாவிட்டால் அவர்களிட-மிருந்து வேலை வாங்க முடியாது என்பதே அது. ஆனால் கோபத்தால் அனைத்துமே நாசமடைகின்றன.



சிலர் சரியான இடத்தில் சரியான நேரத்தில் கோபம் கொள்ள வேண்டும் என்றதொரு விதண்டாவாதத்தை வைத்துக்கொண்டு மெல்லிய இயல்பை உடைய மனைவி மீதும் பணிவையே சிரம் மேற்கொண்ட தம் பிள்ளைகள் மீதும் தமது கோபத்தை காட்டுவர். பலம் கொண்டவர்கள் மீது காட்டும் கோபம் உடனடியாகவே பதிலுக்கு தண்டனையை வழங்குவது போலல்லாவிட்டாலும் செல்லிடத்துக் கோபம் இப்பிறவியில் பழியையும் அடுத்த பிறவியில் பாவத்தையும் வழங்கவல்லது.

சிலர் தமக்கு பிறர் மேல் கோபம் உண்டாகும் போது நாலு வார்த்தை பேசி திட்டினால்தான் தமது ஆத்திரம் அடங்கும் என்று கூறுவார்கள். தமது கோபத்தை தணிப்பதற்காக மற்றவர்களை சீண்டிவிடுதல் எப்படி நியாயமாகும்?. நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். எமது கோப உணர்வு எமது முக மலர்ச்சியையும் அக மகிழ்ச்சியையும் இல்லாமல் செய்து விடும். முகத்தில் மலர்ச்சி இல்லாமல் போனால் மற்றவர்கள் எம்மில் ஏதோ கோளாறு இருப்பதாக கருதி எம்மிடமிருந்து விலகி நடக்க முற்படுவர். எமது உள்மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் இல்லாவிட்டால் நாமே முன்வந்து மற்றவர்களுடன் பழக தயக்கம் காட்டுவோம். எந்த வகையிலும் கோபமானது எம்மை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்துவிடும்.

நெருப்பானது தன்னைச் சேர்ந்தாரை மட்டுமே எரிக்கும். ஆனால் கோபமானது ஒரு சங்கிலித்தொடர் போல விடயத்துடன் சம்பந்தப்படாத-வர்களையும் பாதிக்கும்.

முதியோர் முதல் சிறு குழந்தை வரைக்கும் கோப உணர்வுக்கு உட்படவே செய்கின்றனர். அவர்களது கோபத்தில் எந்தளவு நியாயத்தன்மை இருக்கின்ற-தென்பதை அவரவரே அறிவர். அவர்களது கோபத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு அந்த நியாயம் ஒன்றும் கட்டாயமில்லை. கோபம் கூட நன்மை பயக்கும் சந்தர்ப்பங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் எம்மில் பலருக்கு அநாவசிய கோபம் ஏற்படுவது இயற்கையாக உள்ளது. இதை நாமும் உணரவே செய்கின்றோம். மனைவியை கோபம் கொண்டு திட்டிவிட்டு பின்னர் சிறிது நேரத்தில் கவலை கொள்வதுமுண்டல்லவா? எமது பாசமிகு குழந்தைகளின் குறும்புத்தனங்கள் எல்லை மீறும் போது எமக்கு கோபம் பியத்துக் கொண்டு வருகின்றது. அவர்களை தண்டிக்கவும் செய்கின்றோம். ஆனால் அக் குழந்தைகள் அழுது ஓய்ந்து எம்மேலான கோபத்தை மறந்து ஓடிவரும் போது எமது குற்ற உணர்வு எம்மை வருத்தவே செய்கின்றதல்லவா? அப்படியான அநாவசியமான கோபங்களை நாம் சில உபாயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் தவிர்க்க வேண்டும்.

கோபத்தை தவிர்க்க அதி சிறந்த வழி தனிமையை நாடுவது. நல்ல நூல்களை வாசித்தல். பொழுது போக்கு "வீடியோக்களை" பாரப்பது. நல்ல நண்பர்களுடன் கைப் பேசியில் உரையாடுவது. நல்ல ஆக்கங்கள் பற்றி சிந்தித்தல், கடற்கரை போன்ற இயற்கை அழகை இரசித்தல், இன்னும் சொல்லப்போனால் சிறிது நேர தியானம் அனைத்து கோபங்களையும் போக்கக்கூடிய வல்லமை கொண்டது.

நாம் ஏன் கோபத்தை தவிர்க்க வேண்டும்? கோபமானது கோபம் கொண்டவரையே கொல்லும் திறன் உடையது. கோபமே இந் நாட்களில் பல கொலைகளுக்கும் படுபாதகச் செயல்களுக்கும் அத்திவாரமாக அமைகின்றது. அக் குற்றச் செயல்கள் சட்டத்திற்கு முன் கொண்டு வரப்படும் பொழுது தண்டனையானது உறுதியாகின்றது. எவன் ஒருவன் நிதான புத்தி உடையவனோ, எவன் ஒருவன் கோபத்தை முற்றாக தவிர்க்கின்றானோ அவன் விரும்புவன-வெல்லாம் உடனேயே கிடைக்கப் பெறுவான். எனவே கோபத்தை நாம் நெறிப்படுத்துவது அவசியத்தின் மேல் அவசியம். எமது அகங்காரம் கோபத்துக்கு காரணமாகின்றது. ஒரு பொருளின் மேல் கொண்ட பற்றும் அது கிடைக்காமல் போவதும் கோபத்துக்கு காரணமாகின்றது. நாம் அன்பு பூண்ட நபருக்கு ஏற்படுத்தப்படும் இடையூறை பொறுக்க மாட்டாமல் போதல் ஆத்திரத்தை உண்டு பண்ணுகின்றது. எனவே எந்தெந்த சந்தர்ப்பங்களில் எமக்கு கோபம் உண்டா-கின்றதென்பதை ஆராய்ந்து அறிந்து எமது மனதை சமன் செய்ய வேண்டும்.

நான் அறிந்த ஊர் சண்டியர்கள் இருவர் இருந்தார்கள். இருவரும் சேர்ந்தே அடாவடித்தனங்களில் ஈடுபடுவர். ஒரு நாள் ஒருவனை யாரோ ஒருவன் சீண்டிவிட்டான். அதை கேள்வியுற்ற மற்றவன் தனது நண்பனுக்கு உலக்கை ஒன்றை எடுத்துக் கொடுத்து "அவனை அடித்து விட்டு வா" என்று அனுப்பி வைத்தான் சீண்டியவன் மட்டும் சும்மா இருப்பானா? அவனும் தனது நண்பர்களுடன் ஆயத்தமாக இருந்தான் இவன் சென்றதும் அதே உலக்கையை பறித்து மண்டையில் ஒரு போடு! அநாவசிய கோபம் மரணத்தில் முடிந்தது!

எந்த தீர்மானத்தையும் ஆத்திரம் காரணமாக எடுக்க கூடாது!

# ரகசியத்தின் ரகசியம்

சஞ்சயன் செல்வமாணிக்கம்




மனிதர்களுடன் பழகும்போது மனம் திறந்து பழகுவது என்பது இலகுவானதன்று. என்னால் நண்பர்கள் எல்லோரிடமும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளமுடிவதில்லை. என்னுடன் பழகும் பலர் தங்கள் வேதனைகளை, சோதனைகளை, இரகசியங்களை என்னுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். சிலர் பழகி சில நிமிடங்களிலேயே அவர்களது மனப்பாரங்களை என் முதுகில் ஏற்றிவிடுகிறார்கள்.

அண்மையில் ஒரு வயதான நோர்வேஜியப் பெண் ஒருவர் கணணி திருத்த அழைத்தார். அவருக்கு 70 வயதிருக்கலாம். அவரின் கணணி திருத்தவேலை ஏறத்தாள 10 நிமிடங்களில் முடிந்ததும் 'தேனீர் அருந்திப் போ' என்றார். அந்த தேனீர் அருந்தி நான் அவரிடம் இருந்து புறப்பட ஏறத்தாள ஒன்றரை மணிநேரமாகியது. விடுமுறைக்கு ஒரு நாட்டுக்கு சென்றிருந்த அவரின் மகள், பாலியற் துஸ்பிரயோகத்தின் பின் கொலைசெய்யப்பட்டு சாலையோரத்தில் வீசப்பட்டிருந்த கதையை அவர் பகிர்ந்து கொண்டார். இருபது வருடங்களுக்கு மேலாகியும் அந்நினைவுகளில் இருந்து விடுபட முடியாதிருக்கிறார். நெருங்கிய உறவினரைத் தவிர வேறு ஒருவரிடமும் இதைப் பற்றி பேசியதில்லை என்றும் பேசினால் அவர்களின் ஆயிரம் குறுக்குக் கேள்விகளுக்கு பதில் கூறமுடியாதிருக்கிறது என்றார்.

என்னுடன் பேசுபவர்களிடம் நான் கதை புடுங்குவதில்லை. அதே போல் அவரிடமும் எதுவும் பேசாதிருந்தேன். ம் ம் என்பதைத் தவிர எதையும் கூறத்தோன்றவில்லை எனக்கு. அவரையே பார்த்திருந்தேன். கண்கலங்கி முழுக்கதையையும் கூறிய போதும் என்னால் ஏதும் பேசத் தோன்றவில்லை. அமைதியாய் உட்கார்ந்திருந்தோம். பல வேளைகளில் மௌனத்தின் மொழி பேசப்படும் வார்த்தைகளை விட ஆழமானதாய் இருக்கும் என்பதை அங்கு உணர்ந்தேன்.

ரகசியங்களுக்குள் இருக்கும் சுமை மிகப் பெரியது. அதை சுமந்து திரிபவர்களை அது மழைநீரில் கரையும் மணலைப் போன்று மெது மெதுவாக அரித்துக்கொண்டேயிருக்கிறது. நானும் எனது ரகசியங்களை என்னுள்ளேயே சுமந்துதிரிந்த காலங்களில் அந்தச் சுமையை உணர்ந்திருந்தேன். முதல் முதல் ஒருவரிடம் அதை பகிர்ந்து கொண்ட அன்று உடலின் பாரம் காற்றைப்போலிருந்தது. தூக்கமற்று அலைந்த மற்றைய நாட்களைவிட நன்றாகத் தூங்கினேன், அன்று.

மற்றவர்களின் ரகசியங்களை அறிந்து-கொள்வதற்கான ஆர்வம் மனிதர்களுக்கிடையில் வற்றாத கிணற்றின் ஊற்றைப்போன்று ஊறிக்-கொண்டே இருக்கிறது. தங்கள் ரகசியங்களை மற்றவர்கள் அறியக்கூடாது என்று நினைப்பதும், சிலர் மற்றவர்களின் ரகசியங்களை அறியத் துடிப்பதும் ரகசியத்தின் விசித்திரங்கள். ரகசியங்களின் பொழுது இரவாயிருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

பலர் தங்களின் அளப்பெரிய தியாகங்களைக் கூட அவர்களின் மரணங்கள் வரை அல்லது அதற்குப் பின்னும் இரகசியமாகவே வைத்திருக்கிறார்கள். ரகசியங்களிலும் பல விதங்கள் இருக்கின்றனவோ என்றே எண்ணத் தோன்றுகிறது. ரகசியங்கள் குழந்தைப்பருவத்தில் இருந்து நாம் முதியவர்களாகி இறக்கும் வரையில் எப்போதும் உருவாகக்கூடியவை. எனக்கும் எனது மகள் காவியாவுக்கும் ஒரு ரகசியம் இருந்தது. நாம் வாழ்திருந்த மலைப்பிரதேசத்தில் எமது வீட்டில் இருந்து 10 நிமிட நடைத் தூரத்தில் ஒரு நீர் அருவியும், அதில் இருந்து வழிந்தோடும் சிறிய ஆறும் இருந்தது. வீட்டிற்கு அருகில் இருப்பதால் மகள் தனியே அங்கு போய்விடுவாள் என்ற பயம் தாயாருக்கு. எனவே அடிக்கடி அங்கு போவதை நாம் தவிர்க்கவேண்டியதாயிற்று. என்னுடன் தனியே வெளியே வரும் போதெல்லாம் அடிக்கடி அங்கு செல்வோம். அம்மாவிடம் சொல்வதில்லை என்று எமக்குள் ஒப்பந்தம். ஆற்றருகில் குந்தியிருந்து கல் வீசுவதில் இருந்து என் கையை இறுகப்பற்றியவாறே நீர் பருகுவதும், கால் நனைப்பதும் என்று சில காலம் எமது ரகசியம் காப்பாற்றப்பட்டிருந்தது. பின்பொருநாள் அது ரகசியமற்றுப் போனது.

எனது பதின்மவயதில் இருந்து பல இரகசியங்கள் என்னுடன் இன்றும் வந்துகொண்டேயிருக்கின்றன. அவையொன்றும் ராணுவ ரகசியங்கள் அல்ல. எனது நண்பன் ஒருவனுக்கு எமது ஆசிரியை ஒருவரில் பருவக்கவர்ச்சி வந்தது தொடக்கம், தான் "கப்பலில் வேலைக்கு" போவதை காதலி விரும்பாததால் அதை அவளிடம் சொல்லாதே என்ற நண்பனின் ரகசியங்கள் வரை இன்றும் பல பதின்மகாலத்து ரகசியங்கள் என்னுள் இருக்கின்றன.

ரகசியங்களில் சில ரகசியங்கள் வெளியில் பகிரப்படவே முடியாதவையாகவும் இருக்கின்றன. உற்ற நண்பர்களிடமும் பகிரமுடியாமலும் அவற்றின் கனம் தாங்கமுடியாலும் பலர் இருக்கிறார்கள். சில உறவுமுறைகளும் ரகசியங்களை சுமக்கமுடியாமல் சுமந்துகொண்டிருக்கின்றன. சட்டத்தின் பார்வையில் சரியாக இருப்பினும் சமுதாயத்தின், கலாச்சாரத்தின் பார்வையில் தவறு என்பதால் தங்களின் உறவுகளை ரகசியமாகப் பேணுபவர்களும் இருக்கிறார்கள். இதற்கு உதாரணமாய் நான் அறிந்த, தன் தந்தை வழி வந்த ஒருவரை காதலித்த பெண்ணும், அந்த ஆணும் அனுபவித்த துன்பங்களும், ஏளனங்களும், அலட்சியப்படுத்தல்களும் இருக்கின்றன.

எல்லோரிடத்திலும் ரகசியங்கள் உண்டு. ரகசியங்களை காப்பாற்றுவதும் ஒரு வித ரகசியம் தான். எம்மில் பலர் மனதின் பாரத்தை யாரிடமாவது இறக்கி வைப்பதற்காக அலைந்துகொண்டிருக்கிறோம். எங்களின் பாரங்களை யாரிடமாவது இறக்கிவைத்து, தாங்கொணா கனத்துடன் அலையும் மற்றவரின் சுமைகளையும் இறக்கிவைக்க முயலுவோம், வாருங்கள்.

இன்றைய நாளும் நல்லதே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் "காக்கா முட்டை"

### ரமேஷ், விக்னேஷ் நடிக்கும் இயக்குனர் மணிகண்டனின்



சென்னை குப்பத்தில் வாழும் 2 சிறுவர்கள், சின்ன காக்கா முட்டை மற்றும் பெரிய காக்கா முட்டை. குடும்பத்துக்கு உதவ முடியாத சூழலில் இருக்கும் அப்பா, குடும்பத்தின் மொத்த பாரத்தையும் தன் தோளில் சுமக்கும் அம்மா, பாசமிகு பாட்டி, ரயில்வேயில் வேலை செய்யும் இவர்களின் பெரிய நண்பனான பழரசம், இவர்கள் மட்டும்தான் இவர்களின் சொந்தம். குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை பாதியில் விட்டவர்கள், ஒரு முறை அவர்களின் வீட்டிற்கு அருகாமையில் திறக்கப்பட்ட பிட்சா கடையையும், தொலைக்காட்சியில் வரும் பிட்சா விளம்பரத்தையும் பார்த்த சிறுவர்களுக்கு பிட்சா சாப்பிடவேண்டும் என ஆசை எழுகிறது. அதற்காக தாங்களே அதற்கான தொகையை தயார் செய்ய பல வேலைகளை செய்கிறார்கள். பிறகு அந்த தொகைக்கு பிட்சா வாங்க செல்கிறார்கள். ஆனால் குப்பத்தில் வாழும் சிறுவர்களான இவர்களை உள்ளே விடமறுக்கிறார் கடையின் மேலாளர். அதனால் எற்படும் அவமானம், அதை வீடியோ எடுக்கும் மற்றொரு சிறுவன் அந்த வீடியோ பிறகு Viras ஆக பரவ இதை சாக்காக வைத்து கொண்டு ஆதாயம் தேடும் இரு குப்பத்து இளைஞர்களும் அக்குப்பத்தின் MLAவும். சின்ன பிரச்சனையை ஊதி பெரிதாக்கும் ஊடகம். இப்பிரச்சனையிலிருந்து வெளிவர துடிக்கும் கடை முதலாளி, இதைப்பற்றி எதுவும் தெரியாமல் தங்கள் உலகத்தை மட்டும் ரசித்து கொண்டு இருக்கும் இரு காக்கா முட்டைகள், பிறகு என்ன நடந்தது என்பது தான் கதை!

நடிகர், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் இந்த படத்தில் நடித்த ரமேஷ், விக்னேஷ் இருவருக்கும் இது முதல் படம் போல யாருக்கும் தோன்றாத அளவில் நடித்திருக்கிறார்கள். இவர்களின் தாயாக நடித்த ஐஸ்வர்யா இவ்வளவு இளம் வயதிலேயே தாயாக நடித்து வெற்றியடைந்திருக்கிறார். சிறுவர்களின் பாட்டி, பிட்சாவிற்க்கு பதில் தோசையில் Decorate செய்து தரும் காட்சியில் செம லூட்டி! பல வருடங்களாக சிம்புவை திரையில் காணாத ரசிகர்களுக்கு இவரின் சிறப்புதோற்றம் ஒரு ஆறுதல் பரிசாக அமைந்துள்ளது,

இரு சிறுவர்கள், அவர்களுக்கு இருக்கும் ஆசைகள் அதனால் எற்படும் விளைவுகள் என சாதாரண கதை களத்தை எடுத்துக்கொண்டு மிக அழகாக இந்த காக்கா முட்டையை அடை காத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் மணிகண்டன். மிகக் குறுகலான சேரி வீதிகளையும், கால் நீட்ட முடியாத சிறு வீட்டையும் கூவம் ஆற்றங்கரையையும் மிக எதார்த்தமாக படம் பிடித்துகாட்டியிருக்கிறார்.

மொத்தத்தில் ஒரு எதார்த்த குழந்தைகளுக்கான சினிமாவான இந்த காக்கா முட்டை தமிழ் சினிமாவை கௌரவப்படுத்தும் ஒரு உன்னத படைப்பு!

## விஜய்யை வேணாம் என்ற பிரகாஷ்

விஜய்- பிரகாஷ்ராஜ் இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் அட்லீ இயக்கும் படத்தின் பிரகாஷ்ராஜை விஜய்க்கு தந்தையாக நடிக்க முதலில் கேட்டார்களாம். ஆனால், விஜய் தற்போது அவர் எனக்கு அப்பாவாக நடித்தால் அது நன்றாக இருக்காது என கூறி விட்டாராம். பின்னர் பிரகாஷ்ராஜை தேடி போக, அவர் முடியாது என்று கூறி விட்டாராம்.



## கடுப்பில் நயன்

நயன்தாரா இயக்குனர் விக்னேஷ் சிவனை காதலிப்பதாக கூறப்பட்டது. அத்துடன் இவர்கள் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் சமீபத்தில் வெளிவந்தது, இந்த புகைப்படங்களை விக்னேஷ் சிவன் தான் படத்தின் விளம்பரத்திற்காக வேண்டுமென்றே வெளியிட்டார் என அவர் மேல் கடும் கோபத்தில் இருக்கிறாராம் நயன்தாரா.

லக்ஷ்மனின் இயக்கத்தில் வெளியான "ரோமியோ ஜூலியட்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## பரபரப்பில் நயனின் திருநாள்

படப்பிடிப்பு கும்பகோணம் மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளில் நடந்துவருகிறது. ஆரம்பத்தில் ஜீவா சம்பந்தப்பட்ட காட்சிகளை மட்டும் படமாக்கிகொண்டிருந்தார்கள். நயன்தாரா படப்பிடிப்பிற்கு வந்ததும் ரசிகர்கள் கூட்டமாக குவிய ஆரம்பித்தனர். இதனால் படப்பிடிப்பு சுற்றிய பகுதிகளில் பரபரப்பு நிலவின. இப்படத்தை எஸ்.பி.ராம்நாத் இயக்கிவருகிறார். நயன்தாரா கிராமத்துப் பெண்ணாக நடிக்கிறார். முரட்டுத்தனமான கிராமத்து இளைஞனாக ஜீவா நடித்து வருகிறார். காமெடி, ஆக்ஷன், காதல் கலந்த கதையாக உருவாகிவருகிறது திருநாள்.



## ஸ்ருதியுடன் இணையும் சூர்யா!!

'சிங்கம்' படத்தில், சூர்யா ஜோடியாக அனுஷ்கா நடித்தார். இரண்டாம் பாகத்தில் அனுஷ்கா, ஹன்சிகா ஆகிய இருவரும் ஜோடிகளாக வந்தார்கள். 'சிங்கம்3' படத்தில் அனுஷ்காவுடன் இடத்தைப் பங்கு போட வருபவர் ஸ்ருதிஹாஸன். ராதாரவி, விஜயகுமார், நாசர் என மற்ற கேரக்டர்களும் தொடர்கிறார்கள். சிங்கம், சிங்கம் 2ல் முழுக்க நல்லவராக வந்தார் சூர்யா. ஆனால் மூன்றாம் பாகத்தில் பாதி வில்லன், பாதி நல்லவனாக வருகிறாராம்.

## ஸ்ருதியுடன் இணையும் சூர்யா!!

தென்னிந்திய சினிமாவின் தொடர்ந்து 10 வருடங்களுக்கு மேல் முன்னணி நடிகர்களுடன் மட்டும் நடிப்பவர் த்ரிஷா. இவர் தற்போது கமலுடன் தூங்காவனம் படத்தில் நடித்து வருகின்றார். இப்படம் ஸ்லீப்லெஸ் நைட் என்ற படத்தின் ரீமேக் என கிசுகிசுக்கப்படுகின்றது. த்ரிஷா இப்படத்தில் காவல்துறை அதிகாரியாக நடித்து வருவதாக கூறப்படுகின்றது.

## இரு மனைவியருடன் தனுஷ்

முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்து நடித்து வருகிறார் எமி ஜாக்சன். இந்நிலையில் வேலையில்லா பட்டதாரி படத்தின் படப்பிடிப்பு புகைப்படம் ஒன்று வெளிவந்துள்ளது. இதில் சமந்தா, எமி, ராதிகா, தனுஷ் ஆகியோர் நிற்பது போல் உள்ளது. மேலும், இந்த புகைப்படத்தை வைத்து பார்க்கையில் சமந்தா, தனுஷிற்கு ஜோடியாக நடிப்பது போல் தெரிகிறது. எமி, காமெடி நடிகர் சதீஷுக்கு ஜோடியாக இருப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இல்லை இரண்டு மனைவி கதையா? இது என கிசுகிசுக்கப்படுகிறது.



## குமுறும் "ஷாம்"

'எந்தவித சினிமா பின்னணியும் இல்லாமல் வந்தவன் நான். என்னை குருநாதர் ஜீவா அறிமுகப்படுத்தினார். அவரும் திடீரென காலமாகிவிட்டார். கைதுாக்கி விட யாருமில்லை. கீழே தள்ளிவிட நிறைய பேர் இருக்காங்க' என உருக்கமாக கூறியுள்ளார் ஷாம். தற்போது இவர் 'ஒரு மெல்லிய கோடு' என்ற படத்தில் நடித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## WhatsApp இல் இவ்வளவு இருக்கா?

WhatsApp

வாட்ஸ் அப் செயலியை நீங்கள் தினமும் பயன்படுத்தினாலும் அவைகளில் சில அம்சங்கள் இதோ:

**ஆர்ச்சிவ் சாட்** (Archive chat)
இந்த அம்சம் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு சாட்டினை தற்காலிகமாக மூடி வைத்து அதனினை பின்னர் பயன்படுத்த வழி செய்யும். இதை மேற்கொள்ள நீங்கள் மறைக்க விரும்பும் சாட்டினை அழுத்தி பிடித்து ஆர்ச்சிவ் சாட் பட்டனை க்ளிக் செய்தால் போதுமானது.

**ம்யூட் க்ரூப் சாட்** (Mute Group chat)
சில சமயங்களில் க்ரூப் சாட்களின் நோட்டிபிகேஷன்கள் வெறுப்பேற்றலாம், அது போன்ற நேரங்களில் Menu button - Mute Button - Group Name - ஐ க்ளிக் செய்யலாம்.

**லாஸ்ட் சீன்** (Last seen)
நீங்கள் கடைசியாக வாட்ஸ் அப் பயன்படுத்திய நேரத்தினை வாட்ஸ் அப் தானாகவே காண்பிக்கும், இதை நிறுத்த Settings-- Account -- Privacy --Last seen Option- ஐ க்ளிக் செய்து Nobody என்ற பட்டனை க்ளிக் செய்தால் போதுமானது.

**ஷார்ட்கட்** (Shortcut)
சாட் மெனுவினை அழுத்தி பிடித்தால் அவை ஷார்ட்கட்டாக ஹோம் ஸ்கிரீனில் தெரியும். ஒரு வேலை சைனோஜென் இயங்குதளத்தினை பயன்படுத்தினால் செயலியை டிராக் செய்து தனி ஃபோல்டரில் பாஸ்வேர்டு செட் செய்தும் வைத்து கொள்ளலாம்.

**ஆட்டோ டவுன்லோடிங்** (Auto Downloading)
வாட்ஸ் அப் மீடியா ஃபைல்கள் தானாக டவுன்லோடு ஆவதை தடுக்க செட்டிங்ஸ் -- சாட் செட்டிங்ஸ் -- மீடியா ஆட்டோ டவுன்லோடு என்ற ஆப்ஷனை க்ளிக் செய்து கொள்ளலாம்.

**குறுந்தகவல்** (Message)
நீல நிற அம்பு குறி தெரிந்தால் உங்களது குறுந்தகவல் படிக்கப்பட்டு விட்டது என அர்த்தமாகும், ஆனால் சரியான நேரத்தினை அறிந்து கொள்ள குறுந்தகவலை அழுத்தி பிடித்து (i) ஐகானை க்ளிக் செய்தால் போதுமானது.

**பேக்கப்** (Backup)
வாட்ஸ்அப் சாட்களை பேக்கப் செய்ய Settings--chat settings-- backup conversation Option - ஐ க்ளிக் செய்தால் போதுமானது.
லாக் வாட்ஸ்அப் தகவல்களை பாதுகாப்பாக வைக்க சந்தையில் கிடைக்கும் செயலிகளை கொண்டு வாட்ஸ் அப் செயலியை லாக் செய்து கொள்ளலாம்

**புகைப்படங்கள்** (Photos)
வாட்ஸ் அப் புகைப்படங்களை கேலரி அல்லது கமெரா ரோலில் வைத்து கொள்வது சில சிலருக்கு பிடிக்காமல் இருக்கும். அவ்வாறானவர்கள் புகைப்படங்களை வாட்ஸ்அப் செயலி மூலம் மறைத்து வைத்து கொள்ளலாம்.

**போன் நம்பர்** (Phone number)
சிம் கார்டுகளை புதிதாக மாற்றும் போது வாட்ஸ் அப் செயலியை அன் இன்ஸ்டால் செய்து மீண்டும் இன்ஸ்டால் செய்ய வேண்டாம், மாற்றாக Settings -- Account -- Change Number Option-ல் புதிய நம்பரை என்டர் செய்து பயன்படுத்த ஆரம்பிக்கலாம்.

## செல்பியிலும் உலக சாதனை




உலக சாதனை நிகழ்த்துவதற்கு விருப்பம் இல்லாதவர்கள் உலகத்தில் இல்லை என்றே கூறலாம். இதற்காக அதிகளவானவர்கள் மூளையைக் கசக்கி பிழிந்து வினோத முறைகளில் சாதனை நிழத்த முயற்சித்து வருகின்றனர். அதேபோலவே செல்பியின் உதவியுடன் உலகசாதனை முயற்சி ஒன்று மெக்ஸிகோவில் இடம்பெற்றுள்ளது. இச்சாதனைக்காக சுமார் 2,000 பேர் ஒன்று கூடியிருந்தனர்.

OTHER

## கோப்புக்களின் வகைகளை அறிய

கோப்புக்களின் வகை[illegible]ile types) அவற்றின் Extensionஐ கொண்டு அறிய ஒரு அருமையான இணைய தளம் உண்டு. அதாவது Psd, mp3, mov என்பவற்றில் உள்ள மூன்று ,எழுத்து வடிவங்களை வைத்து ஒருகோப்பின் வடிவத்தை தீர்மானிக்கலாம்.
ஒரு குறிப்பிட்ட கோப்பின்வகை (File type) நாம் அறிந்திருக்காவிட்டால் (unknown type) அல்லது நமது கணினியில் இருக்கும் அல்லது மின்னஞ்சலிலோ வரும் சில கோப்புகள் (Files) எமக்கு கேள்விப்பட்டதாக தெரிவதில்லை. இதை வைரஸ் என சில வேளைகளில் நாம் பயப்படலாம். ஆனால் அதன் Extensionஐ கொண்டு எந்த கோப்புவகை (File types) என கண்டுபிடித்து மேலதிக தகவல்களை பெற ஒரு தேடுபொறி உள்ளது (Search Engine).
இந்த தளத்திற்கு சென்று Extension ஐ மட்டும் கொடுத்து தேடினால் போதும் உடனே அதைப்பற்றிய சகல விபரங்களையும் அறியத்தரும். இங்கு சுமார் 2000 க்கு மேற்பட்ட Extension க்குரிய பதிலை தளம் கொண்டுள்ளது.





## கூகுள் லைட்




கூகுள் சர்ச் லைட் மூலம் நான்கு மடங்கு வேகமாக தேடல்களை மேற்கொள்ள முடியும் என கூகுள் அறிவித்திருக்கின்றது.
வாடிக்கையாளர்கள் கைபேசியில் இணையதளத்தினை பயன்படுத்தும் போது அதன் வேகம் குறைந்தால் இந்த புதிய அம்சம் தானாக பக்கங்களை எளிமையாக்குவதோடு இதன் மூலம் பக்கங்கள் லோடு ஆகும் வேகத்தையும் அதிகரிக்க முடியும்.


## இலகுவில் கலோரிகளை கண்டறியலாம்



மொபைல் சாதனங்களின் உதவியுடன் எடுக்கப்படும் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு உணவுகளிலுள்ள கலோரிகளின் அளவை துல்லியமாக சொல்லக்கூடிய அப்பிளிக்கேஷன் ஒன்றினை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது. Al எனப்படும் இந்த அப்பிளிக்கேஷன் முதலில் உணவின் வகையினை அறிந்து கொள்வதுடன் அதற்கு அடுத்தபடியாக உணவு வைக்கப்-பட்டுள்ள பாத்திரத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு கலோரி-களின் அளவை கண்டறி-கின்றது. இதற்கு HD தரத்திலுள்ள புகைப்படங்கள் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இது துல்லியமானதாகவும், வினைத்திறன் உடையதாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஃபேஸ்புக் கைவிட்ட திட்டம்

முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக் குறைந்த செலவில் மக்களுக்கு இணையத்தள சேவையை வழங்கும் திட்டம் ஒன்றினை இரகசியமாக உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருந்தது. இதற்காக சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஒரு தனியாக சட்டலைட்டினையும் உருவாக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இதற்காக நிதி ஒதுக்கீடு மற்றும் அனுமதி கிடைக்காததனால் இத்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



## ஈமோஜிகள் மூலம் பாதுகாப்பு

தற்போது உலகளாவிய ரீதியில் பிரபலமடைந்து வரும் ஒன்லைன் வங்கிச் சேவையில் கடவுச் சொற்களாக PinCode பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இவற்றில் காணப்படும் பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக எதிர்காலங்களில் ஈமோஜிகள் (Emogis) எனப்படும் குறியீடுகள் பயன்படுத்தப்படவுள்ளன. Pin Code உதவியுடன் 7,290 வகையான கடவுச் சொற்களை உருவாக்கும் அதே சமயத்தில் ஈமோஜிகள் மூலம் மில்லியன் கணக்கான (3,498,308) கடவுச் சொற்களை உருவாக்கிக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயற்கைப் பாதம்

விபத்துக்களில் கால் பாதங்களை இழந்தவர்களுக்கு உதவக்கூடிய வகையில் செயற்கையானதும் உணர்ச்சி உடையதுமான பாதங்களை ஆஸ்திரியா விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
இலத்திரனியல் சுற்றுக்கள் மற்றும் 6 சென்சார்களை உள்ளடக்கிய இப் பாதத்தினால் சிறிய கற்கள் போன்றவற்றினைக் கூட உணர முடியும். இச் செயற்கைப் பாதனமானது 2007ம் ஆண்டு தனது பாதத்தை இழந்த 54 வயதான நபரில் ஆறு மாதங்களாக பொருத்தி பரீட்சிக்கப்பட்டுள்ளது.

## நுளம்பு, வைரசுகளை அழிக்க விமானம் கண்டுபிடிப்பு

ட்ரோன் எனப்படும் சிறிய ரக விமானங்களைத் தயாரிப்பதில் மைக்ரோசொப்ட் நிறுவனமும் இறங்கியுள்ளது. எனினும் இதன் நோக்கமானது நுளம்புகளை அழித்தல் மற்றும் வைரஸ் மூலமான தொற்று நோய்கள் மனிதர்களை தாக்க முன்னரே கண்டறிந்து பாதுகாப்பினை ஏற்படுத்தல் போன்றவற்றிற்காக இவ் விமானம் பயன்படுத்தப்படவுள்ளது. Premonition எனும் திட்டத்தின் ஊடாக இவ் விமானத் தயாரிப்பு இடம்பெறவுள்ளது.
மேலும் ரிமோட்டின் உதவியுடன் இயக்கக்கூடியதாக இருப்பதால் எந்தவொரு இடத்திற்கும் அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# என்னம்மா இப்படிப் பண்றிங்களேம்மா?!!

**- பாலையூற்றான் -**

பிள்ளைகளின் நலன் கருதி சில பெற்றோர் எடுக்கும் சகலதும் வெற்றியளிக்கும் என்று கூறமுடியாது. பெற்றோர் தம் பிள்ளைகள் சிறப்பாக வாழ வேண்டுமென்பதற்காகவே திடீர் திடீரென முடிவுகளை எடுப்பார்கள் அவ்வாறே அவற்றை மாற்றியும் கொள்வார்கள்.

சில பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை தட்டவேமாட்டார்கள் "எல்லாம் எமது நன்மைக்காகவே பெற்றோர் செய்கிறார்கள்" என பெற்றோருடன் ஒத்துப்போவார்கள். ஆனால் சிலர் பெற்றோருடன் முரண்படுவார்கள். அவர்களுக்கு தெரியும் தம் பெற்றோர் என்றுமே தங்களை கைவிடமாட்டார்கள். மேலும் எந்த தவறைச் செய்தாலும் தங்களை மன்னித்து ஏற்றுக்கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கையிலேயே சில பிள்ளைகள் தவறு செய்ய துணிந்து விடுகிறார்கள்.

எவ்விதத்திலும் பிரச்சனைகள் அறவே இல்லை என்று எந்த ஒரு குடும்பத்தையும் சுட்டி காட்ட முடியாது. பிள்ளைகள் அமைதி போக்கை கடைபிடித்து செல்லும் பொழுது பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே எதாவதொரு விரும்பத்தகாத குளறுபடிகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். அச்சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் பெற்றோராக மாறி அவர்களுக்கு புத்தி கூறுபவர்களாக இருப்பார்கள். சில குடும்பங்களில் பிள்ளைகள் எடுக்கும் முடிவுகளுக்கு பெற்றோர் ஒத்து ஊதுவார்கள். அவர்கள் எடுக்கும் முடிவு நல்லதா கெட்டதா என்று அவர்கள் கவலை படவே மாட்டார்கள்.

குமாரி, குமார் இருவரும் சட்டக்கல்லூரி மாணவர்கள். அவர்கள் உறவினர்கள் என்பதால் நட்பில் மிக நெருக்கம் காணப்பட்டது. குமாரி மிகவும் அழகானவள் என்பதால் சட்டக்கல்லூரியில் சகலரது பார்வையும் அவள் மேல் இருந்தாலும் எந்த ஒரு மாணவனும் அவளை நெருங்க அஞ்சினர். அதற்கு காரணம் குமார் பாதுகாப்பு கவசமாக செயற்பட்டதே. அவன் அழகில் சற்று மங்கலாக காணப்பட்டாலும் குமாரி அவனின் சொந்த முறைப்பெண். திருமணம் செய்வதாகில் அவன் அவளைத் தான் திருமணம் செய்ய வேண்டும்.

குமாரி அழகில் மாத்திரம் அங்கு முன்னிலை வகிக்கவில்லை. படிப்பிலும் முன்னிலை வகித்து வந்தாள். ஆனால் குமார் படிப்பில் மிகவும் மந்த கதியாகவே இருந்து வந்தான். சட்டக்கல்லூரியில் பாடங்களும் அதிகம். அவ்வாறு பரீட்சைகளும் அதிகம். அதனால் அவனால் ஒரே தடவையில் சித்தி பெற முடியவில்லை. மேலும் அவர்கள் இருவரினதும் தந்தையார்கள் கல்வி கற்றவர்கள். இருவரும் உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள். குமாரியின் தகப்பனார் அரசதிணைக்களம் ஒன்றில் பணிப்பாளராகவும், குமாரின் தந்தை ஓர் உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றி இருந்தார்கள். குமாரி குறிப்பிட்ட காலத்தினுள் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறி, சட்டத்தரணியாக சொந்த ஊரில் தொழில் புரிந்தாலும், குமார் பல தடவைகள் பரீட்சை எழுதி எப்படியோ நீண்ட காலத்திற்கு பின் ஒரு சட்டதரணியானான்.

மிக நெருங்கிய உறவுகளை கொண்ட அந்த இரு குடும்பத்தினர் நல்ல வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்கள் என்பதால் தங்களது சொத்துக்கள் வேறொரு குடும்பத்திற்கு கைமாறக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருந்தனர். தத்தமது பிள்ளைகளுக்கு திருமணத்தை செய்து வைக்க வேறு இடங்களை நாடவில்லை.

இருவரும் தற்பொழுது ஒரே நீதி மன்றத்தில் சட்டதரணிகளாக செயல்பட்டுக் கொண்டிருப்பதால் இருவரையும் திருமண பந்தத்தில் உட்படுத்த அங்கு எந்தவித சிக்கலும் தோன்றவில்லை. அவர்களது திருமணம் மேலும் சிறப்பாக நடைபெற்றது. இரு வீட்டார் இடையில் எந்தவித இழுபறியும் இடம்பெறாமல் இருந்தமைக்கு காரணம் குமாரியும், குமாரும் பாடசாலை காலத்திலிருந்து சட்டக்கல்லூரி வரை ஒருவரை ஒருவர் புரிந்து மிக நெருக்கமாக நடந்து கொண்டதே


மேலும் அவர்கள் இருவர்களுக்கிடையில் 'காதல்' என்ற ஒன்று இருக்கவில்லை. மிக நெருங்கிய உறவினர்கள் என்ற வகையில் மனம் விட்டுப் பழகிக் கொண்டனர். அதுமாத்திரமல்ல அவர்கள் தத்தமது பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொள்ள முயற்சிக்கவும் இல்லை.

இருவரும் சட்டத்தரணிகளாக வர வேண்டும் என்ற ஒரே நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருந்ததால் வேறு திசைகளுக்கு தங்கள் மனதை உலாவ விடுவதில் அநாவசியமாக அக்கரை காட்டவில்லை. எப்படியும் அப்பகுதியில் பிரசித்தமான சட்டதரணியாக தான் விளங்கவேண்டுமென்பதில் குமாரி என்றுமே உறுதியாக இருந்தாள். என்னவாக இருந்தாலும் அவளின் கணவன் அவளுக்கு ஜுனியரே. நேரகாலத்துடன் சட்டக்கல்லூரியை விட்டு வெளியேறி பட்டம் பெற்றுக் கொண்டவள் அவளல்லவா? இருப்பினும் குமார் சட்டதரணி தொழிலை விட விவசாயத் தொழிலில் விருப்பமாக இருந்தான். இவரது தந்தையார் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய வேளையில் எக்கச்சக்மான வேளாண்மை காணிகளை தன் வசப்படுத்த அன்று அவர் தவறவில்லை. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பதற்கு ஒப்பாக மனுசன் பதவியில் இருக்கும் போதே இலவசமாக அரசில் பெறக்கூடிய சகலவற்றையும் சேர்த்து வைத்து விட்டு இறைவனடி போய் சேர்ந்து விட்டார். தொழில் விடயத்தில் குமாரியின் அறிவுரையை அவன் அங்கு கேட்க தயாராக இருக்கவில்லை. அவன் நீதிமன்றத்திற்கு தொழிலின் நிமித்தம் செல்லாது. தனது விவசாய நடவடிக்கைக்காக தனது வயலுக்கே சென்றான். அவனது தாயார் உள்ளிட்ட அவனது சகோதரர்களும் அவனுக்கு ஆரம்பத்தில் புத்திமதி கூறியும் அவன் கேட்கவில்லை.

சட்டதரணி தொழிலை முற்றாக கைவிட்டு வயலுக்குள் தடம்பதித்தான் குமார். முழுநேரமும் விவசாயத்தைப் பற்றிய சிந்தனையே அவனது தலையில் இருந்து வந்தது. அவன் தனது தொழிலை மாற்றிக் கொண்டதால் நாளாந்தம் குடும்பத்தில் கூட பிரச்சினைகள் எழ ஆரம்பித்தன. ஆனால் அவன் தனது முடிவை மாற்றிக்கொள்ளவேயில்லை. குடும்பப்பிரச்சினை ஒரு புறமும் கௌரவப் பிரச்சினை மறுபுறமும் குமாரியை வாட்டியது. அவளது சக சட்டத்தரணிகளின் கேலிக்கையும் கிண்டலும் எரிகின்ற நெருப்பில் "சுப்பர் பெற்றோல்" ஊற்றியது போன்று அவளது மனதில் இருந்த அமைதியை அடியோடு அறுத்தெறிந்தன.

ஆரம்பத்தில் குமாரின் முடிவை அவனது வீட்டார் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும் நாளடைவில் அவனது தொழில் மாற்ற முடிவுக்கு அவனது வீட்டார் இசைவாக்கம் அடைந்தனர். ஆனால் குமாரியாலும் அவளது குடும்பத்தாலும் அவனது தொழில் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் சட்டத்தரணியாக இருப்பது எவ்வளவு பெருமை? என்பதை அவளும் அவளது குடும்பத்தாரும் புரிந்து வைத்திருக்கும் அளவிற்கு குமாரும் அவனது குடும்பத்தாரும் புரிந்து வைத்திருக்க வில்லை.

நாளுக்கு நாள் கணவன் மனைவி இரு சாராரின் குடும்பங்களுக்கு இடையில் குறித்த பிரச்சனையால் பாரிய விரிசல் விரைவாக விரிந்து கொண்டே சென்றாலும் குமார் வீட்டார் அவனுக்கு பக்கபலமாகவே இருந்து வந்தனர். மேலும் அக்குடும்பத்தில் குறித்த பிரச்சனை தொடர்பில் விட்டுக் கொடுப்பிற்கு இடமே இருக்கவில்லை. விவசாயத்தில் ஆசை ஆர்வம் இருக்கலாம். ஆனால் விவசாயத்தைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? குமாரை அவனிடம் வேலை செய்பவர்கள் நன்கு ஏமாற்றி கடன்காரனாக மாற்றி தெருவிற்கே கொண்டு வந்து விட்டனர். மேலும் விவசாயத்தில் பாரிய நஷ்டம் எற்பட்டதே அதற்கு காரணம். சகலவற்றையும் இழந்து ஈற்றில் அவன் தாயார் வீட்டிற்கு சென்று விட்டான். குமாரி தன் குடும்பப் பிளவைப் பற்றி சற்றேனும் சிந்திக்கவில்லை. அவள் இதுவரை தனது முடிவில் திடமாக இருந்ததுடன் குமாருக்கு விவாகரத்து நோட்டீசை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கத் தவறவுமில்லை.



# உண்மையில் ஆவிகள் உண்டா? அதைக் காணலாமா?!!!

**- தன்யா -**

**- - உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை - -**

ஒரு மாத காலப்பகுதிக்குள் திருகோணமலையில் உள்ள சில பாடசாலைகள் வகுப்பு வகுப்பாக கல்விச் சுற்றுலா சென்று வந்தனர்.

அதேபோல் இப்பாடசாலை மாணர்களும் சென்றிருந்தனர். மொத்தமாக மூன்று நாட்களைக் கொண்டமைந்த அவர்களின் பயணம் மிகவும் குதூகலமாக அமைந்திருந்தது. இறுதி நாள் பார்க்க வேண்டியன-வற்றையும் பார்த்துவிட்டு திருகோணமலையை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர் மாணர்களும் ஆசிரியர்களும்.

வரும் வழியில் மாணவர்கள் கடல் குளிக்க ஆசைப்பட அதையும் நிறைவேற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்த வேளையில் இரவு 10 மணியை நெருங்கியது.

அனைவரும் களைப்பில் சோர்ந்து போய் காணப்பட்டனர். அக்குறித்த மாணவன் இறங்க வேண்டிய இடம் வந்ததும் பேருந்து நிறுத்தப்பட்டு அவன் இறக்கப்பட்டான். அப்பொழுது மணி நள்ளிரவு 1.30. அவன் ஊரில் இல்லாதிருந்த இந்த மூன்று நாட்களில் அவர்களின் ஒழுங்கை மூலையில் ஓர் இறப்பு நிகழ்ந்திருந்தது. அவன் திடுக்கிட்டுப் போனான்.

யாராக இருக்கும் என எண்ணியவாறு சற்று உற்றுப் பார்த்த வேளையில் (அவ்வீடு பிரதான வீதியில் அமைந்திருந்தது) வீதியின் நடுவில் மஞ்சள் கடவையுடன் கூடிய சிறு கட்டில் வெள்ளை உருவம் ஒன்று தெரிந்துள்ளது.

அசதியில் இருந்த அவன் கண்கள் விழித்தன. வீதியில் யாருமே நின்றிருக்கவில்லை. அவ்வுருவம் வெள்ளை நிறப் புகை போல ஓர் மனிதன் குந்தியிருப்பதைப் போன்றே இருந்துள்ளது. அது அசைகின்றதா? அல்லது தன்னைப் பார்க்கின்றதா? என சிறிது நேரம் அதையே உற்றுப் பார்த்துள்ளான் அவன். சற்று நேரத்தில் அதன் அழுது கொண்டிருக்கும் முகம் இவனுக்கு தெளிவாக தெரிகின்றது. தனக்குள் தைரியத்தை வரவழைத்துக் கொண்ட அவன் உடன் தன் தாயாருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி வந்து தன்னை கூட்டிச் செல்லுமாறு கூறி தொலைபேசியை அணைத்தான்.

அணைத்த கணம் திரும்பி அதைப் பார்த்த வேளை அது மெல்ல மெல்ல தன்னை நோக்கி வருவதை உணர்ந்தான். அச்சமயம் பார்த்து அவனுடைய அக்கா ஏதோ ஒரு நாள் "தம்பி நீ சிம்ம ராசிக்காரன் உன் கண்களுக்கு அனைத்தும் தெரியும், இருப்பினும் உன்னை நெருங்காது" என கூறியது ஞாபகத்திற்கு வந்தது. சற்று ஆறுதலாக இருந்தது அவனுக்கு.

சற்று நேரத்தில் யாரோ தன்னை அறைந்தது போல் உணர்கின்றான். அதற்கிடையில் தாயைக் காண்கின்றான். பின்னர் நடந்தது எதுவும் தெரியவில்லை.

விடியற்காலை மகன் எழும்பு என பாசமாக தன்னை தாயார் எழுப்பும் போது தான் தான் வீட்டில் இருப்பதை உணர்கிறான். நடந்தவற்றை தாயிடம் கூறியதோடு இங்கே பாருங்க என் கன்னத்தில் தழும்பு உள்ளது என்றான் அம்மாணவன்.

தாய் சிரித்துக் கொண்டு உன்னை அறைந்தது நானடா! கூப்பிட கூப்பிட வெறித்து எங்கேயோ பார்த்து கொண்டிருந்தாய். அது தான் அறைந்தேன். மன்னித்துக் கொள்ளடா. வலிக்கிறதா என சீண்டினாள் தாய்.

அம்மாவுக்காக முகத்தில் புன்னகையை பூத்த அவனுக்கு நடந்தவற்றை மறக்க முடியாதிருந்தது. யாரிடமாவது கூறினால் தன்னை கேலி செய்வார்கள் என பேசாமல் இருந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

இஸ்லாம் நல்ல காரியத்தின் பக்கம் மக்களை நேர்வழிப்படுத்துகின்றது. தவறுகளிலிருந்து தடுக்கின்றது. அதிலும் பெரும்பாவங்களிலிருந்து முற்றாகத் தடுக்கின்றது. ஒருவர் தடுக்கப்பட்ட பாவங்களை செய்து விட்டால், அல்லாஹு தலாஆவிடம் உண்மையான பாவமன்னிப்பு(தவ்பா) செய்வதுடன், சில பாவங்களுக்கு குற்றப்பரிகாரத்தையும் வழங்க வேண்டும். குற்றப்பரிகாரம் (க.ப்.பாரா) என்பது பாவம் செய்த ஒருவரின் பாவத்தை தர்மம், தொழுகை இன்னும் அவை போன்றதைக் கொண்டு பரிகாரம் தேடுவதாகும். குற்றப்பரிகாரம் பாவம் செய்தவரின் பாவத்தைப் போக்குவதால் அதற்கு குற்றப்பரிகாரம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவை தொடர்பாக ஒவ்வொரு முஸ்லிமும் தெரிந்து கொள்வது அவசியமாகையால், வாசகர்களுக்கு சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

குற்றப்பரிகாரத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. பெரும்காவங்களுக்காக இஸ்லாம் கூறும் குற்றப்பரிகாரம்
2. சில வணக்கங்களை செய்வதால், நாம் செய்யும் சிறுபாவங்களை போக்கும் குற்றப்பரிகாரம்



பெரும்பாவங்களுக்கான குற்றப் பரிகாரங்கள்

1. சத்தியத்தை முறித்தவரின் பரிகாரம்

சத்தியத்தை முறித்தவர் பின்வரும் பரிகாரங்களில் விரும்பிய ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

- பத்து எழைகளுக்கு உணவளித்தல்
- பத்து ஏழைகளுக்கு உடை வாங்கிக் கொடுத்தல்
- ஒரு அடிமையை உரிமை விடுதல்.

குறிப்பு: இம் மூன்றில் ஒன்றையாவது ஒருவருக்கு நிறைவேற்ற முடியாவிட்டால் அவர் மூன்று நோன்பு (நாள் விரதம்) நோற்க வேண்டும்.

இது தொடர்பாக இறைவன் தன்னுடைய அருள்மறை குர்ஆனில் ,வ்வாறு கூறுகின்றான். "உங்கள் சத்தியங்களில் வீணானவற்றிற்காக இறைவன்(அல்லாஹ்) உங்களை குற்றம் பிடிக்க மாட்டான்.

தொடரும் .. ..

– இம்தியாஸ் யூஸுப் –

# கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவார தொடர்ச்சி .. ..



இரண்டாவது சிலுவைப்போரும், ஸ்பானிஷ் இன்குயிசிஷன் போன்ற கறுப்பு நிகழ்வுகளும் நடந்தேறின. இந்தியா, இந்தோனேசியா தொடங்கி ஆசிய நாடுகளிலும் கிறித்துவம் பெரிதாய் பரவ ஆரம்பித்தது. இடையே 1500களில் இங்கிலாந்து அரசர் தன் திருமணத்தை ரத்து செய்ய போப்பை கோரினார். அது மறுக்கப்படவே தன்னை ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து விலக்கிக்கொண்டு இங்கிலாந்து திருச்சபை (Church of England) என ஒன்றை ஆரம்பித்தார். மார்ட்டின் லூத்தரின் கத்தோலிக்க எதிர்ப்பும் சேர்ந்து ப்ராட்டஸ்டாண்ட் (Protestant) திருச்சபைகள் வளர ஆரம்பித்தன.

ஒரு வேடிக்கையான நிகழ்வு. மார்டின் லூத்தர் ஒரு கத்தோலிக்க பாதிரியாரிடம் சென்றார். "நூறு ரூபாய் காணிக்கையாய் தந்தால் என் மாமாவின் ஆவி சொர்க்கம் போய்விடுமா?" என்றார். பாதிரியாரும் "ஆமாம்" என்றார். மார்டின் லூத்தரும் காசை பாதிரியாரிடம் தந்தார். கொஞ்ச நேரம் கழித்துவந்து ".:பாதர் என் மாமா ஆவிதான் சொர்க்கம் போயிருக்குமே அந்தக் காசை திருப்பிக் கொடுங்கள் என்றார்".

நல்லதும் கெட்டதுமாய் வளர்ந்து வந்தது திருச்சபை. 1962 முதல் 1965 வரை இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடி இன்று திருச்சபை எப்படி உள்ளதோ அதை வரையறுத்தது. பல கலாச்சாரங்களோடு திருச்சபை இணங்கியது. திருச்சபை கதவை அகலத் திறந்தது. லத்தீன் மட்டுமல்லாமல் மக்கள் தத்தம் மொழியில் வழிபாடுகளில் பங்கெடுக்க முடிந்தது. இரண்டாம் வத்திக்கான் கவுன்சிலின் முக்கிய நோக்கமே "திருச்சபையின் சன்னல்களைத் திறந்துவிட்டு நம்மால் மக்களைப் பார்க்கவும் மக்களால் நம்மை பார்க்கவும் வழி வகுப்பது" என்பதுதான். 20 நூற்றாண்டு கண்ட பல சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பல திருத்தங்களை திருச்சபை செய்தது. இன்றும் பல மாறுதல்களைத் தொடர்ந்து செய்துகொண்டு பயணிக்கிறது கத்தோலிக்கத் திருச்சபை.

இதைவிட குறுகலாக கத்தோலிக்க கிறித்துவத்தின் வரலாற்றை சொல்ல முடியாது என நினைக்கிறேன்.

தொடரும் .. ..

www.tamiloviam.com

வி
ர
ல்
கு
ஸ்

விரல்களைக் கொண்டு ஒருவரின் ஆரோக்கியம் மற்றும் எதிர்காலத்தை அறிய முடியும். விரல்கள், கட்டை விரல், விரல்களின் இணைப்பு, நகங்கள் ஆகியவற்றைப் பார்த்து ஒருவரைப் பற்றி கூறலாம் என ஓர் ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

சுட்டு விரலைக் காட்டிலும் மோதிர விரல் பெரிதாக இருக்கும் பெண்கள் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக திகழ்வர்.

இதிலிருந்து விரலின் வளர்ச்சி எவ்வளவு முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. சுட்டுவிரலை விட மோதிர விரல் பெரிதாக காணப்படுதல் கருறையில் டெஸ்டோஸ்டெரோன் எனும் சுரப்பி மூலமும் நிகழலாம் அல்லது மரபணு மூலமும் நிகழலாம். இருப்பினும் சுட்டு வரலை விட மோதிர விரல் உயரமாக இருக்கும் பெண்கள் சாதனைபுரிர்கள் என்பது திண்ணம்.

ஏனெனில் 25 வயது முதல் 79 வயது வரையான பெண்களைக் கொண்டு இந்த ஆய்வு நடாத்தப்பட்ட வேளையில் 607 பெண்களின் மோதிர விரல்கள் உயரமாக இருந்தமையும் அவர்கள் ஒவ்வொருவரும் சாதனையின் உச்சத்தில் இருந்தமையும் நிருபனமாகியுள்ளது.

சிவந்த உள்ளங்கை ஈரல்நோய்க்கு அறிகுறியாகும். விரல் எலும்பு இணைப்புகளில் வீக்கம் காணப்படுமே ஆயின், வாதமூட்டு வீக்க நோய் உண்டாகும்.

அத்துடன் நகக்கண்களை வைத்தும் ஆரம்பகாலத்தில் வைத்தியம் செய்துள்ளனர்.



இது ஓர் ஒட்ட வீராங்கனையின் கை

# சிரியுங்கோவன்.. ..




எங்க தலைவர் கோர்ட் வாசலை மிதிக்கிறது இதுதான் முதல் முறை!

அதுக்காக அங்கே தனக்கு மாலை மரியாதை செய்யவில்லை என நம்மிடம் வந்து முறைப்பது ரொம்ப ஓவர்!

(பக்கத்தில் நின்றிருந்தவரின் மொபைல் "என்னம்மா இப்படிப் பண்றிங்களேம்மா" என அலறியது.)

கடவுள் : மனிதா, உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?

மனிதன் : இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ரோடு போட்டுக் கொடு சாமி!

கடவுள் : அது கஷ்டமாச்சே... கடல்ல எப்பிடி ரோடு போட முடியும்? வேறு ஏதாவது கேள்!

மனிதன் : அப்படீன்னா என் மனைவி பேச்சைக் குறைக்கணும். எதிர்த்து பேசக் கூடாது...!! அப்படி செய்யுங்க.... சாமி...!!

கடவுள் : அமெரிக்காவுக்கு நோர்மல் ரோடா காப்பெட் ரோடா? .............



# குரு பெயர்ச்சி பலன்கள்

**பொன்னவன் என போற்றப்படக்கூடிய குரு பகவான் வாக்கிய சித்தாந்தப்படி வரும் மன்மத வருடம் ஆனி மாதம் 20ம் திகதி (05.07.2015- ஞாயிற்றுக்கிழமை) சிம்ம ராசிக்கு பெயர்ச்சியாகிறார். தொடர்ந்து 02.08.2015 வரை சிம்ம ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். இக்காலப்பகுதிக்கான பலா பலன்கள் இதோ – – –**



**துலாம் :** நீதி நேர்மையை நிலைநாட்ட வேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் தங்களுக்கு மிக அற்புதமான ஓர் காலப்பகுதியாகும்.

திருமண யதடைந்தர்களுக்கு ரன் தேடி வரும். வம்பு வழக்குகள் தீர்ந்து தங்களுக்கு சாதகமாக தீரும். கணவன், மனைவியிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். எண்ணிய எண்ணங்கள் யாவும் ஈடேறும். திறமைகளுக்கேற்ப பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. வெளிநாடு செல்ல விரும்புவோரின் விருப்பம் நிறைவேறும். உறவினர்கள் ஆதரவுடன் செயல்படுவர். கொடுக்கல் ாங்கல்கள் சரளமாக காணப்படும். இதுவரை விரோதிகளாக இருந்தவர்களும் பகை மறந்து நட்பு பாராட்டுவர். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் தடையின்றி கிட்டும். கல்வியில் திறம்பட்டு பல சாதனைகளை செய்வீர்கள். மார்கழி மாதத்தின் பின்னர் எடல் ஆரோக்கியத்தில் சற்று கூடிய கவனம் எடுக்கவும்.



**விருச்சிகம் :** கடின வேலைகளையும் எளிதில் முடிக்கும் ஆற்றல் கொண்ட அன்பர்களுக்கு சற்று மந்தமான காலப்பகுதியாகும்.

சிறுசிறு இடையூறுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஏற்படும் இடையூறு அனைத்திற்கும் சற்று காலதாமதமாகியேனும் சன்மானமும் கிடைக்கும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். தொழில் ரீதியில் மறைமுக எதிர்ப்புக்களை சமாளித்து இலாபத்தைப் பெறுவீர்கள். பணம் கொடுக்கல் வாங்கல்களில் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தாதிருப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்புக்கள் ஏற்படலாம். உறகளினால் ஏற்படும் பிரச்சினைகளால் மன நிம்மதி குன்றும். பண கொடுக்கல் வாங்கல்கள் சுமாரான நிலையில் காணப்படும். கல்வியில் சற்று மந்தமான நிலையே ஏற்படும். எடுக்கும் காரியங்கள் தடைப்பட்டு வீண் விரயங்கள் ஏற்பட்டாலும் சமாளிக்கும் திறன் உங்களுக்குண்டு.



**தனுசு :** நல்லவர்களிடம் மட்டும் சகஜமாகப் பழகக்கூடிய பண்பு கொண்ட தனுசு ராசியினருக்கும் இம்மாற்றம் ஓர் அற்புதமான அமைப்பாகும்.

பணவரவுகளில் இருந்து வந்த நெருக்கடி குறைவடையும். இருப்பினும் விரயச் சனி நடைபெறுவதால் எதிர்பாராத விரயங்களை சந்திக்க நேரும். குடும்பத்தில் சுப காரியங்கள் கைகூடும். வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும். பொருளாதார உணர்வினால் கடன் குறையும். சிறு ஆரோக்கிய குறைகள் ஏற்படினும் அவை உடன் சரியாகிவிடும். செய்யும் தொழிலில் இருந்து வந்த போட்டி, பொறாமைகள் விலகும். இருப்பினும் பேச்சில் நிதானம் தேவை. ஊதிய உயர்வுகள் கிடைக்கப்பெறும். மேடைப் பேச்சுக்களில் கனம் தேவை. எதிர்பார்த்த பதவிகளை பெறக்கூடிய காலாமாக இது அமைகிறது. முழு மனதோடு எண்ணிச் செய்யும் கருமம் தடையின்றி நிறைேற்றப்படும். மாணவர்கள் கல்வியில் சற்று கூடிய கவனத்துடன் செயலாற்ற வேண்டும். புரட்டாதி தொடங்கி மார்கழி வரை நல்ல யோகமான காலப்பகுதி. மக்களின் ஆதரவு சிறப்பாக காணப்படும். தை மாதமளவில் சிறு சிறு சிக்கல்கள் தோன்றி மறையலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

### கரட் சாலட்

**தேவையான பொருட்கள்**

துருவிய கேரட் - 1 கிலோ, முளைக்கட்டிய பச்சைப்பயறு - ¼ கிலோ, தேங்காய்த் துருவல் - 1 கப், எலுமிச்சம்பழம் - 1, நறுக்கிய குடை மிளகாய் - 50 கிராம், நறுக்கிய கொத்தமல்லி - ஒரு கட்டு, உப்பு, மிளகுப்பொடி - தேவைக்கு ஏற்ப



**செய்முறை**

திருகிய கேரட், முளைகட்டிய பச்சைப்பயறு, தேங்காய்த் துருவல், நறுக்கிய குடை மிளகாய், கொத்தமல்லி இவற்றை ஒன்றாக சேர்த்து கலக்கவும். அதன் மீது எலுமிச்சம்பழத்தை சாறு பிழிந்து சேர்த்து, உப்பு, மிளகுப்பொடி கலந்து மீண்டும் கலக்கவும்.

### நெல்லிக்காய் சாதம்

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - 2 கப், அரை நெல்லிக்காய் - ½ கப், பச்சை மிளகாய் - 10, தேங்காய் துருவல் - 2 தே.கரண்டி, பெருங்காயம் - 1 தே.கரண்டி, கடுகு, உளுந்து, மஞ்சள்தூள் - தலா ½ தே.கரண்டி, எண்ணெய் - 4 மே.கரண்டி, கறிவேப்பலை – சிறிதளவு, உப்பு - தேவைக்கு

**செய்முறை**

அரிசியை உப்பு சேர்த்து உதிராக வடியுங்கள். பின்னர் நெல்லிக்காய்களை சுத்தம் செய்து விதைகளை நீக்குங்கள். 1 மே.கரண்டி எண்ணெயில் பச்சை மிளகாய் மற்றும் தேங்காய் துருவலை சேர்த்து வதக்குங்கள். பிறகு நெல்லிக்காய், மஞ்சள் தூள், சிறிதளவு உப்பு ஆகியவற்றை சேர்த்து வதக்கி மிருதுவாக அரைத்தெடுங்கள். மீதமுள்ள எண்ணெயில் கடுகு, உளுந்து, பெருங்காயம், கறிவேப்பலை, ஆகியவற்றை தாளியுங்கள். சாதத்தில் நெல்லிக்காய் விழுது, கடுகு ஆகியவற்றை சேர்த்து கிளறுங்கள்.

## முட்டை சாப்பிடலாமா?



தினமும் ஒரு முட்டை சாப்பிடுவது வளரும் குழந்தைகளுக்கு மிகவும் ஆரோக்கியமானது. உடலுக்குத் தேவையான அனைத்து வகையான வைட்டமின்களும் (ஏ, பி, சி, டி, இ) இதில் உண்டு.


1. பிட்னஸ் பயிற்சியை மேற்கொள்ளும் ஆண்கள் அதற்கேற்ற கடுமையான உடற்பயிற்சிகளை மேற்கொள்வதால் டஜன் கணக்கில் முட்டை சாப்பிட்டாலும் அவர்களுக்கு எவ்வித பிரச்சனைகளும் ஏற்படாது.
2. கணனி முன் அமர்ந்து வேலை செய்பவர்கள் ஒரு நாளைக்கு ஒரு முட்டை எடுத்துக் கொண்டாலே போதும். உடல் உழைப்பு அதிகமுள்ள வேலைகளில் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முட்டை சாப்பிடலாம்.
3. மஞ்சள் கருவையும் சேர்த்து முட்டைகளை அதிகமாக சாப்பிடுபவர்களின் உடலில் கொழுப்புச் சத்து அளவு அதிகமாகி, இதய நோய்கள் வரக்கூடும்.
4. முட்டையை அதிக நேரம் சமைக்கக் கூடாது. தண்ணீரில் போட்டு அவித்துச் சாப்பிடும் முட்டையே ஆரோக்கியத்துக்கு உகந்தது.
5. காய்கறிகளை நறுக்கிப்போட்டு, அதில் முட்டையை உடைத்து ஊற்றி ஆம்லெட் தயாரித்தும் சாப்பிடலாம். முட்டையில் இருக்கும் புரதங்களை உடல் எளிதாக ஏற்றுக்கொள்ளும், ஆகவே முட்டை சாப்பிடுங்கள்.

## கொடியிடை தேவையா – இதோ சில டிப்ஸ்??

**அழகு குறிப்பு**


கொடியிடை என்பது... அழகின் அடையாளம் என்பதைவிட, ஆரோக்கியத்தின் அடையாளம் என்பதுதானே உண்மை. எனவே, அத்தகைய இடையை நாமெல்லாம் பெற வேண்டாமா? இதோ உங்களுக்கான டிப்ஸ்!

- காலையில் டீ, காபி குடிப்பதைத் தவிர்த்து, சுடு தண்ணீரில் எலுமிச்சைச் சாறு மற்றும் தேன் கலந்து குடிக்கலாம்.
- பூசணிக்காய், வாழைத்தண்டு இவற்றுக்கெல்லாம் கெட்ட நீரை வெளியேற்றும் தன்மை அதிகம். எனவே, ஒரு நாள் வாழைத் தண்டு சாறு, மறுநாள் பூசணிக்காய் சாறு என்று மாற்றி மாற்றி வெறும் வயிற்றில் அருந்தலாம்.



- நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்களைச் சாப்பிடலாம்.
- எண்ணெயில் பொரித்த உணவுகளை அறவே தவிர்க்கலாம். வேக வைத்த உணவுகளைச் சாப்பிடுவது நல்லது. நார்ச்சத்து நிறைந்த காய்கறிகளை அதிக அளவு சேர்த்துக் கொள்ளலாம்.
- அதிக கலோரி உள்ள உணவுப் பொருட்களைத் தொடவே வேண்டாம். நொறுக்குத் தீனி ஆசையைத் தடுக்க முடியாவிட்டால்... அவல், அரிசிப்பொரி, காய்கறி சாலட் சாப்பிடலாம்.
- சாப்பிட்டு முடித்தவுடன் 10 நிமிடங்கள் கழித்து சுடுதண்ணீர் அருந்தலாம்.
- தினமும் உணவில் 2 டீஸ்பூன் "கொள்ளு சேர்ப்பது, உடலில் அதிக கொழுப்பு சேர விடாமல் தடுக்கும்.
- டி.வி பார்த்துக் கொண்டே சாப்பிடுவது கூடாது. இதனால், சாப்பாட்டின் அளவு தெரியாமல் போய்விடும்.
- தினமும் ஒரு சிறிய வெங்காயத்தைப் பச்சையாக சாப்பிடுவது, ரத்தத்தில் தங்கியிருக்கும் கொழுப்பை சரிசெய்துவிடும்.
- எப்போதும் உணவை மென்று சாப்பிடவும்.
- சோடா கலந்த குளிர்பானங்கள் குடிப்பதைத் தவிர்க்கவும். வாயுத் தொல்லை அதிகமானால் இடுப்பு எடையும் அதிகமாகும்.

## டிசைன்ஸ்



## குறுக்கெழுத்து புதிர் 064

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | தி | | | ■ | 20 |
| 3 | மௌ | 4 | | 18 | 19 | | ■ | |
| 5 | 6 | | 22 | ல் | | ■ | 7 | தா |
| | ■ | ■ | | ■ | 8 | 23 | ரை | |
| | 9 | 24 | ன | ம் | | 10 | | |
| 11 ன் | | மி | | ■ | 25 டா | | 26 | 21 |
| 12 | வே | | | ■ | 14 | ர | 13 | |
| 15 | | | | ■ | ■ | | த | |
| 16 | | கா | | | | 17 | | ம் |

### இடமிருந்து வலமாக

1. 2004 இல் ஏற்பட்ட பாரிய அனர்த்தம்
2. நண்பன்
3. பள்ளியில் பெரிய பதவியில் இருப்பவர் - குழம்பியுள்ளது
4. வணிகம்
5. டம்ளர் 6. கைகளில் அணிவது
7. வீதிக்கு இடப்படுவது - திரும்பியுள்ளது
8. புல் + தரை - குழம்பியுள்ளது
9. இதில் முத்தமிடுவர்
10. தாய்ப்பால் அன்றி குழந்தை குடிக்கும் பாலை குறிப்பது
11. இலத்திரனியல் உபகரணங்கள் தாக்கப்படுவது இதனால் - குழம்பியுள்ளது
12. இடியப்பத்திற்குள் இனிப்பு கலவை வைத்து செய்யப்படும் சிங்கள பலகாரம்
13. அரசன்
14. ஓடுதலை ஆங்கிலத்தில் - திரும்பியுள்ளது
15. யாழ்ப்பாணத்தில் வேப்பம் பூவினாலும் இது செய்யப்படும்
16. பீட்சாவை முன்வைத்து அண்மையில் வந்த திரைப்படம்
17. பலத்தை இதற்கும் ஒப்பிடுவர்

### மேலிருந்து கீழாக

1. அரிசி புடைக்கப் பயன்படுவது
5. மட்பாண்ட வேலை செய்பவன்
7. விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள்
9. ............ கலையாதே
11. பாதுகாப்பவன் - கீழிருந்து மேலாக
18. பசு தருவது 19. இக்காலத்திற்குரிய பழம்
20. கண்டங்களுள் ஒன்று
21. வனம்
22. வீடுகளில் காற்றோட்டத்திற்காக அமைக்கப்படுவது
23. மனைவியை இழந்தவன்
24. வெளிச்சத்திற்கு அவசியமானது - கீழிருந்து மேலாக
25. சண்டைக்காரரை (ரௌடி) இவ்வாறும் அழைப்பர்
26. பாசமலரில் காட்டப்படுது ............பாசம்

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 26.06.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான

### புதிர் 063 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | ல | ப் | 2 ப | 17 தி | 3 கா | 18 ர | ம் | ■ |
| ல | ■ | ■ | ல | ல் | ர் | 4 க | 20 தி | ரை |
| 5 ம் | 24 ப | ப் | க | லா | த் | 6 ளை | 21 து | மா |
| 7 பு | டை | ய | ன் | னா | தி | 19 க | ர | ■ |
| 8 தை | ய | 25 ல் | 27 வ | ■ | 9 கை | லா | ய | 22 ம் |
| 10 ய | ப் | பா | ன் | ■ | ■ | 11 ச | ம் | ன |
| ல் | 12 பா | ம | ர | 28 ர் | ■ | ன | ■ | ல |
| 13 ஆ | ங் | 26 கி | லே | ய | 14 ர் | பூ | ம் | 23 ச |
| 15 டை | னோ | ச | ர் | 16 ஆ | ல | ம் | வி | தை |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

செல்வி. ஷெக்கிலா, பெரியகுளம்

எம். பி. அகிலன்
39, கல்லூரி வீதி, திருகோணமலை

செல்வி. செ.றூபி. செபஸ்டியன்
விவேகானந்தா கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# மீண்டும் இருண்ட யுகத்திற்குள் இலங்கை?



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அனைவரும் எதிர்பார்த்தது போலவே இனவாதத்தை முன்னிலைப்படுத்தியவாறு தனது அரசியல் மறு பிரவேசத்தை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். மாத்தறையில் கடந்த 12ஆம் திகதி நடத்தப்பட்ட மஹிந்த ஆதரவு அணியினரின் கூட்டத்துக்கு சென்று உற்சாகப்படுத்தியிருந்த அவர், தாம் பிரதமர் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார். இதே பத்தியில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்த பல விடயங்கள், அப்படியே மாத்தறை கூட்டத்துக்கு மஹிந்த அனுப்பியிருந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. "தாம் ஆட்சியில் இல்லாத காலத்தில் நாட்டில் நிலைமைகள் மோசமடைந்துள்ளதை சுட்டிக்காட்டுவார். வடக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டதையும் நீதிமன்றம் தாக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டுவார். இடைநிறுத்தப்பட்ட சீன அபிவிருத்தித் திட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் முடங்கிப் போயுள்ளதாக கூறுவார். உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் விடுவிக்கப்பட்டதால், பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக புலம்புவார். இப்படி தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளையெல்லாம் குறை கூறி, இவற்றினால் நாடு பேராபத்தில் சிக்கியுள்ளதாக கூறப்போகிறார். கடைசியாக, இந்த ஆபத்திலிருந்து நாட்டை பாதுகாக்க மீண்டும் அரசியலுக்கு வாருங்கள் என்று மக்களும் மகாசங்கத்தினரும் தன்னை கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன் பேரில், பிரதமர் வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக கூறுவார்." இவ்வாறு இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தோம். மாத்தறையில் நடந்த கூட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவினால் அனுப்பிவைக்கப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவினால் வாசிக்கப்பட்ட செய்தியில், இந்த அம்சங்கள் பலவும் இடம்பெற்றிருந்ததை அவதானிக்க முடிகின்றது. அதில் அவர், "அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட மக்கள் விடுத்துள்ள அழைப்பை ஏற்றுக்கொள்கிறேன். 2009இல் எனது அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு உயிர் கொடுக்கும் வகையில் புதிய அரசாங்கம் செயற்படுகிறது. யாழ். குடாநாட்டிலிருந்த 152 இராணுவ முகாம்களில் 59 முகாம்களை மூடியுள்ளனர். தற்போது தடுப்புக்காவலிலுள்ள புலிகளையும் விடுவிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை விடுதலைப் புலிகளுக்கு சார்பானது என்பதால் நாடு ஆபத்தில் சிக்கியுள்ளது. விடுதலைப் புலிகளை தோற்கடிக்க ரஷ்யாவும் சீனாவும் உதவியளித்தன. இப்போதைய அரசாங்கம் சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட எல்லாத் திட்டங்களையும் நிறுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுப்பதை தடுப்பதற்கு மக்கள் முன்நோக்கிவரத் தயாராகவேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறார். அதாவது, நாடு விடுதலைப் புலிகளின் கைகளுக்குள் சென்றுகொண்டிருக்கிறது, பேராபத்து சூழ்கிறது, காப்பாற்ற வரப்போகிறேன் என்ற தொனியிலேயே மஹிந்தவின் செய்தி அமைந்திருக்கிறது.



முன்னாள் ஜனாதிபதி விடுதலைப் புலிகளையும் இனவாதத்தையும் முன்னிறுத்தியே அடுத்தகட்ட அரசியலை ஆரம்பிக்கப்போகிறார் என்பது ஏற்கெனவே தெரிந்த விடயம். அதனாலேயே பல விடயங்களில் தற்போதைய அரசாங்கம், சில நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கியது. அல்லது பிற்போட்டது. அதுபோலவே, மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகைக்கு துணை போகக்கூடாது என்ற பயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒதுங்கி நின்றது. அடக்கி வாசித்தது. இருந்தாலும், மஹிந்த தனது அரசியல் தந்திரோபாயத்தை மாற்றிக்கொள்ளாமலேயே, தனது அரசியல் நகர்வை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளார். மஹிந்தவுக்கு இவற்றை விட்டால் வேறு வழியினூடாக அரசியலில் தலை எடுக்கமுடியாது. அவரால் விடுதலைப் புலிகள், இனவாதம் ஆகியவற்றை வைத்தே அரசியல் செய்யமுடியும். அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நகர்வுகளுக்கு பல சமயங்களில் தற்போதைய அரசாங்கமும் துணையாக மாறிவிட்டது. மாத்தறை கூட்டத்தில் மஹிந்த வைத்த முக்கியமான குற்றச்சாட்டுக்களில் ஒன்று, யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்த 152 இராணுவ முகாம்களில் 59 முகாம்களை புதிய அரசாங்கம் அகற்றிவிட்டது என்பதாகும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த புள்ளிவிரபங்களை கொடுத்தவர் யாழ். படைகளின் தலைமையகத் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த. இது தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்ட புள்ளிவிபரம் அல்ல. அதுபோல, மஹிந்த ராஜபக்ஷ கூறியது போல சரியான புள்ளிவிபரமும் அல்ல. அண்மையில் யாழ். படைகளின் தலைமையகத்தில் கொழும்பிலிருந்து அழைத்துச்செல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பங்கேற்ற ஒரு செய்தியாளர் மாநாடு நடத்தப்பட்டது. அதில், வடக்கில் அதிகளவில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுமத்திய குற்றச்சாட்டை நிராகரிப்பதற்காகவே, ஒரு புள்ளிவிபரத்தை வெளியிட்டிருந்தார் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த. அதன்படி, யாழ்ப்பாணத்தில் 152 இராணுவ முகாம்கள் இருந்ததாகவும் ஆனால், போர் முடிவுக்கு வந்த பின்னர் பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்டு 59 இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருந்தார். தற்போது 93 இராணுவ முகாம்களே இருப்பதாகவும் எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கூறிய புள்ளிவிபரங்களை வைத்து மஹிந்த, புதிய அரசாங்கம் 59 இராணுவ முகாம்களை கடந்த ஜனவரிக்கு பின்னர் அகற்றிவிட்டதாக புலம்பியிருந்தார். மஹிந்த ராஜபக்ஷவுக்கு மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கூறியதன் அடிப்படை அம்சங்கள் புரியவில்லை என்று எவரும் நினைத்தால் அது முட்டாள்த்தனம். அவருக்கு தாம் கூறும் செய்தி தவறானது என்று நிச்சயம் தெரிந்தேயிருக்கும். புதிய அரசாங்கம் 59 இராணுவ முகாம்களை யாழ்ப்பாணத்தில் அகற்றியிருக்கிறது என்ற பரபரப்பான செய்தி மக்களுக்கு சென்று சேரவேண்டும் என்று எதிர்பார்த்தே அவர் அந்த தகவலை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இது சிங்கள மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் நன்கறிவார். அவர் எதிர்பார்த்தது போலவே சிங்கள மக்கள் மத்தியில் அந்தச் செய்தி பரபரப்பாக ஊடுருவியதுடன் ஊடகங்களும் அவ்வாறே செய்திகளைப் பரப்பின. இதனால், இராணுவத் தலைமையகத்தை வைத்து ஒரு மறுப்பு அறிக்கையை வெளியிடவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதையடுத்து, ஜனவரிக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் 59 இராணுவ முகாம்களை மூடியுள்ளதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என்று கடந்த 16ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதன்படி, 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் 59 இராணுவ முகாம்கள் மூடப்பட்டதாகவும் எனினும், இந்த ஆண்டில் எந்தவொரு முகாமும் மூடப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. 2009இல் 7 முகாம்களும் 2010இல் 9 முகாம்களும் 2011இல் 4 முகாம்களும் 2013இல் 15 முகாம்களும் 2014இல் 24 முகாம்களும் மூடப்பட்டதான புள்ளிவிபரங்களை இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ளது. 2012இலும் 2015இலும் எந்தவொரு இராணுவ முகாமும் மூடப்படவில்லை என்பதை அந்த அறிக்கை தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறது. இருந்தாலும், சிங்கள மக்களிடையே, வடக்கில் இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக மஹிந்த ஏற்படுத்தியுள்ள ஒரு விம்பத்தை இந்த மறுப்பு அறிக்கை அழித்துவிடும் என்று கருதுவதற்கில்லை. அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ, பொய்யானதும் போலியானதுமான பிரசாரங்களின் மூலம் சிங்கள மக்களை இலகுவாக ஏமாற்றி அரசியல் நடத்தவே எத்தனிக்கிறார் என்பது இதன் மூலம் உறுதியாகியிருக்கிறது. வடக்கில் ஏற்பட்டுவருகின்ற இயல்பு நிலையை அவரால் சகித்துக்கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருக்கிறது. ஏனென்றால், அவர் வடக்கை இராணுவ ஆட்சியின் கீழ் தான் வைத்திருந்தார். அந்த நிலை இப்போது முற்றாக மாறிவிட்டது என்று கூறமுடியாவிடினும், ஒப்பீட்டளவில் முன்னேற்றங்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை. வடக்கை மீண்டும் இராணுவ அடக்குமுறைகளுக்குள் அடக்கி வைத்திருப்பதற்காகவே அவர் விடுதலைப் புலிகள் என்ற பிரசாரத்தையும் கையில் எடுத்திருக்கிறார். விடுதலைப் புலிகள் மீண்டெழுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவே சான்றிதழ் கொடுத்திருந்தார். ஆனாலும், மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகள் என்ற இல்லாத ஒரு மாய விம்பத்தை இப்போதும் உருவாக்கப் பார்க்கிறார். இதன் மூலம் சிங்கள மக்களை பீதியூட்டி அவர்களின் வாக்குகளை கவர எத்தனிக்கிறார். இவரின் இந்த அணுகுமுறையானது தற்போதைய அரசாங்கத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் அச்சத்தை கொடுத்திருக்கிறது. அதைவிட சர்வதேச சமூகமும் இதையிட்டு சற்று மிரளவே செய்கிறது. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அரசியல் நகர்வு இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடியது. ஒரு பக்கத்தில் இனங்களுக்கிடையில் பதற்றத்தை தணித்து, அமைதியை ஏற்படுத்தி, நல்லிணக்கத்துக்கான சூழலை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, மஹிந்த ராஜபக்'வின் அறிக்கைகள், கருத்துக்கள் இனங்களுக்கிடையில் சந்தேகங்களையும் கோபத்தையும் தூண்டும் வகையில் அமைந்திருக்கிறது. விடுதலைப் புலிகள் விவகாரம், பாதுகாப்பு விவகாரங்களில் மஹிந்த தெரிவித்த கருத்துக்கள், சிங்கள மக்களிடையே அரசாங்கத்தின் மீது மட்டும் கோபத்தை ஏற்படுத்தக் கூடியவையல்ல. அது தமிழ் மக்கள் மீதான சந்தேகத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். அதுபோலவே, மஹிந்தவின் இத்தகைய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே வெறுப்பையும் அதேநேரம், இன நல்லிணக்க முயற்சிகளின் மீதான நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தும். சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான அரசியல் போட்டியானது. இத்தகையதொரு அகன்ற பிளவை தோற்றுவித்து வருகிறது. உண்மையில் இப்போது விடுதலைப் புலிகளோ, நாட்டின் பாதுகாப்பு நிலைமையோ நாட்டின் முக்கியமான பிரச்சினை அல்ல. நாட்டை முன்னேற்றுவதற்கான கொள்கைகளை முன்னிறுத்தவேண்டியதே அவசியமானது. ஆனால், அதையிட்டு மஹிந்த கவலைப்பட்டதாக தெரியவில்லை. அவரது குறி எப்படி சிங்கள மக்களின் ஆதரவை குறுக்கு வழியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகவே இருக்கிறது. இனவாதத்தை தூண்டுவதன் மூலம் சிங்கள மக்களை இலகுவாக தன்பக்கம் திருப்பலாம் என்று அவர் வலுவாக நம்புவதால், இந்த வழியை தெரிவு செய்திருக்கிறார். அவரது இந்த வழிமுறையை யாராலும் தடுக்க முடியாது. ஆனால், இதன் விளைவை ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவு அனுபவிக்க நேரிடும். இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிந்து ஆறு ஆண்டுகளாகியுள்ளன. ஆனாலும், அமைதி இன்னமும் தோன்றவில்லை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்-பட்ட ஒரு விடயமாகியுள்ளது. இலங்கையில் நிலையான அமைதியை தோற்றுவிக்க வேண்டுமானால், சிங்கள இனவாதம் வலுக்குன்றவேண்டும். மஹிந்தவின் மீள் அரசியல் பிரவேசம் என்பது அதற்கு மாறான விளைவையே கொடுக்கும். அதாவது, சிங்கள இனவாதத்தை மேலும் வலுப்படுத்தவே அவர் முனைகிறார். தெற்கில் இனவாதம் கூர்மைப்படுத்தப்படும்போது, இயல்பாகவே நல்லிணக்கச் சூழல் மறைந்துபோகும். அத்தகைய நிலையை நோக்கி நாட்டை நகர்த்துவதே மஹிந்தவின் இலக்காகத் தெரிகிறது. தாம் சிறுபான்மையின மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்பதை மஹிந்த மறந்துவிடவில்லை. அத்துடன், இனிமேலும் சிறுபான்மையின மக்களின் ஆதரவை பெறமுடியும் என்ற நம்பிக்கையும் அவரிடத்தில் இல்லை. எனவே, அவர் சிங்கள இனவாதத்தை கூர்மைப்படுத்துவதன் மூலமே தனது அரசியல் அடித்தளத்தை உறுதிப்படுத்த முடியும் என்று கருதுகிறார். இது சிறுபான்மையின மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு ஆபத்தான அறிகுறியாகவே இருக்கும். மஹிந்தவின் மீள்வருகை என்பது இலங்கையை மீண்டும் இருண்ட யுகத்துக்கு கொண்டுசெல்வதாகவே அமையலாம். அதனையே அவரது இப்போதைய நகர்வுகளிலிருந்து உய்த்துணர முடிகிறது.


– –கே.சஞ்சயன்– –

- www.tamilmirror.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்




01. உருவிலுள்ள சதுரம் ABCD யில் DX = XY = YC = AW எனின், நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு சதுரம் ABCD யின் பரப்பளவின் என்ன பின்னம்?

02. சதுரமொன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 5அலகுகள் ஆகும். அதன் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள்?

03. ரூபா 62 விலையுள்ள பொருட்களுக்காக பணத்தை செலுத்துவதற்கு ரூபா 100 தாளைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப் பணம் யாது?

04. 40கி.மீ / மணித்தியாலம் எனும் கதியில் செல்லும் பேரூந்து ஒன்று இரண்டு மணித்தியாலத்திற்கு செல்லும் தூரத்தைக் காண்க.

05. தீர்க்க. $\frac{x+3}{x-1} + \frac{2x+1}{x-1} = 5$

**பகுதி 02**

01. ஒரு நுளம்பு வலையின் உற்பத்தி விலை ரூ 600 ஆகும். உற்பத்தி செய்யப்படும் ஒரு நுளம்பு வலை 20சதவீத இலாபத்துடன் விற்கப்படுகின்றது.
   1. உற்பத்தி செய்யப்படும் நுளம்பு வலை விற்கப்படும் விலையைக் காண்க.
   மூலப்பொருளின் செலவு அதிகரிப்பதன் விளைவாக நுளம்பு வலையின் உற்பத்தி விலை அதிகரித்தது. முன்னர் பெற்ற அதே 20சதவீத இலாபச்சதவீதத்தை பெறுவதற்கு உற்பத்தி செய்யப்படும் நுளம்பு வலையை ரூபா 792 இற்கு விற்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
   2. மூலப்பொருட்களின் செலவு அதிகரித்த பின்னர் ஒரு நுளம்பு வலையின் உற்பத்தி விலை யாது?
   3. நுளம்புவலையின் உற்பத்தி விலை அதிகரித்த அளவை முந்திய உற்பத்தி விலையின் சதவீதமாகக் காட்டுக.

## பாடம் : வரலாறு

01. இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி ஆரம்ப காலத்தில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிற்கு பரவாமைக்கு காரணம் யாது?
   1. ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் தொடர்புகள் நலிந்த மட்டத்தில் இருத்தல்
   2. இங்கிலாந்து அதன் சொந்த உற்பத்தி பொருள்களை வெளியுலகத்திற்கு திறந்திருக்காமை
   3. ஐரோப்பாவின் பல நாடுகள் குடியேற்றங்களை ஏற்படுத்தும் போட்டியில் ஈடுபட்டமையால் கைத்தொழிலின் மயமாக்கத்தில் கனம் செலுத்தாமை
   4. ஐரோப்பாவின் பல நாடுகள் பொருளாதார ரீதியில் மூடிய கொள்கையை பின்பற்றியமை

02. திரியாயவிலுள்ள திரிகடுசாய விகாரையுடன் தொடர்புபடுவோர்களை மட்டும் காட்டும் விடைத்தொகுதி
   1. சேனன், குத்திகன் 2. தேவநம்பியதீசன்
   3. தபசு, பல்லுக 4. அசேலன், எல்லாளன்

03. பணத்தை முதலீடு செய்யும் முதலாளித்துவ வகுப்பு எனவும் உழைப்பை விற்கும் தொழிலாளர் வகுப்பு எனவும் இரு வகுப்புக்கள் எனவும் எதன் விளைவாக உருவாகின?
   1. கைத்தொழில் புரட்சியின் விளைவாக
   2. குடியேற்ற முறைமையின் விளைவாக
   3. மறுமலர்ச்சியின் விளைவாக
   4. மானிய முறைமையின் விளைாக

04. இரண்டாம் உலகப் போரிலே ஹிட்லருக்குப் பெரும் தீர்க்கமான தோல்வி ஏற்பட்டது பின்வரும் எந்நாட்டில் படையெடுத்த போது?
   1. ரூசியா 2. போலந்து 3. இங்கிலாந்து 4. பெல்ஜியம்

05. சோல்பரி அரசியல் அமைப்பு திருத்தங்களுக்கு ஏற்ப இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் பின்வருனவற்றில் யாது?
   1. நிறைவேற்று குழுவை அமைத்தல்
   2. அரசுக்களகத்தை அமைத்தல்
   3. சர்வசன வாக்குரிமையை வழங்கல்
   4. மூதவையை ஸ்தாபித்தல்

## பாடம் : விஞ்ஞானம்

01. இரும்பு ஒட்சைட்டுகளை பின்வரும் எவ்வாறு இரும்பாக மாற்றும்?
   1. ஒட்சிசன் 2. நைதரசன் 3. காபனீரொட்சைட்டு
   4. காபனோரொட்சைட்டு

02. காலநிலை மாற்றக் கோலங்கள் மாறுதல் தற்கால உலகம் எதிர்கொள்ளும் பிரதான சவாலாகும். இதற்கு அதிக அளவில் பங்களிப்புச் செய்யும் சூழற்பிரச்சினை யாது?
   1. ஓசோன் படை வறிதாதல் 2. அமிலமழை உண்டாதல்
   3. பூகோள வெப்பம் அதிகரித்தல் 4. நற்போசணை ஆக்கம்

03. உப்பளத்தில் உப்பு உற்பத்தி செய்யும் முறையில் கல்சியம் காபனேற்று, கல்சியம் சல்பேற்று, சோடியம் குளோரைட்டு வீழ்படிாதல் முறையே நடைபெறுகின்றது. இவ்வுப்புக்களின் கரைதிறன் பற்றிய சரியான தொடர்பு யாது?
   1. $CaCO_3 < CaSO_4 < NaCl$ 2. $NaCl < CaCO_3 < CaSO_4$
   3. $CaSO_4 < NaCl < CaCO_3$ 4. $CaCO_3 < NaCl < CaSO_4$

04. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாகக் கருதப்படுவன?
   1. சிப்பு, மஞ்சள், பச்சை ஆகியன
   2. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியன
   3. சிவப்பு மஞ்சள், நீலம் ஆகியன
   4. நீலம், பச்சை, மஞ்சள் ஆகியன

05. உயிர்பல்வகைமையின் அழிவிற்கு அதிகளவில் பங்களிப்புச் செய்யும் மனித செயற்பாடு எது?
   1. அளவுக்கு அதிகமாக வேட்டையாடுதல்
   2. வாழிடங்களை அழித்தல்
   3. உயிர்ச்சுவட்டு எரிபொருள்களை எரித்தல்
   4. பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தல்

06. வயலினாலும் புல்லாங்குழலினாலும் ஒரே சுவரத்தை இசைக்கும் போது அதைக் கேட்பவர் அவ்வித்தியாசத்தை இனங்காண முடியும். இவ்வித்தியாசத்தை இனங்காண்பதற்கு உதவும் ஒளியின் இயல்பு யாது?
   1. ஒளியின் சுருதி 2. ஒளியின் உரப்பு
   3. ஒளியின் பண்பு 4. ஒளியின் வீச்சம்

07. யூரியா $[CO(NH_2)_2]$ இலுள்ள காபனின் சதவீதத்தை சரியாகக் குறிப்பது எது? $(C = 12, O = 16, N = 14, H = 1)$
   1. 26.6% 2. 20% 3. 30% 4. 23.3%

08. இலத்திரனியல் சுற்றுக்களுக்காகப் பிரயோகிக்கப்படும் துணையுறுப்பு ஒன்றின் ஒரு முடிவிடம் உடைந்த பின்னரும் இரு எஞ்சிய முடிவிடங்களினூடாகத் துணையுறுப்பு வழியே ஒரு திசையில் மாத்திரம் மின்னோட்டம் பாய்ந்தது என மாணவன் கூறினான். அத்துணையுறுப்பு யாது?
   1. கொள்ளளவி 2. திரான்சிற்றர் 3. ஒளியுணர் இருவாயி 4. தடையி

09. சூரியக் கலம் பயன்படுத்தப்படும் ஒரு சந்தர்ப்பம் அல்லாதது எது?
   1. இலத்திரனியல் கணிப்பான் 2. நகர்ப்புற மின் விநியோகம்
   3. செயற்கைக் கோள்கள் 4. இலத்திரனியல் கடிகாரம்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**சுட்டெழுத்துக்களும் வினாவெழுத்துக்கள் இனவெழுத்துக்களும்**

**சுட்டெழுத்துக்கள்.**

அ, இ, உ என்னும் மூன்றும் சுட்டுப்பொருளில் வரும்போது சுட்டெழுத்துக்கள் எனப்படும். சொல்லில் இருந்து பிரிக்கமுடியாத வகையில் இவ்வெழுத்துக்கள் அமையும்போது அகச்சுட்டு என்றும் பிரிக்கக்கூடிய வகையில் அமையும் போது புறச்சுட்டு என்றும் குறிப்பிடப்பெறும்.

பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் சேய்மையிலுள்ள பொருளை அகரம் சுட்டி நிற்கும். பேசுவோனுக்கு அண்மையிலுள்ள பொருளை இகரம் சுட்டி நிற்கும். கேட்போனுக்கு அண்மையிலுள்ள பொருளை உகரம் சுட்டி நிற்கும்.

**எடுத்துக்காட்டு**

அவன் அவள் அவர்கள்
அது அவை
இவன் இவள் இவர்கள்
இது இவை
உது உவை
} அகச்சுட்டுக்கள்.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## *Grammar*

Ex 01: ***Fill in the blanks in the following text. Use the most suitable word from the box.***

One morning while I was travelling to office by train something interesting happend. I was reading the newspaper and would have missed my stop but for a stranger - a young man who tapped me (1) ................................ the shoulder and told (2) ...................... I had better get (3) ......................... before the train started (4) .................... move.

The following morning I (5) ........................ around for the man, (6) .................. there he was right (7) ....................... front me. I (8) ................... him for his thoughtfulness and (9) ...................... him how he could (10) .................... know which was my (11) ......................

As a daily traveller (12) .................. two years, he said seriously. I (13) ............... you on this train (14) ........................... at 7.44. You get off a 8.00 and I sit down. Sir, you are my reserved seat on the train.

***to and for on seated thanked looked***

***in asked me off see stop possibly***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 25

01. புரதம் அதிகளவில் காணப்படும் உணவு?
    i. ஈரப்பலாக்காய் ii. உருளைக்கிழங்கு
    iii. வற்றாளை iv. சோயாஅவரை

02. பின்வருவனவற்றுள் விலங்குகள் மூலம் பரவிப்பெருகும் வித்து
    i. பொன்னொச்சி ii. வில்பாதிரி
    iii. முருங்கை iv. மரமுந்திரிகை

03. நாளொன்றின் இரவுப்பொழுது தொடங்கும் போது சத்தம் எழுப்பக்கூடிய பிராணி?
    i. சிறுகொசு ii. மின்மினிப்பூச்சி
    iii. சில்வண்டு iv. கறையான்

04. பயிர்ச்செய்கையின் போது பயிர்களுக்குத் தீங்கு விளைவிப்பது
    i. செண்பகம் ii. மழைக்குருவி
    iii. நத்தை iv. தேனீ

05. பித்தளை பாத்திரங்களை மிணுக்கப்பொருத்தமான பொருள்?
    i. பழப்புளி ii. கொறுக்காய் iii. உப்பு iv. எலுமிச்சம்

06. இலங்கைத் தபால் சேவையின் இலச்சினையில் காணப்படுவது
    i. மரங்கொத்தி ii. ஒட்டகம் iii. புறா iv. அன்னம்

07. பனிக்கட்டி கரையாது இருப்பதற்கு அவற்றைப் பின்வரும் எப் பொருளினுள் வைத்தல் வேண்டும்
    i. பொலித்தீன் ii. கடதாசி
    iii. மரத்தூள் iv. வாழையிலை

08. மின்னேரியா குளத்தைக் கட்டிய மன்னன்
    i. மகாசேனன் ii. பராக்கிரமபாகு
    iii. பண்டுகாபயன் iv. தாதுசேனன்

09. தாய்பூனை தனது குட்டியை வாயில் தூக்கிச்செல்ல கௌவுவது?
    i. முதுகில் ii. கழுத்தில் iii. பாதங்களில் iv. வயிற்றில்

10. எலுமிச்சம் பழச்சாற்றில் அதிகம் இருக்கும் போசனை
    I. புரதம் ii. விற்றமின்- C iii. விற்றமின் -A iv. கொழுப்பு


**பகுதி – 02**

01. நீலா ஒரு கொத்தில் 3 பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்கள் செய்தாள் 2 பூக்கள் மீதி வைத்திருந்தாள். எனின் ஆரம்பத்தில் நீலா வைத்திருந்த பூக்களின் தொகை? ..........................................

02. 7m நீளமான நாடா ஒன்றிலிருந்து ஒவ்வொன்றும் 75cm நீளமான துண்டுகள் 4 வெட்டப்பட்டன நாடாவில் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது? ..........................................

03. ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு 3 மாத்திரைகள் வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் எடுப்பதற்கு 36 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானவை?
..........................................


04. . உருவின் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

i.

..........

ii.

..........

05. கீழ்வரும் உருவின் சுற்றளவைக் கணிக்க




---

சென்றவார விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 3 | 02. 4 | 03. 2 (கடுகு) | 04. 3 | 05. 1 |
| 06. 3 | 07. 4 | 08. 2 | 09. 1 | 10. 3 |

பாடல்
1. அப்பா 2. நன்மை செய்பவர் 3. இடர் வரும்போது
4. சகோதரர்கள் 5. இரத்தம் 6. இடர்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு



### குட்டிக் கதை



### தவளையும் சுண்டெலியும்

அது ஒரு அழகிய குளம். அந்த குளத்திற்கு அருகில் ஒரு மரப்பொந்து ஒன்று இருந்தது. அந்த மரப்பொந்தில்



சுண்டெலி ஒன்று வசித்து வந்தது. அந்த சுண்டெலிக்கு குளத்தில் வசித்த தவளையுடன் நட்பு ஏற்பட்டது. தினமும் அந்த தவளையும் எலியும் சந்திப்பது வழக்கம்.

ஒரு நாள் எலி, தவளை நீரில் விளையாடிக் கொண்டிருப்பதை பார்த்தது. உடனே எலி தவளையிடம், எனக்கும் நீச்சல் கற்றுத் தர முடியுமா? என்று கேட்டது. தவளையும், நாளை உனக்கு நீச்சல் நான் கற்றுத் தருகிறேன் என்று கூறிச் சென்றது.

அடுத்தநாள் சுண்டெலிக்கு நீச்சல் கற்றுத்தருவதாக கூறிய தவளை தன்னுடைய காலை எலியின் காலுடன் சேர்த்து ஒரு கயிற்றினால் கட்டிக்கொண்டது .

அப்போது மேலே பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று இவைகளைப் பார்த்து தாக்க வந்தது உடனே தவளை தன் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது. தண்ணீரில் மூழ்கிய சுண்டெலி மூச்சு திணறி இறந்து போனது. அதன் உடல் மேலே மிதந்த போதும் அதனுடைய கால்கள் தவளையுடன் சேர்த்து கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தது.

அந்த சமயம்.... தண்ணீரின் மீது சுண்டெலி செத்து மிதந்ததைக் கண்டு கழுகு கீழ் நோக்கி வந்து அந்த எலியைக் கொத்திக் கொண்டு உயரே பறந்தது. அதனுடன் சேர்ந்து கட்டப்பட்டிருந்த தவளையும் பருந்தின் பிடியில் சிக்கியது.

இரண்டு விருந்து கிடைத்த சந்தோசத்தில் பருந்தானது தவளையையும் கொன்று தின்றது




- நாம் ஒருவரை நண்பராக்கும் முன் அவர் தகுதியானவரா என எண்ணிப்பார்க்க வேண்டும் -

வ.அகிலா,
தரம் - 08



இ.சரணியா, தரம் - 04



**சிந்திக்க ... ...**
விதைத்தவன் உறங்கலாம்
ஆனால் விதைகள்
ஒருபோதும் உறங்குவதில்லை!

**புகழ்தாரே!**

பள்ளிக் கூடமே - நாம்
படிக்கும் கூடமே!
கல்விக்கூடமே - பல
கலையின்கூடமே!

நல்லவர்களாய் - நம்
நாடுபுகழ்ந்திடும்
வல்லவர்களாய் - வர
வைக்கும் பள்ளியே!

மாசு மறுவிலா - நேர்
மாந்தரானவர்
ஆசிரியரே - ஆம்
அருங்கணக்காயர்!

மாணவர்கள்நாம் - குரு
மதிப்பின், அவர்களும்
பேணுவார்நமை - கற்பின்
பெரும் புகழ்தானே!

தாமரைத்தீவான்
ஈச்சந்தீவு- கிண்ணியா

## பொது அறிவு - 27

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. கொழும்பு பரிவர்த்தனை நிலைய உரிமையாளர் யார்? பங்குத் தரகு நிறுவனம்

02. 2014 இல் 7 ஒஸ்கார் விருது பெற்ற திரைப்படம் எது? கிரேவிற்றி

03. எவை, எப்போது, யாரால், எங்கே செய்யப்படும் என வரையறுக்கும் முகாமைப்பணி யாது? திட்டமிடல்

04. கம்பனி ஒன்று கலைக்கப்படும் போது முதலில் முக்கியத்துவம் பெறுபவர்கள் யார்? முன்னுரிமைப் பங்குதாரர்கள்

05. உலகில் வில்வித்தை போட்டியில் மகளிர் தனிநபர் வரிசையில் முதலாம் இடம் பிடித்த பெண் யார்? தீபிகா குமாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடியேற்றத் திருவிழா

### (ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் கோவில்)

திருகோணமலை ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் (சிவன்) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா 15.06.2015 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக சிவாச்சாரியார்கள் கிரிகைகளை மேற்கொண்டு கொடியேற்றியதுடன் தீபாராதனை இடம்பெற்றது. அதன்போது விசாலாட்சி அம்பாள் விஸ்வநாதர் எழுந்தருளியிருந்தனர். அத்துடன் பல பக்த அடியார்கள் இக்கொடியேற்ற பூசையில் கலந்து கொண்டு ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் அருளினைப் பெற்றனர்.

- சேனையூர் நிரூபர் -





## உலக இரத்ததான நிகழ்வு 14.06.2015

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் திருகோணமலைக் கிளையினர் இவ்வருடம் உலக இரத்ததான தின நிழ்வினை வெருகல் மாவடிச்சேனை அ. த. க. பாடசாலையில் நடாத்தினர்.

இந் நிகழ்வின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் திருகோணமலைக் கிளையின் நிறைவேற்று அதிகாரி டாக்டர் என்.ரவிச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகையில் இரத்த தானத்தின் நோக்கம், இதனால் ஏற்படும் நன்மையான விளைவுகள், யார் இரத்தம் கொடுக்கத் தகுதியுள்ளவர்கள், யார் இரத்தம் கொடுக்கும் தகுதி இல்லாதவர்கள் என்ற விபரங்களை எடுத்துரைத்தார்.

அத்துடன், உடலிலுள்ள ஒவ்வொரு இரத்த அணுவும் மூன்று மாத காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தி ஆகி விடும். இது உடலில் எப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழமையான நாளாந்த செயற்பாடு ஆகும். ஆகவே இரத்ததானம் செய்வதனால் உடலுக்கு எந்தவித பாதிப்போ பலவீனமோ ஏற்பட வாய்ப்பேதுமில்லை என எடுத்துரைத்தார்.

இவ் உலக இரத்ததான நிகழ்வில் திருகோணமலைக் கிளை நிருவாகக் குழு உறுப்பினர் திரு.எஸ். ஞானப்பிரகாசம், இளைஞர் அணித் தலைவர் திரு.ஏ.பிரேமராஜா, கிளையின் இளைஞர் அணித் தொண்டர்கள், கிளை நிறைவேற்று அதிகாரி டாக்டர்.என்.ரவிச்சந்திரன், வெருகல் பிரதேசசபைச் செயலாளர் திரு.சாந்தகுமார், மாவடிச்சேனை வித்தியாலய அதிபர் திரு.ஆர்.சச்சிதானந்தம், வட்டவான் பாடசாலை அதிபர் திரு.ரீ.கோணேஸ்வரன், திருகோணமலை பிரதேச இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி, சிரேஷ்ட தாதி, அலுவலர்கள், வெருகல் பிரிவினைச் சேர்ந்த பொது மக்களும் பங்குபற்றினர்.





## இளைஞர் வலுவூட்டல் பயிற்சி நெறி

வாகரை, அம்பாறை ஆகிய இடங்களில் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் திரு.ராஜகோன் ஹரிஹரன் அவர்களின் தலைமையில் இளைஞர் வலுவூட்டல் பயிற்சிநெறி ஒன்று இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நெறி அரசியல் மற்றும் சமூக சேவை அடிப்படையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த பயிற்நெறியில் கலந்துகொண்ட இளைஞர் யுவதிகள் தமது கிராமமட்ட பிரச்சினைகளை எமக்கு தெளிவுபடுத்தி வருவதுடன் தீர்வுத்திட்டம் தொடர்பில் குழுவாக இணைந்து செயலாற்றவும் முன்வந்துள்ளனர்.

குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் முன்பள்ளி சிறுவர்களுக்கான கல்விபோதித்தல், இளஞர்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்பு தொடர்ப்பான தெளிவூட்டல்கள் அடங்கலாக தமிழ்மக்களின் கலை கலாச்சாரம் பண்பாட்டு விழுமியங்களையும் கற்றுக்கொண்டனர்.









## கொம்புமுறி திருவிழா

ஆனித்திங்கள் 22ம் நாளில் பள்ளிக்குடியிருப்பில் கொம்புமுறித் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. இத்திருவிழா மூதூர் பிரதேச வாழ் மக்களால் வெகுவிமர்சையாக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கொருமுறை நடாத்தப்படுவது ஆகும்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தட்சிண கைலாயத்தில் பழைமை வாய்ந்த புனித பூமியான கொட்டியாபுரத்தின் தனித் தமிழ் மக்களைக் கொண்டு மிக நீண்டகால கலாச்சார பின்னணியைக் கொண்ட பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் பந்நூறு வருடங்களாக கிராமிய தெய்வ வழிபாடுகளை தவறாது அதி சிறப்பாக முன்னெடுத்துவரும் இப்பிரதேச வாழ் மக்கள் கொம்புமுறி விளையாட்டினையும் தொடர்ந்து கொண்டாடி வருகின்றனர்.

பள்ளிக் குடியிருப்பில் பார்பெருகு பத்தினி தாயாருக்கு 15.06.2015 (சதுர்த்திதியில்) இரவு சுபவேளையில் ஆரம்பமாகியன இப்பூசை நிகழ்வுகள்.

வடசேரி, தென்சேரி, கட்டைப்பறிச்சான் என அனைத்து பிரதேசத்தினராலும் இவ்விளையாட்டு கொண்டாடப்படுகின்றது என்பது சிறப்பம்சமாகும்.

இந் நிகழ்வானது தங்குவேலியைச் சேர்ந்த தாயம்மன் கோவிலின் பூசகர் இராசையா பத்மநாதன் அவர்களால் நிகழ்த்தி வைக்கப்படுகின்றது.

அத்துடன் இவ்விழாவின் இறுதி நாளின் போது குளிர்த்தி பாடுதல் மற்றும் பொங்கல் நிகழ்வு மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## உற்சவ திருக்கதவு திறத்தல்

மட்டக்களப்பு, சித்தாண்டி விநாயகர் கிராம அருள்மிகு ஸ்ரீ நாககன்னி அம்மன் ஆலய 25வது வருடாந்த உற்சவ பெருவிழா கடந்த வியாழக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து மடைப்பெட்டி எழுந்தருளச் செய்த திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

மஞ்சள், நீர், பாற்குட பவனி சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு அபிசேக ஆராதனை மற்றும் அம்மான் வள்ளி வட்டாரம் என்பன விநாயகர் கிராம மேற்கு வாழ் மக்களின் திருவிழாவில் எதிர்வரும் திங்கட்கிழமை (22.06.2015) இடம்பெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய....

தலைமையில் இக் கட்சி அமையும் சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மகிந்த ராசபக்சவிற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது எனத் திட்டவட்டமாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன அறிவித்துள்ள நிலையில் தனது அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைத்துக் கொள்ள மஹிந்த ராசபக்ச தனியானதொரு மூன்றாவது அணியாகக் களமிறங்கும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபைக் கூட்டம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியபோது மஹிந்த ராசபக்ச இல்லாது கட்சியின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க முடியாது எனக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்ததாக டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்திருந்த நிலையில் அதற்கு எவ்வித வாய்ப்பும் வழங்கப்பட மாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்துள்ள நிலையில் வேறு வழியின்றி சுதந்திரக்கட்சியின் முக்கிய அங்கத்தவர்களுடன் சேர்ந்து தனியான மூன்றாவது அணியாக மஹிந்த ராசபக்ச களத்தில் குதிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அதேவேளை தனியானதொரு தேர்தல் விஞ்ஞாபனமும் மஹிந்த அணியினால் தயாரிக்கப்பட்டுள்ளதாக மிகவும் நம்பத்தகுந்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினரால் இத் தனித் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் குழுவின் ஏனைய உறுப்பினர்களாகச் செயற்பட்டுள்ளதாகவும் அத் தேர்தல் விஞ்ஞாபனம் 19 பக்கங்களை கொண்டது என்றும் நம்பகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் சிங்களப் பிரதேசங்களில் மஹிந்த ராசபக்சவிற்கே ஆதரவு அதிகம் என்பதுடன் அந்த ஆதரவுத்தளத்தில் தற்போதுவரை வீழ்ச்சியேற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## போதை வில்லை....

குறித்த வில்லைகளைப் பாவித்தவுடன் அதிபோதையில் இருக்கும் தனக்கு தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாக இளைஞரொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வில்லைகள் திருகோணமலையின் பல பிரதேசங்களிலும் வினியோகிக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

அண்மையில் பாலையூற்றுப் பிரதேசத்தில் அயல்வீடொன்றை உடைத்துக் களவாட முற்பட்ட பதினாறு வயதுடைய சிறுவனொருவனைக் காவல்துறை கைது செய்ததை அடுத்து அவரது அறையைச் சோதனையிட்ட அவரது பெற்றோர் இவ்வகையான 170 வில்லைகளைக் கைப்பற்றிக் காவல்துறையிடம் கையளித்திருந்தனர்.

இவ்விடயம் காவல்துறைக்குத் தெரிந்திருந்த போதும் அதற்கு எதிரான நடவடிக்கைகள் எதனையும் தற்போதுவரை மேற்கொள்ளவில்லை என கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு நீதிமன்றுக்கு முன்னிலைப்படுத்தப்பட்ட குறித்த சிறுவன் தற்போது நன்னடத்தைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

வில்லைகளை எண்ணிக் கணக்கின்றிப் பாவிக்கத் தொடங்கியுள்ள இளைஞர்கள்

## சித்திரவதை....

அந் நினைவுகூறலை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

"எதிர்வரும் 27ம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் சர்வதேச சித்திரவதைகளுக்கு எதிரான தினத்தை நினைவு கூறும் முகமாக நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு காலை 10மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கான ஒத்துழைப்பைத் திருகோணமலை சிவில் சமூக அமைப்பு எமக்கு வழங்குகின்றது. சித்திரவதைகளை எதிர்க்கும் அனைவரையும் அன்றைய தினம் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றேன்" என்று வண. யோகேஸ்வரன் அடிகள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

## அடையாள அட்....

இதன்படி, பதினைந்து வயதை பூர்த்தி செய்யும் அனைத்து இலங்கைப் பிரசைகளும் தேசிய ஆட்பதிவு திணைக்களத்தில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் செய்ய முடியும்.

மேலும் 18 வயதுக்கும் கூடிய தேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் அனைவரையும் ஆட்பதிவு திணைக்களம் மீள் பதிவு செய்து தரவுப் பட்டியல் ஒன்றை பேண அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## சம்பூர் காணிகள்....

கடந்த 16ம் திகதி இவ்வழக்கு நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது தனது தரப்பு வாதத்தை முன்நிலைப்படுத்திய கேட்வே இண்டஸ்றியின் வழக்குரைஞர்கள் தற்போதைய சனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பானது சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்துள்ளனர்.

இவ்வாதத்தின் படி இக்கம்பனி காணிகளைத் தனக்குரித்தாக்குமாறே பிரதானமாகக் கேட்பதாகத் தெரிய வந்துள்ளது.

இவ்வழக்கில் 3ம் தரப்பாக உள்நுழைந்துள்ள சம்பூர் மக்கள் ஏழுபேர் சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சட்டத்தரணி சம்பந்தனும் அவரது சகபாடி சட்டத்தரணி சுமந்திரனும் இவ்வழக்குகளிற்குச் சமூகமளித்துள்ளனர்.

சம்பூர் காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் மட்டுமே இக்காணிகள் மீள மக்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கான சாத்தியம் முற்றுமுழுதாக இருப்பதாகத் தெரிவித்துள்ள சட்ட வல்லுனர்கள் சட்டரீதியாக வாய்ப்புக்கள் ஐம்பதுக்கு ஐம்பதாகவே உள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களிடையே கடும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ள நடவடிக்கைகளால் மக்கள் இரண்டு குழுவாகப் பிரிந்து சம்பூர் மண் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

அவ்வாறு பிரிந்துள்ள குழுவொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

## மூதூரில்....

வன்மையாகக் கண்டிப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஆறு ஆண்டுகளாக நடந்துவரும் விசாரணைகளின் முடிவுகள் எவையும் வெளியிடப்படாது உள்ள நிலையில் மீண்டும் மீண்டும் அமர்வுகளை நடாத்துவது ஏன் என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தற்போது வரை சுமார் 20,000 முறைப்பாடுகள் இவ்வாறான பல அமர்வுகளின் மூலம் திரட்டப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 2000 முறைப்பாடுகள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கையை இக்குழு சனாதிபதியிடம் வழங்கியிருந்தது. ஆனால் தற்போதுவரை அவ்விடைக்கால அறிக்கை சனாதிபதியால் வெளியிடப்படவில்லை.

விசாரணை அறிக்கையைக் கூட வெளியிட அஞ்சும் இந்த அரசும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இழுத்தடிப்புச் செய்வதாகவே எண்ண வேண்டியுள்ளது. எனவே ஆணைக்குழுவின் அமர்வுகளை எதிர்த்து அவற்றைப் புறக்கணிப்பதே நன்று என அவர்கள் தெரிவித்தனர்.

## மாணவர்கள்....

கணணிகள் மற்றும் அச்சிடு கருவி ஆகியவற்றைத் திருடிச் செல்ல முற்பட்ட வேளை அங்கு காவல்கடமையில் இருந்த வர்கள் கள்வர்களைக் கண்டுள்ளனர். அதனையடுத்து கள்வர் இருவரும் தப்பிச் சென்றிருந்தனர். எனினும் கள்வர்களின் சில அடையாளங்களைக் குறித்துக் கொண்ட காவலர்கள் மறுநாள் அவ்வகையான அடையாளங்களுடன் அலுவலகத்தின் விடுதியில் மாணவரொருவர் நடமாடுவதை அவதானித்துக் காவல்துறைக்கு விபரத்தைத் தெரியப்படுத்தினர்.

காவல்துறை சந்தேகத்தின் பேரில் ஆரம்பத்தில் குறித்த மாணவனையும் பின்னர் மற்றொரு மாணவனையும் கைது செய்து நீதிமன்றில் முன்நிலைப்படுத்தியது.

மேற்படி மாணவர்கள் இருவரும் திருகோணமலையின் பிரபல ஆண்கள் பாடசாலையினர் என்பதுடன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் என்றும்

## கிண்ணியா மீள்குடி....

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வனுமதியானது சனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைவாக இந்த மீள் குடியேற்ற நடவடிக்கை இடம்பெறுவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15ம் திகதி கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் தலைமையில், மாவட்ட அரசாங்க அதிபர் புஸ்பகுமார, உள்ளகப் போக்குவரத்து பிரதி அமைச்சர் எம்.எஸ்.தௌபீக், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம் மஹ்ரூப் அடங்கிய குழுவினர் கண்டல்காடு மற்றும் தளவாய் கிராமங்களை பார்வையிட்டதை அடுத்தே தமிழ் மக்களிடையே இவ்வாறான அசசம் தோன்றியுள்ளது.

குடியேற்றம் தொடர்பாக அதிகாரிகளால் பார்வையிடப்பட்ட பிரதேசங்களுள் மேய்ச்சல் தரைகளும் அடங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ள மக்கள் அம் மேய்ச்சல் தரைகள் ஆண்டாண்டு காலமாக கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலக்களாகவே இருந்துவருவதாகத் தெரிவித்தனர். அத்துடன் கங்கை நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது கால்நடைகள் ஊருக்குத் திரும்பாமல் பாதுகாப்பாக இந்தப் பிரதேசங்களிலேயே பாதுகாக்கப்படுவதாகவும் தெரிவித்த மக்கள் தமது மேச்சல் தரைகள் குடியேற்றத்திற்கு உட்படுமானால் சுமார் ஆறாயிரம் கால்நடைகளின் இருப்பு கேள்விக்குறியாகும் என்றும் தெரிவித்தனர்.

## மாணவன்....

பணப்பரிசையும், 2ம் சுற்று மற்றும் அரையிறுதிச் சுற்று ஆகியவற்றில் இரண்டாம் இடங்களைப் பெற்று இரு வெள்ளிப் பதக்கங்களையும், இறுதிச் சுற்றில் மூன்றாம் இடத்தைப் பெற்று அதற்கான கேடயத்தையும் வெண்கலப்பதக்கத்தையும் தனக்குரிய ரூபா 50000 பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார். இவ்வெற்றிகளால் அவர் பாடசாலைக்குரிய கணனி உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ரூபா 100,000 த்தையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## 600 காவல்....

கருணாவிடம் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்ய சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஐந்து பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

600 பொலிஸார் கொலை சம்பவ விசாரணையை துரிதப்படுத்துமாறு ஓய்வுபெற்ற காவல்துறையினர் சங்கம் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

கிழக்கில் ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது இவ்விசாரணை நடைபெறச் சாத்தியங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்தை பலப்படுத்தும் நோக்கிலான லண்டன் சந்திப்பு

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஒரு தன்னார்வத் குழு மற்றும் சுவிட்சர்லாந்து என்பவற்றின் உதவியோடு சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சரும் கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவரும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் அண்மையில் சந்தித்திருக்கிறார்கள்.

தேர்தல் வரவிருக்கும் பின்னணியில் முன்னய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பை இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் சந்தித்திருக்கிறார். இச்சந்திப்பில் நோர்வேயின் முன்னாள் சமாதானத்துக்கான தூதுவர் சொல்ஹெய்மும் பங்குபற்றியிருக்கிறார். இது ஒரு பகிரங்கப்படுத்தப்படாத உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு என்று கூறப்பட்டாலும் இதில் பங்குபற்றியவர்கள் மற்றும் பங்குபற்றிய நிறுவனங்கள் என்பவற்றைக் கருதிக் கூறின் இது அதிகபட்சம் ஏதோ ஒரு விதத்தில் உத்தியோகபூர்வமானதுதான்.

இச்சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கும் தென்னாபிரிக்க தன்னார்வ நிறுவனமானது தனது அடைவு இலக்காக எதைக் கூறுகிறது என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். எந்த ஒரு நல்லிணக்க முயற்சியும் வெளித்தரப்புக்களில் தங்கியிருக்காமல் உள்நாட்டுப் பொறிமுறைகளுக் கூடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அது.

எனவே இச்சந்திப்பு நிகழ்ந்த நேரம், கலந்துகொண்ட நபர்கள் ஒழுங்கு செய்த நிறுவனங்கள் என்பவற்றை வைத்துக் கூறின் இதை மேற்கு நாடுகளின் காய்நகர்த்தல்களில் ஒன்றாகவே பார்க்க வேண்டியிருக்கும். அதாவது மாற்றத்தைப் பலப்படுத்தும் ஒரு பிரதான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியே இது எனலாம். இப்பொழுது மாற்றத்தைப் பலப்படுத்துவது என்பது மாற்றத்திற்கு எதிராகக் காணப்படும் கடும்போக்காளர்களைக் கட்டுப்படுத்துவதுதான். சிங்கள மக்கள் மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கடும் போக்காளர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால் மாற்றத்தைத் தொடர்ந்து பலப்படுத்தலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

பெரும்பாலான சிங்களக் கடும் போக்காளர்களுக்கு ராஜபக்ஷ தலைமை தாங்குகிறார். எனவே அவரை ஒருவித முற்றுகைக்குள் வைத்திருப்பதன் மூலம் அதாவது அவருக்கு சிறகுகளாவும், கவசங்களாகவும் காணப்படும் ஆட்களை கைது செய்வதன் மூலமோ அல்லது அச்சுறுத்துவதன் மூலமோ அவரை ஒரு கட்டத்துக்கு மேல் தலையெடுக்கவிடாமல் செய்யலாம் என்று மேற்கு நாடுகளும் இந்தியாவும் நம்புகின்றன. அதே சமயம் ராஜபக்ஷவுக்கு விசுவாசமானவர்களை மைத்திரியை நோக்கி கவர்ந்திழுக்கும் பேரங்களும் நடந்தவண்ணமுள்ளன. இவற்றின் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் மாற்றத்தைப் பலப்படுத்தலாம் என்று மாற்றத்தின் பிதாக்களும் பாதுகாவலர்களும் நம்புகிறார்கள்.

அதேசமயம் தமிழர்கள் தரப்பில் மாற்றத்தைக் கேள்வி கேட்கும் சக்திகளோடு ஏதோ ஒரு தொடர்பைப் பேண அவர்கள் முற்படுகிறார்கள். இந்த அடிப்படையில்தான் அண்மையில் தாயகத்தில் சில மேற்கத்தேய நாடுகளின் தூதுவர்கள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உயர்மட்டத்தைச் சந்தித்திருக்க்கிறார்கள். அதே சமயம் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள இலகுவாகக் கையாளப்படத்தக்க அமைப்புக்களையும் இலங்கை அரசாங்கத்தையும் சந்திக்க வைக்கும் நகர்வுகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படுகின்றன.

மாற்றத்தை கேள்வி கேட்கக் கூடிய தரப்புக்கள் அல்லது தமிழ்த்தேசியத்தின் கடும் போக்காளர்கள் என்று கருதப்படுகின்ற தரப்புக்களில் பெரும்பாலானவர்கள் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலேயே காணப்படுவதாக ஒரு பொதுவான கருத்து உண்டு. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மேற்படி புலம்பெயர்ந்த தரப்புக்களோடு அதிக தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் நம்பப்படுகின்றது. எனவே தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் கூடுதலாக வேலை செய்வதன் மூலம் மாற்றத்தை பலவீனப்படுத்தக் கூடிய தமிழர் தரப்புக்களை தமது கட்டுப்பாட்டு எல்லைக்குள் வைத்திருக்கலாமா என்று மேற்கு நாடுகள் முயன்று வருகின்றன.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சில அமைப்புக்களின் மீதான தடைகளை அகற்றப்போவது பற்றிய உரையாடல்களும் இந்த நகர்வின்பாற்பட்டவைதான் முன்னைய அரசாங்கம் மேற்படி அமைப்புக்களைத் தடை செய்தபோது உரிய சட்ட ஏற்பாடுகளை பூர்த்தி செய்திருக்கவில்லை என்றும் அவற்றைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் மேற்படித் தடைகளில் தளர்வை ஏற்படுத்தலாம் என்றும் கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.



இவ்வாறு தடைகளை அகற்றும் போது புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள மிதவாத சக்திகளை இலங்கை அரசாங்கத்தோடு ஏதோ ஒரு இணக்கத்துக்குக் கொண்டுவரலாம் என்று மேற்குநாடுகள் நம்புகின்றன. அவ்வாறு சில அமைப்புக்கள் அரசாங்கத்தோடு இணக்கத்துக்கு வருமிடத்து அவை தீவிர தேசிய நிலைப்பாடுகளை முற்றாகக் கைவிட வேண்டியிருக்கும். அவ்வாறு அவை தீவிர நிலைப்பாடுகளைக் கைவிடுமிடத்து அரசாங்கம் அதை தனது வெற்றியாகக் காட்டமுடியும். அப்படியொரு நிலைமை வந்தால் அதை மகிந்தராஜபக்ஷ தனக்கு சாதகமாகக் கையாள முடியாமல் இருக்கும் என்று மேற்கு நாடுகள் நம்புகின்றன.

அதோடு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்துக்கும் இடையிலான இடைவெளி கூடும் போது திரும்பிச் செல்லவியலா தாயகத்தின் மீதான அவர்களுடைய பிரிவேக்கமும் அதிகரிக்கும். அப்பிரிவேக்கமே அவர்களுடைய தீவிர நிலைப்பாடுகளுக்கு ஒரு பலமான காரணமாகவும் அமைவதுண்டு.

எனவே புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தோடு இடையூடாடக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் போது பிரிவேக்கத்தின் வேகம் குறைந்து விடும் என்பது பொதுவாக புலம்பெயர்ந்த சமூகங்கள் பற்றிய அவதானிப்பாகக் காணப்படுகின்றது. இவ்வாறு தமிழர்கள் தடைகள் ஏதுமின்றி தாயகத்துக்கு வந்து போவார்களாக இருந்தால் பின்வரும் நன்மையான விளைவுகள் ஏற்படும் என்று மேற்கு நாடுகள் நம்புகின்றன.

விளைவு ஒன்று – அவர்கள் கள தயார்த்தத்தோடு நெருங்கிப் பழகுவார்கள் இது அவர்களிடம் உள்ள தீவிரத்தைக் குறைக்கும். மேலும் தொடர்ந்து தாயகத்துக்கு வந்துபோக வேண்டும் என்ற தவிப்பு அதிகரிக்கும். இதுவும் அவர்களுடைய நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

இரண்டு - புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் முதலீட்டைச் செய்யக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் தாயகத்தின் பொருளாதார வாழ்வு செழிக்கும். உலகளாவிய நுகர்வுப் பண்பாட்டில் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாக ஈழத்தமிழர்களும் இணைக்கப்பட்டு விடுவார்கள். இது காலகதியில் அவர்களுடைய தீவிர நிலைப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

மூன்று - புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்யும் போது சந்தை சார் நலன்களின் அடிப்படையில் அவர்கள் ஏதோ ஒரு வித சுதாகரிப்புக்குத் தயாராவார்கள். இதுவும் அவர்களுடைய தீவிர நிலைப்பாடுகளைத் தணிக்க உதவும்.

நான்கு - இப்போதுள்ள முதலாம் தலைமுறை புலம்பெயரிகளின் மனப்பதிவும் இரண்டாம் தலைமுறை புலம்பெயரிகளின் மனப்பதிவும் வேறுவேறானவை. எனவே நீண்டகால நோக்கில் முதலாவது தலைமுறை வயதாகிச் செல்லும் போது எழுச்சி பெற்றுவரும். இரண்டாம் தலைமுறையைத் தாயகத்துடன் இடை ஊடாட வைப்பதன் மூலம் அவர்களுடைய நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பது.

மேற்கண்ட அனுகூலங்களை முன்வைத்து புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களில் சிலவற்றின் மீதான தடைகளை அகற்ற வேண்டும் என்று மேற்கு நாடுகளும் கருதுவதாகத் தெரிகிறது. இத்தகைய ஒரு பின்னணியிலேயே மேற்படி சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது. அதாவது ஒன்றில் தமிழ் தரப்புக்களை மாற்றத்தின் பங்காளிகளாக்குவது அல்லது மாற்றத்தைக் குழப்பக் கூடிய தமிழ்த் தரப்புக்களைக் கையாள்வது அல்லது தனிமைப்படுத்தி சிறுபான்மையினராக்குவது. அல்லது மாற்றத்திற்கு எதிராக ஓரணியாகத் திகழ முடியாதபடி அவர்களைப் பிரித்துக் கையாள்வது போன்ற ஏதோ ஒரு நோக்குக் கோணத்தில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களைக் கையாள வேண்டிய ஒரு தேவை இப்பொழுது மாற்றத்தின் பாதுகாவலர்களுக்கு வந்துவிட்டது.

ஆனால் இதில் தமிழர்கள் ஆச்சரியப்படவோ அதிர்ச்சியடையவோ எதுவும் கிடையாது. மாற்றத்தின் பின் தமிழர்கள் இதை எதிர்பார்த்திருந்திக்க வேண்டும். மாற்றம் வரையிலும் போர்க்குற்றமே மேற்குநாடுகளின் பிரதான கருவியாகக் காணப்பட்டது. மகிந்தவைக் கவிழ்ப்பதற்கு போர்க்குற்றத்தை முன்னிறுத்தினார்கள். அதற்காக புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களை ஊக்குவித்தார்கள்.

இது தொடர்பாக லண்டனில் வசிக்கும் எனது நண்பர் ஒருவர் ஒருமுறை சொன்னார் "மேற்கு நாடுகள் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அவர்களின் கொள்ளளவை விட கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கின்றன'' என்று. ஒவ்வொரு ஜெனீவாக் கூட்டத்தொடரிலும் இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அவர்களுடைய கொள்ளளவைவிடக் கூடிய முக்கியத்துவத்தைக் கொடுத்து அவர்களைக் கருவிகளாகக் கையாண்டு ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக ஓர் அனைத்துலக அலையைத் தோற்றுவித்து அந்த அரசாங்கததை நெருக்கடிக்கு உள்ளாக்குவதே மேற்குநாடுகளின் உபாயமாக இருந்து வந்துள்ளது. ஆனால் ராஜபக்ஷ கவிழ்க்கப்பட்டபின் அந்தத் தேவை இல்லாமல் போய்விட்டது.

இப்பொழுது மாற்றத்தை பலப்படுத்த வேண்டும். அதைச் செய்வதென்றால் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள பிரதான தளபதியை தனது பிரதானிகளில் ஒருவராகக் கொண்டிருக்கும் இப்போதுள்ள அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். எனவே போர்க்குற்ற விசாரணைகளை ஒன்றில் இழுத்தடிக்க வேண்டும். அல்லது நல்லிணக்கம் என்று சொல்லிக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களை மன்னிக்கும் ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

போர்க்குற்றத்தை ஒரு கருவியாகக் கையாள்வதற்கு புலம்பெயர்ந்த தமிழர்களையே மேற்கு நாடுகள் ஊக்குவித்தன. இப்பொழுது போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் தமக்கு வசதியான ஒரு முடிவை எடுக்க முற்படுகையில் முன்பு தம்மால் ஊக்குவிக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் இப்பொழுது ஒரு பிரச்சினையாக மாறக் கூடாது என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றன.

சக்திமிக்க நாடுகள் இப்படி சிந்திப்பது என்பது இதுதான் முதற்தடவை அல்ல. ஈழத்தமிழர்களின் கடந்த சுமார் நான்கு தாசாப்தகால வரலாற்றில் ஏற்கனவே பல தடவைகள் இவ்வாறு நடந்திருக்கிறது. குறிப்பாக 1987 இல் இந்திய இலங்கை உடன்படிக்கையின் போதும் இவ்வாறுதான் நடந்தது. ஜெயவர்த்தனாவை வழிக்குக் கொண்டு வருவதற்காக ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு ஜெயவர்த்தனா மீது அழுத்தங்களைப் பிரயோகித்த இந்தியாவானது அவர் வழிக்கு வந்ததும் தன்போக்கை மாற்றியது. இப்பொழுது மேற்கு நாடுகளும் அதைத்தான் செய்ய முற்படுகின்றன.

இதில் உள்ள சுவாரஸ்யமான முரண் என்னவென்றால் 28 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்கு விசுவாசமாக இருந்த இரண்டு தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளே இம்முறை இலண்டன் சந்திப்பைக் குறித்து சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார்கள் என்பதுதான். 28 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் இந்திய-இலங்கை உடன்படிக்கையை நியாயப்படுத்தியபோது விடுதலைப் புலிகளின் ஆதவாளர்களால் இவர்கள் விமர்சிக்கப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது முன்பு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் காணப்பட்ட ஓர் அமைப்பு மேற்கின் நிகழ்ச்சி நிரலின் பின்னோடி அரசாங்கத்தோடு ஒரு சந்திப்பை ஏற்படுத்தியதற்காக இந்த இரண்டு அரசியல்வாதிகளும் அந்த அமைப்பை விமர்சிக்கிறார்கள். இங்கு தமிழர்களுக்கு ஒரு செய்தி உண்டு.

28 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் விசுவாசிகளாகப் பார்க்கப்பட்டவர்கள் இப்பொழுது மேற்கின் விசுவாசிகளை அம்பலப்படுத்துகிறார்கள். 28 ஆண்டுகளுக்கு முன் தீவிர தேசியவாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர்கள் இப்பொழுதும் தீவிர தேசிய வாதிகளாகக் காட்சியளிக்கிறார்கள். 28 ஆண்டுகளுக்குள் நிகழ்ந்த மாற்றம் இது. ஆனால் தமிழர்கள் தொடர்பில் சக்திமிக்க வெளிநாடுகளின் நோக்கு நிலைகளில் மாற்றம் எதுவும் ஏற்பட்டுள்ளதா? இல்லை என்பதே மிகக் கொடுமையான உண்மையாகும்.

இந்தியாவும் சரி மேற்கு நாடுகளும் சரி இலங்கை அரசாங்கத்தையே கையாள முற்படுகின்றன. அரசுக்கும் அரசுக்கு இடையிலான கட்டமைக்கப்பட்ட உறவுகளுக் கூடாக இலங்கை அரசைக் கையாள்வதற்கே அவர்கள் முன்னுரிமை கொடுக்கிறார்கள் பணியாத அரசாங்கத்தைப் பணிய வைப்பதற்கு சில சமயங்களில் அரசற்ற தரப்பான தமிழர்களைக் கருவிகளாகக் கையாண்டு வருகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சில அமைப்புக்களை சக்திமிக்க நாடுகளும் அவற்றின் முகவர் அமைப்புக்களும் கையாள முடிகிறது என்று சொன்னால் அவ்வாறு கையாள முடியாத தரப்புக்கள் ஓரணியாகத் திரண்டு தமிழ் மக்களின் சரியான பிரதிநிதிகள் தாங்களே என்று ஏன் நிரூபிக்க முடியாமல் போயிற்று? புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஆகக் கூடியபட்சம் பெரும்பாலானவர்களால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஜனவசியம்மிக்க ஒரு தலைமைத்துவமோ அல்லது செயற்திறன்மிக்க அமைப்போ கிடையாது.

தாயகத்தில் மக்களாணையைப் பெற்ற கூட்டமைப்பும் அவ்வாறான ஒரு தலைமைத்துவத்தை வழங்கப் போவதில்லை. அது அவர்களுடைய நிகழ்ச்சி நிரலே அல்ல சொல்ஹெய்ம் ஒருமுறை தனது ருவிட்டர் தளத்தில் தமிழ் டயஸ்போறாவை "உலகின் சக்திமிக்க டயஸ்போறாக்களில் ஒன்று" என்று வர்ணித்திருந்தார். ஆனால் லண்டன் சந்திப்பையும் அதன் பின்னரான புலம்யெர்ந்த தமிழர்களின் செயற்பாடுகளையும் வைத்துப் பார்த்தால் அப்படியா தெரிகிறது?

**நிலாந்தன்**

www.tamilkingdom.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## பட்டித்திடலில் விளையாட்டுப்போட்டி - TNPF ஆதரவு

பட்டித்திடல் மற்றும் கிளிவெட்டி தங்கநகர் விளையாட்டுக் கழகத்திற்கும் தேசிய மக்கள் முன்னணியினரால் விளையாட்டு உபகரணங்களும் வெற்றிக் கிண்ணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இன்று பட்டித்திடலில் நடைபெற-விருக்கின்ற கிரிக்கட் விளையாட்டுப் போட்டிக்காகவே இவ் ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் இன்று நடைபெறவுள்ள இப் போட்டிகளில் பிரதம அதிதிகளாக தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# விளையாட்டு முரசு

## தேசிய இறுதி உதைப்பந்தாட்ட போட்டி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதைபந்தாட்ட தேசிய இறுதி விளையாட்டுப் போட்டி ஞாயிற்றுக்கிழமை மகரகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட இளைஞர் கழகம் திருகோணமலை மாவட்ட இளைஞர் கழகம் ஆகிய அணியினருக்கிடையே நடைபெற்ற இறுதிப் போட்டியின் போது இவ்விரு அணியினரும் சமநிலையை அடைந்ததினால் பெனால்ட்டி முறையில் தெரிவு இடம்பெற்றது. 4 க்கு 2 என்ற கோல் வித்தியாசத்தில் திருகோணமலை மாவட்ட ஜமாளியா இளைஞர் கழகம் வெற்றியீட்டி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதைபந்தாட்ட தேசிய வீரர்களாகத் தெரிவு செய்யப்-பட்டனர்.

– சேனையூர் நிரூபர்–



## ஆணழகன் போட்டி

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட "மிஸ்டர் ஈஸ்ரன்" ஆணழகன் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். இந்த போட்டியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த பெருமளவான வீரர்கள் கலந்துகொண்டனர்.



இதனடிப்படையில் இறுதிப்போட்டியில் முதல் இடத்தினை மட்டக்களப்பினை சேர்ந்த எஸ்.சியாம்குமார் பெற்றுக் கொண்டதுடன் இரண்டாம் இடத்தினை அம்பாறை மாவட்டத்தினை சேர்ந்த எம்.சி.எம்.அஸ்மீர் பெற்றுக் கொண்டதுடன் மூன்றாம் இடத்தினை மட்டக்களப்பினை சேர்ந்த எஸ்.புவனசிங்கம் பெற்றுக் கொண்டார். இறுதி பரிசு வழங்கல் நிகழ்வு கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் கே.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

## மென்பந்து கிரிக்கட் போட்டி – ஏ.ஐ.ஏ நிறுவனத்தினருக்கான

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து ஏ.ஐ.ஏ நிறுனத்தின-ருக்கான பத்து ஓவர்கள் கொண்ட 11 பேருடனான மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட் அணிகளுக்கிடையே இடம்-பெற்றது. இப்போட்டியில் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, கந்தளாய், வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி ஆகிய கிளையினைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டி 13.06.2015 அன்று வாழைச்சேனையிலுள்ள கோரகல்விமடு வித்தியாலயத்தின் மைதானத்தில் இடம்-பெற்றது.

இப்போட்டியில் திருகோணமலை அணியினர் சம்பியனாகவும் கல்முனை அணியினர் இரண்டாமிடத்திலும் தெரிவு செய்யப்பட்டனர்.



## மட்டக்களப்பு அணியினர் – சாம்பியன்

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மல்யுத்தம் மற்றும் தேக்வொன்டோ மற்றும் கிரிக்கட் பெண்கள் சுற்றுப்போட்டிகளில் மட்டக்களப்பு அணிகள் இந்த ஆண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்-பட்டுள்ளது. தேக்வொன்டோ கராத்தேயில் பெண்கள் மற்றும் ஆண்கள் பிரிவுகள் இரண்டும் கிழக்கு மாகாண சம்பியனாகவும் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் அணி மாகாண சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



## சிக்கலில் மாட்டிக் கொண்ட சச்சின்

கிரிக்கெட்டில் பல சாதனையை படைத்ததற்காக சச்சின் டெண்டுல்கருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இதன் மூலம் இந்த விருதை பெற்ற முதல் விளையாட்டு வீரர் என்ற பெருமையை பெற்றார். பாரத ரத்னா விருது பெற்றவர்கள் அதை தங்களது தனிப்பட்ட விளம்பரத்துக்காக பயன்படுத்தக் கூடாது என்ற நிலையில், சச்சின் தன்னுடைய விளம்பரப்படத்தில் அதை பயன்படுத்தியதாக வழக்கு போடப்பட்டுள்ளது.



## முப்பாய்ச்சல் போட்டியில் சாதனை முறியடிப்பு

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் ஆரம்பமான 85ஆவது சேர் ஜொன் டார்பட் சிரேஷ்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் நீர்கொழும்பு நியஸ்டெட் கல்லூரி-யைச் சேர்ந்த விதூஷா லக் ஷானி 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான முப்பாய்ச்சலில் தனது சொந்த சாதனையை முறியடித்தார். கடந்த வருடம் நடைபெற்ற 84ஆவது அத்தியாயத்தில் 12.50 மீற்றர் தூரம் பாய்ந்து நிலைநாட்டிய தனது சொந்த சாதனையை லக்ஷானி இம் முறை 13.05மீற்றர் தூரம் பாய்ந்து முறியடித்தார். 16, 18, 20ஆகிய வயதுகளுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்தப்படும் இப் போட்டிகளில 3000க்கும் மேற்பட்ட பாடசாலை வீரர், வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.



## டோனி புலம்பல்

வங்கதேச அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயல்படவில்லை என இந்திய அணித்தலைவர் டோனி குற்றம் சாட்டியுள்ளார். இந்தப் போட்டியில் வங்கதேசத்தின் இமாலய இலக்கை எட்ட முடியாமல் தவித்த இந்திய அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களது பணியை சரியாக செய்யவில்லை. சுழற்பந்து வீச்சாளர்கள் நன்றாக வீசினர் என்று கூறியுள்ளார்.

## வித்தியாசமான ஷாட்

இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரர் டில்ஷான் டில்ஸ்கூப் எனப்படும் வித்தியாசமான ஷாட்டை அடிப்பதில் அனுபவம் பெற்றவர். இவர் தற்போது இங்கிலாந்தின் நாட்வெஸ்ட் டி20 தொடரில் விளையாடி வருகிறார். இதுகுறித்து கேட்டதற்கு பதிலளித்த டில்ஷான், 2009ம் ஆண்டு நான் தலைக்கு பின்பக்கம் நேராக சிக்சர் அடிக்க வேண்டும் என முயற்சி செய்யும் போது நன்றாகவே கைகொடுத்தது என்று கூறியுள்ளார்.

## விக்கட் காப்பாளரான விராட்

இந்தியா பங்களாதேஷ் அணிகளுக்-கிடையிலான முதல் ஒருநாள் போட்டி மிர்பூரில் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய பங்களாதேஷ் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தது. இப்போட்டியில் துணை கப்டன் விராட்கோஹ்லி விக்கெட் காப்பாளராக களமிறங்கினார். அப்போது கால்காப்புமட்டை கட்டிக்கொள்ளாமல் கையுறையுடன் விக்கெட் காப்பாளராக செயல்பட்டு, பந்து தன்னைக் கடந்து செல்லவிடாமல் மடக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா மீள்குடியேற்றம்-தமிழர் பாரம்பரியப் பிரதேசங்கள் சூறையாடப்படும் என அச்சம்!!!



புதிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும் மீள்குடியமர்த்தும் வேலைத் திட்டத்தின் கீழ் நூற்றியிருபத்தியிரண்டு குடும்பங்களைக் கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்டல்காடு, தளவாய் கிராமங்களில் குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இக்குடியேற்ற நடவடிக்கையானது உரிய முறையில், சரியான ஆதரங்களுடன் நிகழ்த்தப்படாவிட்டால் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் சிலவும் சூறையாடப்படும் அபாயம் இருப்பதாக அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தினால் மீள்குடியேற அனுமதி மறுக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தற்போதைய அரசு வழங்கிய அனுமதியை அடுத்து இடம்பெயர்ந்தவர்களைக் குடியேற....

21

# 600 காவல்துறையினரின் கொலை முரளீதரனிடம் விசாரணை

## ஓய்வுபெற்ற காவல்துறைச்சங்கம் அழுத்தம்



ஓய்வு பெற்ற காவல்துறையினரின் சங்கம் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட அறுநூறு காவல்துறையினரின் நிலையை அறிந்துகொள்வதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியதை அடுத்து முன்னாள் அமைச்சர் விசாரணை முரளீதரன் விசாரணைக்கு முகம்கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

காணாமற்போனோரைக் கண்டறியும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னாள் பிரதி அமைச்சரும் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் கிழக்குத் தளபதியுமான கருணா என்ற வி.முரளிதரனிடம் விசாரணை நடத்த தீர்மானித்துள்ளது.

1990ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் 600 காவல் துறையினர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து

21

## அடையாள அட்டைக்கு வயது 15



பதினைந்து வயது முதல் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பதினெட்டு வயதை பூர்த்தி செய்தவர்களுக்கே தற்போது தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

இந்த நடைமுறையில் மாற்றம் செய்து 15 வயது முதல் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.....

21

## 6000 கிலோ தங்கம் தேடியவர்கள் கைது

திருகோணமலை தோப்பூர் பகுதியில் தங்கம் பெறும் நோக்கில் நிலத்தை தோண்டிய சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16ம்திகதியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் துப்புத் தகவலொன்றை அடிப்படையாகக் கொண்டு காவல் துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைதானதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளனர் என திருகோணமலை காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

6 ஆயிரம் கிலோ தங்கம் புதைத்து வைக்கப் பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே தாம் இந்த அகழ்வு நடவடிக்கையை முன்னெடுத்ததாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனராம்.

குறித்த சந்தேக நபர்கள் நால்வரும் பெக்கோ இயந்திரத்தை பயன்படுத்தியே இந்நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர்.

## தியாகிகள் தினத்தில் பத்மநாபாவின் உருவச்சிலை திறப்பு



ஈழவிடுதலைப் போராட்டத்தில் உயிர்த் நீத்த ஈபிஆர்எல்எவ் போராளிகளை நினைவு கூறும் தியாகிகள் தினத்தில் அவ்வியக்கத்தின் தலைவர் தோழர் பத்மநாபா அவர்களின் உருவச்சிலையொன்று திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அமைப்பாளர் சத்தியனின் தலைமையில் தில்லைமுகிலன் அவர்களின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு 19ம் திகதி நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வறியவர்களுக்கு கண்சிகிச்சையும் கண்ணாடியும் இங்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாணவன் சாருகேக்ஷ் வெற்றிகளைக் குவித்துள்ளார்



தி/புனித சூசையப்பர் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் லவக்குமார் சாருகேஷ் CSSL, E-Soft Metro Campus, Rupavahini ஆகியவற்றால் அகில இலங்கை ரீதியில் நாவல திறந்த பல்கலைகழகத்தில் நடாத்தப்பட்ட IT Master Mind வினாடி வினாப் போட்டியில் பங்குபற்றி முதலாவது சுற்றில் முதலாம் இடத்தைப் பெற்று ரூபா 5000

21


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738



சைவத் தமிழ் சமாதான நீதவான்களுக்கு அழைப்பு

தமிழ் மற்றும் சைவசமயம் சார்ந்த சமூகப்பணி ஒன்றினை முன்னெடுக்கும் பொது வேலைத்திட்டம் ஒன்றிற்காக திருமலை வாழ் சைவத்தமிழ் சமாதான நீதவான்களை ஒன்றிணைத்து ஓர் அமைப்பினை ஏற்படுத்தியுள்ளோம். ஆர்வமுள்ள சைவத்தமிழ் சமாதான நீதவான்கள் தொடர்பு கொள்ளவும் அல்லது விபரங்களை SmS மூலம் அனுப்பவும்.

(பெயர். முகவரி. தொடர்பு இலக்கம்)

பொ.ஜெயஸ்கரன் (JP)
தொடர்புகளுக்கு 077-7038058
email-jeyasharan@gmail.com

விளம்பரம்


இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 20.06.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org